
கல்கி




KALKI 17.5.1964 30





PONDS



பனாமா
இழுக்க இழுக்க
இன்பம்
இறுதிவரை




கல்கி பொருளடக்கம்


குரோதி, வைகாசி 4 ★ மே 17



மூஷிகர்: மத்திய மந்திரிகளின் அறைகளை 'ஏர்கண்டிஷன்' செய்ய இரண்டு வருஷங்களில் அரைக் கோடி ரூபாய் செலவாயிற்று. விலைவாசி உயர்வாலும் வரிச் சுமையாலும் அவதிப்படும் ஸ்ரீமான் பொதுஜனத்தின் நெஞ்சம் இதைக் கேட்டுக் குளிராது.

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


இந்த முள்ளை எடுப்பீர்களா?
இந்தியாவுடன் இணைப்பு


தோல்வி
17-வது திருத்தம்
அடிபட்ட புலி



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 42

கட்சி அங்கத்தினரின் சுதந்திரம்

ராஜாஜி

“ஆட்சிமொழி விஷயத்தில் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் யாவரும் ஏகோபித்து இருக்கவில்லை; இப்போது காச்மீரப் பிரச்னையிலும் அவர்களிடம் ஏகோபித்த கருத்து இல்லையே” என்று சிலர் கேட்கிறார்கள்; கேலியும் செய்கிறார்கள். இவ்விஷயமாகச் சில அம்சங்களை இங்கு விளக்குகிறேன்.

எந்தக் கட்சியிலும் ஓர் இயக்கம் கூட கலந்து நிற்கிறது. சுதந்திரக் கட்சியை ஓர் அரசியல் கட்சி என்று சொல்வதைவிட அரசியல் இயக்கம் என்று சொல்லுவதே பொருத்தமாக இருக்கும். ஐந்தாண்டுகளுக்குமுன் சுதந்திரக் கட்சி ஸ்தாபிதமானபோது தான் இந்த இயக்கம் பிறந்தது என்று சொல்வதற்கில்லை. 1948ம் ஆண்டு இந்திய அரசியல் சாஸனத்தை உருவாக்கும்போதே இந்த இயக்கம் தோன்றி விட்டது எனலாம். ‘சர்க்காரின் அதிகார வரம்பைக் குறைக்க வேண்டும்; மக்களின் சுதந்திரத்தைச் சர்க்கார் சர்வாதிபத்தியம் பாதிக்காமல் காப்பாற்ற வேண்டும்’ என்ற நோக்கத்துடன்தான் ஸ்ரீ முன்ஷி அவர்களும், மற்ற அரசியல் சாஸனகர்த்தர்களும் அதன் மூன்றும் பாகத்தை இயற்றினார்கள். இவ்வாறு சாஸனத்தின் மூலம் சர்க்கார் தலையீட்டிலிருந்து மக்களுக்குக் காப்புப் பெற்றுத் தருவதற்கு அவசியம் உண்டா என்று கூட அப்போது பலர் எண்ணினேம். ஆனால் முன்ஷி அவர்களும் மற்றவர்களும் சர்க்காரின் அதிகாரம் எப்படியெல்லாம் பெருகக்கூடும் என்று அப்போதே பயந்து, மக்களின் ஜீவாதார உரிமைகளை முன்யோசனையுடன் நிர்ணயித்து, அவற்றுக்கு அரசியல் சாஸனத்திலேயே காப்புப் பெற்றுத் தந்தனர்.

அதன்பின் — முக்கியமாக 1954ம் ஆண்டுக்குப் பின் — எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன. ‘முன்னேற்றமடைந்த’ நாடுகளிடையே இந்தியாவும் இடம் பெற வேண்டும் என்ற ஆசையில் இயந்திரத் தொழில்களைப் பெருக்க முனைந்த சர்க்காரானது சோஷலிஸக் கொள்கையைத் தழுவியது. சர்க்காரே தேசத்தின் ஏகபோகத் தனி முதலாளி ஆவதுதான் ஸோஷலிஸம். எனவே தனி மனிதருக்குச் சாஸனம் அளித்திருந்த சுதந்திரங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகச் சிதைக்கப்பட்டன. பெர்மிட், லைசென்ஸ், கோட்டா வழங்குவதில் காங்கிரஸ் கட்சிக்கு விசேஷ லாபம் கிடைத்ததால் இந்தத் தீய முறை வலுப்பெற்றது. சர்க்கார் சர்வாதிபத்தியம் அதிவேகமாகப் பெருகத் தொடங்கி விட்டது. இதைக் கண்டுதான் காங்கிரஸ் கட்சியின் ஏகாதிபத்தியப் போக்கைத் தடுத்து நிறுத்த சுதந்திரக் கட்சி அமைக்கப்பட்டது.

சர்வாதிகாரத்தைத் தடுப்பதே சுதந்திரக் கட்சியின் மையமான நோக்கம். ஜனநாயகம் நல்லமுறையில் நிலைத்து மக்களின் நன்மை கவனிக்கப்பட வேண்டுமானால் அபிப்பிராய சுதந்திரத்தைக் கட்சிகள் தடுக்கலாகாது. எனவே கட்சிக்குள்ளே சுதந்திரத்தை அழிப்பது தவறு என்ற கொள்கையின்மீது, அடிப்படைக் கொள்கைகள் தவிர மற்றவற்றில் கட்சி அங்கத்தினர்களின் சுதந்திரத்தைச் சுதந்திரக் கட்சி அநுமதித்தது. ‘சுதந்திரக் கட்சியே ஆட்சிக்கு வந்தாலும்கூட அதன் அங்கத்தினர்கள் சுயநலத்தைக் கருதாமல் பெர்மிட்–லைசென்ஸ் ஆட்சியைக் கைவிட வேண்டும்; சர்க்கார் அதிகாரத்தை இயன்ற அளவு குறைத்து, மக்களின் சுதந்திரத்தை இயன்ற அளவு அதிகரிக்க வேண்டும்’

என்ற முக்கியமான கொள்கை தவிர மற்ற விஷயங்களில் கட்சி அங்கத்தினர்கள் தங்கள் கருத்துப்படி நடக்க அநுமதி பெற்றுள்ளனர். கட்சிக் கட்டுப்பாடு, ஸ்தாபனத்தின் பலம் என்ற காரணங்களைச் சொல்லி அங்கத்தினர்களின் சுயேச்சையான கருத்தைத் தகர்க்கச் சுதந்திரக் கட்சி விரும்பவில்லை. தனி மனிதர்களை அழித்துச் சர்க்காரின் அதிகாரத்தைப் பெருக்கக்கூடாது என்பது போலவே, கட்சி அங்கத்தினர்களின் சுயேச்சையை மறுத்து நிர்ப்பந்தம் செய்வதன் மூலம் கட்சியைப் பலப்படுத்தக் கூடாது என்பது அதன் கருத்து. இந்த உண்மையான ஜனநாயக ஏற்பாடு அரசியலுக்குப் புதியது. எனவே இதைச் சிலர் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால் சுதந்திரக் கட்சி தனது அங்கத்தினர்களுக்கு அளிக்கும் சுதந்திரம்தான் உண்மையான ஜனநாயக அரசியல். கட்சிக் கொறடாவின் சொல்படி பட்டியில் ஆடுகள் புகுவதுபோல் அங்கத்தினர் யாவரும் சிப்பாய் கவாத்து செய்வது எப்படி ஜனநாயகமாகும்? இதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆட்சி மொழி விஷயமோ, பாகிஸ்தான் பிரச்னையோ எந்த அரசியல் கொள்கைக்கும் சம்பந்தப்பட்டவை யல்ல. எனவே நாடு முழுவதிலுமே இப்பிரச்னைகளில் நானாவிதமானகருத்துக்கள் இருக்கும். இவற்றை யெல்லாம் கட்சியின் நிர்ப்பந்தத்தால் ஒரே போக்கில் அமைப்பது சரியாகுமா? சர்க்கார் யதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் இயக்கமாகத்தான் சுதந்திரக் கட்சி அமைக்கப்பட்டது. ஆட்சி மொழி, காச்மீரம், இந்தியா — பாகிஸ்தான் தொடர்பு ஆகிய பிரச்னைகளில் குறிப்பிட்ட ஒரு கருத்தைப் பின்பற்றும் மக்களுக்காகச் சுதந்திரக் கட்சி அமைக்கப்படவில்லை. எனவே, ஜனநாயக தருமப்படி தனது அங்கத்தினர்களை அது இவ்விஷயங்களில் பலவந்தப்படுத்துவதற்கில்லை. விஷயங்களை விளக்கி நல்லுரை கூறுவது மட்டுமே கட்சித் தலைவரின் பொறுப்பு; கவாத்து நடத்துவது அல்ல; மகத்தான தேசியப் பிரச்னைகளில் சுதந்திரச் சிந்தனையைச் சிதைக்கும் விதத்தில் 'கட்சிக் கட்டுப்பாட்டை'ப் பிரயோகிப்பது குற்றமாகும்; நாட்டுக்குச் செய்யும் தீங்காகும்.

கட்சி அங்கத்தினரின் சுதந்திரம் இன்று சிலருக்குச் சிரிப்பாக இருக்கலாம். ஆனால் காலப் போக்கில் உண்மையை உணருவார்கள். பத்தொன்பதாவது திருத்தமானாலும், இந்தியா — பாகிஸ்தான் விவகாரமானாலும் நிர்ப்பந்தத்தின் மீது கட்சிக் கொள்கையை நிலைநாட்டுவது அதருமம் என்று உணருவார்கள். சுதந்திரக் கட்சி தனது அங்கத்தினர்களுக்குத் தரும் சுதந்திரம் உண்மையான ஜனநாயகம் தழைக்க உதவும் விவேகமான அரசியல் என்று உணருவார்கள்.


கட்சிக் கட்டுப்பாடு மூலமே கொள்கைகளை நிலைநாட்டுவது ஜனநாயகமல்ல; குடியரசில் மக்களுக்கு அதிகாரம் தரும் முறையல்ல. சத்தியத்தை விடக் கட்சி பலத்திலேயே கருத்துள்ள ஒரு சில கட்சி எஜமானர்கள் மட்டுமே யதேச்சாதிகார ஆட்சி நடத்தும் முறைதான் அது.

என்ன சேதி?

நல்ல ஆரம்பம்

புதிய கவர்னராக ஜயசாமராஜ உடையவர் தாம் சம்பளம் வாங்கிக் கொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். அதுமட்டுமல்ல. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் கோபுரத்தில் மின்சார விளக்குப் போட ஒரு லட்ச ரூபாயும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித் துறைக்கு ஒரு லட்சமும் நன்கொடை வழங்கி யிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

சென்னை கவர்னராகப் பதவி ஏற்ற அன்று மைசூர் மன்னர் ஜயசாமராஜ உடையவர் அவர்கள் ''தர்மம் தலை காக்கும்'' என்று தமிழ் மக்களுக்குச் செய்தி விடுத்தார். அதை அவரே செயலிலும் கடைப்பிடித்துக் காண்பித்துவிட்டார். அவரது பதவிக் காலத்தில் தமிழகத்தில் தர்மமும், பண்பும், பக்தியும் பெருக்கெடுத்து ஓடும் என்ற சுபசூசகம் காண்கிறது. 'பாரதப் பண்பை மதிக்கத் தெரிந்தவர்கள் ஆட்சி பீடத்திலில்லையே! ஏதோ, அந்நிய நாட்டிலிருந்து படை எடுத்து வந்தவர்கள் ராஜ்யபாரம் செய்வது போலல்லவா இருக்கிறது?' என்று ராஜாஜி அடிக்கடி விசனித்து எழுதுவதுண்டு. இந்தச் சூழ்நிலையில், செயலாற்றும் அதிகாரமில்லாவிடினும், ஆட்சித் தலைவர் என்ற பெயருடன் விளங்கும் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், மைசூர் மன்னர் போன்றவர்கள் நம் மரபில் ஈடுபாடு கொண்டிருப்பது நம் அதிருஷ்டம்.

மைசூர் மன்னர் ஸ்ரீ ஜயசாமராஜ உடையவர் அவர்கள் தமிழ்நாட்டின் கவர்னராகிச் சென்னைக்கு வந்தபோது மாநில முதன்மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்கள் புது கவர்னருக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

சென்ற வாரம் 'கல்கி' பூங்காவில் ராஜாஜியை ஷேக் அப்துல்லா அவர்கள் சந்தித்து நீண்ட நேரம் பல பிரச்னைகளை விவாதித்தார்.

ஆபத்து அதிகரிக்கிறது

சர்வகலாசாலை போதனை மொழி ஆங்கிலமா, தமிழா என்பது பற்றிக் குழப்பம் ஏற்பட்டுள்ள சமயம் பார்த்துச் சந்தையில் சமாராதனையாக ஹிந்தியைப் புகுத்தப் பார்க்கிறார் மத்திய கல்வி மந்திரி சாக்லா அவர்கள். தென்னிந்தியாவில் ஹிந்தி சர்வ கலாசாலை நிறுவுவதற்குச் சகல விதமான ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அவர் முன்வந்திருக்கிறார். இதைப் பார்க்கும் போது, மாநிலங்களின் கருத்துக்கு மீறி, ஹிந்திக்கு முக்கியமான இடமளிக்க வேண்டுமென்பதற்காகவே கல்வித் துறையில் மத்திய சர்க்காரின் அதிகாரத்தை வலுவாக்கத் தில்லி விரும்புகிறதோ என்று தோன்றுகிறது.

ஆட்சி மொழி, அரசாங்க ஊழியர்களின் பரீட்சை மொழி, சர்வகலாசாலை போதனை மொழி என்பதாக ஹிந்தி நாள்தோறும் புது அந்தஸ்துக்களைப் பெற்றுப் பூதாகாரமாக வளர்ந்து வருகிறது. இனியும் அயர்ந்திருந்தோமானால் தமிழகம் ஹிந்தி வெறியரின் அடிமையாக வேண்டியதுதான்!

இதுவா பொதுநல சர்க்கார்?

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகப்படியான கிராக்கிப் படியும், சில கல்விச் சலுகைகளும் அளிக்கச் சர்க்கார் தீர்மானித்துள்ளது. கிராக்கிப் படி உயர்வின் காரணமாக மூன்று லட்சம் ஊழியர்கள் பயனடைவார்கள். ஒவ்வொருவரும் அடையும் பயன் மூன்றரை ரூபாயிலிருந்து பதினைந்து ரூபாய்க்குள்தான் இருக்கும். இன்று ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வில் இந்தக் கிராக்கிப் படி எந்த மூலைக்குக் காணும்? ஆகவே கணிசமான படி உயர்வு கிடைக்குமென நம்பி வந்த மத்திய சர்க்கார் ஊழியர்கள் திருப்தியடைவதற்குப் பதில் அதிருப்தியே அடைவார்களோ என்று தோன்றுகிறது. இப் புதுச் சலுகைகளால் மத்திய சர்க்காருக்கு 18.3 கோடி ரூபாய் அதிகப்படியாகச் செலவாகப் போகிறது. அதாவது அந்த அளவுக்கு நாட்டில் பணப் புழக்கத்தை — அச்சடித்த காகித நோட்டை — வெளியே விடப்போகின்றனர். போதிய நெல் உற்பத்தியும், கோதுமை உற்பத்தியும் இல்லாத நிலையில் இக் காகிதப் பணமானது இப்போதுள்ள கொஞ்சநஞ்ச உணவுப் பொருள்களின் விலையையும் உயர்த்தத்தான் உதவும்.

ஆகவே மத்திய சர்க்கார் ஊழியர்கள் அதிக வருமானம் பெற்றும் அதன் பயனை அடைய முடியாத நிலையிலிருப்பார்கள். அவர்களைத் தவிர்த்து நாட்டில் வயல்களிலும் வரப்புகளிலும் கிராமத் தொழில்களிலும் வேலை செய்து வாழும் கோடானு கோடி மக்கள் ஏற்கனவே உயர்ந்துள்ள விலைவாசி இன்னும் கணிசமாக உயர்வதால் அவதிப்படப் போகிறார்கள்.

ம. பொ. சி. யின் கருத்து

சென்னையில் ஹோட்டல் தொழிலாளர் மகாநாட்டில் ம. பொ. சி. பின்வருமாறு பேசியிருக்கிறார்:

‘‘அரசாங்கத்தைப் பற்றி நான் குறை கூறிப் பேசினால் உடனே ‘ம. பொ. சி. தி. மு. க. ஆதரவாளனாகிவிட்டான்’ என்று பழி சுமத்தி விடுகிறார்கள்.

ராஜாஜி அரசாங்கத்தைக் குறைகூறினால் முதலாளிகளுக்கு ஆதரவாகப் பேசுகிறார் என்கிறார்கள். முஸ்லிம் லீக் பேசினால் 'பாகிஸ்தான் புத்தி' என்கிறார்கள். பின் யார்தான் பேசுவது? இப்படி நடந்தால் எந்த எதிர்க் கட்சி எப்படி வளரும்? அசோக மேதாவும் பட்டம் தாணுப் பிள்ளையும் என்ன ஆனார்கள்?

"இங்கே தி. மு. கழகம் ஆட்சிக்கு வரக்கூடாது என்கிறார்கள். கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்ததே. அதை நடக்க விட்டார்களா? குமரிமுதல் இமயம் வரை காங்கிரஸ்காரர்கள் ஒழுங் கில்லை. எதிர்க் கட்சியையும் வளர விடுவதில்லை. கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் தாங்களே ஆட்சி நடத்தலாம் என்று நினைக்கிறார்கள்."

இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியாளரின் மனப் போக்கை மிகத் தெளிவாகக் கூறிவிட்டார் ம. பொ. சி.

தமிழரின் வெற்றி!

கொழும்பு ஜில்லா நீதிபதி திரு ஓ. எல். டி. கிரட்ஸர் சர்க்கார் ஊழியர் பரீட்சை மொழி வழக்கில் அளித்துள்ள தீர்ப்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை விளைவித்திருக்கிறது. இந்த வழக்கைத் திரு கோடீசுவரன் என்ற அரசாங்கக் குமாஸ்தா அரசாங்கத்தின் மீது தொடர்ந்திருந்தார். 1956ம் ஆண்டில் இலங்கைப் பார்லிமெண்ட் சபை இயற்றிய உத்தியோக மொழிச் சட்டத்தின்படி அரசாங்கக் குமாஸ்தாக்கள் அனைவரும் சிங்களமொழியைக் கற்றுப் பரீட்சையில் தேறவேண்டும் என்றும் அப்படித் தேறத் தவறியவர்களுக்கு அவர்களுடைய வருடாந்தர சம்பள உயர்வும் பதவி உயர்வும் நிறுத்தி வைக்கப்படுமென்றும் நிதி இலாகா உத்தரவிட்டிருந்தது. சரித்திர காலத்துக்கு முன்பிருந்து இலங்கையில் வழக்கிலிருந்து வரும் தமிழ் மொழியை இவ்வாறு ஒதுக்கிச் சிங்கள மொழியை மாத்திரம் உத்தியோக மொழியாக்கியதைத் தமிழ் மக்கள் கடுமையாக ஆட்சேபித்ததுடன் சிங்கள மொழியைப் படிக்கவும் மறுத்து வருகிறார்கள். சுமார் 4000 அரசாங்கக் குமாஸ்தாக்கள் சிங்கள மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற மறுத்ததனையால் அவர்களுடைய வருடாந்தர சம்பள உயர்வை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவை ஆட்சேபித்து திரு கோடீசுவரன் அரசாங்கத்தின் மீது ஜில்லாக் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்.

தாம் ஆங்கில மொழியில் அரசாங்கப் பரீட்சை எழுதி உத்தியோகம் பெற்றபடியால், இடையில் சிங்களத்தைப் புகுத்திச் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றால்தான் சம்பள உயர்வு உண்டு என நிபந்தனை போடுவது தம்முடைய நியமன ஒப்பந்தத்துக்கு மாறானதென்பது அவரது ஒரு வாதம். இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29 (2)வது விதிப்படி மற்ற வகுப்பாருக்கு இல்லாத சலுகைகளைக் குறிப்பிட்டஒரு வகுப்பாருக்கு அளிக்கக்கூடிய வகையிலோ அல்லது மற்ற வகுப்பார்களுக்கு இல்லாத இடைஞ்சல்களை ஒரு வகுப்பாருக்கு ஏற்படுத்தும் வகையிலோ சட்டமியற்றும் அதிகாரம் பார்லிமெண்டுக்குக் கிடையாதென்பது அவர் தரப்பு வாதம். சிறுபான்மை வகுப்புகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் இந்த ஷரத்து அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து வருகிறது. சிங்களத்தை ஆட்சி மொழியாக்கியது மற்ற வகுப்பார்களுக்கு இல்லாத ஓர் இடைஞ்சலைத் தமிழ்மக்களுக்கு ஏற்படுத்துமென்று திரு கோடீசுவரன் தரப்பில் வாதிக்கப்பட்டது. இந்த வாதத்தின் நியாயத்தை மறுப்பதற்கில்லை என்பதை நீதிபதி பல காரணங்களைச் சுட்டிக் காட்டித் தமது தீர்ப்பை அளித்தார். திரு கோடீசுவரனின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது தவறானதென்றும் அவருக்கு வழக்குச் செலவை அரசாங்கம் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.


தனிச் சிங்களச் சட்டம் அரசியல் சாஸனத்துக்கு மாறானதென்று நீதிபதி தெளிவாகச் சொல்லவில்லையென்பது உண்மை. எனினும் தனிச் சிங்களச் சட்டத்தின்படி திரு கோடீசுவரனின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது தவறு என்று அவர் தெளிவாகக் கூறியுள்ள படியினால் அரசாங்கத்துக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமை உருவாகியிருக்கிறது. இதற்கிடையில் சிங்களம் படிக்காத காரணத்துக்காக அநேகருக்கு அரசாங்கம் கட்டாய வேலை நீக்க நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

இதன் விளைவு என்னவாயிருக்கும் என்று சொல்ல இயலாது. எனினும், திரு கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பின் முடிவாக, மொழியை முன் வைத்து அரசாங்க உத்தியோகத்தில் பாரபட்சம் காட்ட முடியாத ஒரு நல்ல நிலை உருவானாலும் உருவாக ஒரு வாய்ப்பு இருக்கிறது. அல்லது சட்டத்தின் கருத்தை நீத்து எழுத்தில் புகுந்து புறப்படும் தகிடுதத்தங்களும் நடக்கலாம்.

இச்சமயத்தில் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிலுள்ள தமிழர்களை எண்ணிப் பார்க்கிறார்கள். இவ்வளவு நாட்களாக இந்தியத் தமிழர்கள் ஈழத் தமிழருக்கு அநுதாபம் காட்டினாரெனில், இப்போது ஈழத் தமிழர் இந்தியத் தமிழருக்கு அநுதாபம் காட்டவும் ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. தனிச் சிங்களச் சட்டத்தைப் போலவே, ஹிந்தி ஏகாதிபத்தியச் சட்டத்தால் இந்தியாவில் அவதியுறும் தமிழர்களுக்கு விழிப்பும் விமோசனமும் ஏற்பட வழியுண்டா என்று ஈழத் தமிழர்கள் எண்ணிப் பார்க்கிறார்கள்.







1. பம்பாய் பாரதி கலா மன்றத்தின் சார்பில் ஷண்முகானந்த சபா ஹாலில் மெல்லிசை மன்னர் விசுவநாதன் – ராமமூர்த்தி குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது. 2. 'சேகர் ஔர் சப்னு' என்ற ஹிந்திப் படத்துக்கு ராஷ்டிரபதியின் தங்கப் பதக்கம் கிடைத்திருக்கிறது. அந்தப் படத்தில் ஒரு காட்சி. 3. 'நானும் ஒரு பெண்' படத் தயாரிப்பாளர் திரு குமரன் ஜனாதிபதியிடமிருந்து அந்தப் படத்துக்குக் கிடைத்த பரிசான வெள்ளிப் பதக்கத்தைப் பெறுகிறார். 4. பேராசிரியர் அ. சீ. ரா. அவர்களின் 'கவியரசர் கண்ட கவிதை' வெளியீட்டு விழா கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் விமரிசையாக நடந்தது. 5. கிருஷ்ணு ஓடு தயாரிக்கும் தொழிற்சாலைக்குச் சமீபத்தில் தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கடராமன் விஜயம் செய்தார். கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் திரு ஏ. ஆர். ராஜகோபாலன் வரவேற்புப் பத்திரத்தை மந்திரிக்கு வாசித்தளிக்கிறார்.





பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரிட்டன் போன்ற அறிவு வளர்ச்சியும், நாகரிக முன்னேற்றமும் மிகுந்த ஒரு நாட்டில் தூக்குத் தண்டனை என்பதே நீக்கப்பட வேண்டும் என்ற கருத்துக் கொண்டு அதற்காகப் பாடுபட்டு வருபவர்களுமான ஆர்.டி. பாஜெட்டும் ஸிட்னிஸில்வர்மானும் இந்நூலை ஏதோ ஒரு பரபரப்பு உண்டாக்க வேண்டும் என்பதற்காக எழுதவில்லை. இந்தப் பிரச்னைகள் பற்றி மக்கள் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும் என்பதற்காகவே எழுதினார்கள். பிரிட்டனில் மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள அறிவாற்றலும், அதன் விளைவான கருத்துச் சுதந்திரமும் அதை வெளியிடுவதில் அவர்கள் காண்பிக்கும் தைரியமும் இந்நூலைப் படிக்கும்போது நமக்கு ஒருவாறு விளங்குகின்றன.

லண்டன், விக்டர் கோலான்க்ஸ் கம்பெனி பிரகரித்த 'தூக்கிலிடப்பட்டோர் ஆனால் குற்றமற்றவர்கள்?' என்ற நூலில் உள்ள ஒரு கட்டுரையின் சுருக்கம் இது.



1952 நவம்பர் இரண்டாம் தேதியன்று பெர்ல் வேர் என்ற பெயர் கொண்ட ஒரு சிறுமி இரவு ஒன்பது மணிக்குப் படுக்கப்போகு முன்னர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். சாலையின் மறுபுறத்தில் நடை பாதையில் இருவர் நின்று கொண்டிருந்





குற்றவாளியா? நிரபராதியா?

தார்கள். பார்லோ அண்டு பார்க்கர் கம்பெனியின் கிடங்குக்குப் பக்கத்திலிருந்த அவர்கள் மெல்ல 'கேட்'டின் மீது ஏறத் தொடங்கினார்கள். பெர்ல் தன் தாயாரைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னான். தாயார் டெலிபோனில் 999 'டயல்' செய்து போலீஸாரை அழைத்தாள்.

பெர்ல் அன்று பார்த்த இருவருள் ஒருவன் பெயர் க்ரெய்க், வயது பதினாறு; மற்றொருவன் பென்ட்லி. வயது பத்தொன்பது.

க்ரெய்க்கின் அண்ணன் நிவென். வழிப்பறி செய்த குற்றத்துக்காக அவனைக் கைது செய்து பன்னிரண்டு வருஷங்கள் சிறைத்தண்டனை விதித்து விட்டனர். க்ரெய்க்குக்கு அண்ணன் குற்றமற்றவன் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டான் என்ற எண்ணம் அசைக்க முடியாதபடி நெஞ்சில் வேரூன்றி விட்டது.

இதன் பிறகுதான் க்ரெய்க்குக்கு நீதிக்குப் புறம்பாகக் குற்றம் புரிவதில் நாட்டம் ஏற்பட்டது.

பென்ட்லி அழகாக இருப்பவன். சிறுவனுயிருந்த போது லண்டன் மீது ஜெர்மானியர் நடத்திய விமானத் தாக்குதலை அனுபவித்தவன். இரண்டு தருணங்களில் அவன் இருந்த வீடு தரை மட்டமாகியது. இரண்டாவது . தடவையில் இடிந்து தகர்ந்து கிடந்த செங்கற் குவியலுக் கிடையிலிருந்து அவனைத் தோண்டி எடுக்க வேண்டியிருந்தது. தலையில் பலத்த காயங்களோடு அவன் மருத்துவ மனைக்கு அழைத்துப் போகப்பட்டான். இதன் காரணமாகப் பதினைவது வயதில் அவனுக்குக் காக்காய் வலிப்பு ஏற்பட்டது. 1949ல் அவனை ஆஸ்பத்திரியில் பரிசோதித்த மனோதத்துவ நிபுணர் அவன் மூளை நன்கு வளர்ச்சி யடையவில்லை என்று கூறினார்.....

நவம்பர் இரண்டாந் தேதி இரவு பார்லோ அன்ட் பார்க்கர் கிடங்கை அடைந்து அவர்கள் கேட்டின் மீது ஏறி மறுபுறம் குதித்தார்கள். மழைத் தண்ணீர் வடிவதற்காக அமைத்திருந்த குழாய் வழியாகக் கூரைக்கு ஏறினார்கள். இருபத்திரண்டு அடி உயரத்தில் மொட்டை மாடி சமதரையாக அமைந்திருந்தது. அங்கு நான்கு விளக்குகளும் மொட்டை மாடியிலிருந்து கீழே இறங்கிப் போகப் படிக்கட்டுகளும் இருந்தன. ஆனால் படிக்கட்டு வழியே இறங்க முடியாதபடி அதன் வாயிலே உட்புறம் தாளிடப்பட்டிருந்த கதவு அடைத்துக் கொண்டிருந்தது.

இந்தக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போவது அவ்விருவரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். படிக்கட்டைத் தவிர 'லிப்ட்' ஒன்று இயங்கும் செங்குத்தான துவாரமும் அந்த மொட்டை மாடியில் இருந்தது.

டெலிபோனில் தகவல் கிடைத்ததும் அச் செய்தி அந்தப் பக்கத்தில் ஒரு போலீஸ் காரில் உலவி வந்த மூன்று போலீஸாருக்கு ரேடியோ டெலிபோன் மூலம் அறிவிக்கப்பட்டது. இரண்டொரு நிமிஷங்களில் போலீஸார் அங்கு வந்து மாடியை நோக்கிச் சக்தி வாய்ந்த டார்ச் லைட் ஒளியை வீசினார்கள். ''போலீஸ்!'' என்று அறிவித்த க்ரெய்க், பென்ட்லியை லிப்ட் துவாரத்தினுள் தன்னுடன் பதுங்கிக் கொள்ளச் சொன்னான்.

மூன்று போலீஸ்காரர்களுள் ஃபேர்ஃபேக்ஸ் என்பவன் மழை நீர்வடியும் குழாய் வழியாக மேலே ஏறினான். அவர்கள் மீது பாய்ந்து பென்ட்லியைப் பிடித்து இழுத்தான். பென்ட்லி திமிறிக் கொண்டு அப்பால் விலகியபோது ''க்ரிஸ்! அவனைத் துப்பாக்கியால் சுடு!'' என்று பொருள்பட "Give it to him Chris'' என்றான்.

கோர்ட்டில் போலீஸார் இவ்விதமாகச் சாட்சி சொன்ன போதிலும், இப்படித் தான் கூறவே இல்லை என்று பென்ட்லியும் அத்தகைய சொற்களைத் தான் கேட்கவே இல்லை என்று க்ரெய்க்கும் பின்னல் கூறி

னார்கள். பெண்ட்லியுடைய தகப்பனார் க்ரெய்க்கை அவன் 'க்ரிஸ்' என்று அழைத்ததே கிடையாது என்று சாட்சி சொன்னார்.

அடுத்து நிகழ்ந்த அமர்க்களம் காரணமாகப் போலீஸார் குழப்பமடைந்து இது விஷயமாகத் தவறு செய்திருக்கவும் இடமுண்டு. ஏனெனில் அந்தக் கணத்திலேயே க்ரெய்க் சுட்டான். ஃபேர் ஃபேக்ஸின் வலது தோளில் பலமாக அடிபட்டது. ஆனால் அதனால் தளர்ச்சியுறாமல் வீரத்துடன் போராடினான் ஃபேர் ஃபேக்ஸ். பெண்ட்லியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் மாடிப் படிக் கதவுக்குப் பக்கத்தில் பதுக்கினான். பெண்ட்லியிடமிருந்து முஷ்டியில் இடுக்கிக் கொண்டு குத்த உதவும் ஓர் ஆயுதத்தையும் கைப்பற்றினான். பெண்ட்லியை ஒரு கேடயம் போல் பயன்படுத்திக் கொண்டதால் அன்று ஃபேர் ஃபேக்ஸ் உயிரிழக்காமல் தப்பினான் என்பதில் சந்தேகமில்லை.

இதற்குள் வேறு பல போலீஸ்காரர்களும் வந்து விட்டனர். கான்ஸ்டபிள் மைல்ஸ் கிடங்கின் சாவியை அதன் அதிபரிடம் கேட்டு வாங்கிக் கொண்டு வந்திருந்தான். வாசல் கதவைத் திறந்து மாடிப் படிகளில் விரைவாக ஏறி வந்தான். மாடிப் படிக் கதவைத் திறந்த மைல்ஸ், 'லிப்ட்' இயங்கும் துவாரத்துக்குள் பதுங்கியிருந்த க்ரெய்க் மீது பாயப் போனான். க்ரெய்க் சுட்டான். குண்டு மைல்ஸின் இரு கண்களுக்கும் இடையில் பாய்ந்தது. மைல்ஸ் அந்தக் கணமே இறந்து சுருண்டு விழுந்தான். மற்றவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் க்ரெய்க்கை அணுகினார்கள். "என் அண்ணனுக்குப் பன்னிரண்டு வருஷத் தண்டனை அளித்தீர்கள். எனக்குப் பதினாறு வயதுதான் ஆகிறது. வாருங்கள்!" என்று கூறியவாறே பலமுறை சுட்டான் க்ரெய்க். அந்தத் தோட்டாக்கள் நல்ல வேளையாக மேற்கொண்டு உயிர்ப் பலி வாங்கவில்லை. தோட்டாக்களும் தீர்ந்து போய் விட்டன.

க்ரெய்க் கூரையிலிருந்து தரைக்குப் பாய்ந்தான், தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்துடன். விதி அவனைச் சாக விடவில்லை. பலத்த காயங்களுடன் தப்பினான்.

விசாரணை நடந்தது. க்ரெய்க்கை ஒரு ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்துக் கோர்ட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

க்ரெய்க்கைப் பொறுத்த வரையில் அவன் குற்றவாளிதான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அவனுக்குப் பதினாறு வயதுதான் ஆகியிருந்தபடியால் சட்டப்படி அவனைத் தூக்கிலிட முடியவில்லை. 'இதை அவன் நன்கு அறிந்திருந்ததாலேயே துணிந்து போலீஸாரை முன்னேறி வருமாறு சவால் விட்டுச் சுட்டான்' என்பது சர்ச்சைக்குரிய விஷயம். அவன் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டதைப் பார்த்தால் சாவுக்கு அஞ்சியவனாகத் தோன்றவில்லை. அண்ணனுக்காகப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணமே அவனிடம் மேலோங்கி யிருந்தது எனலாம்.

ஆனால் கேஸில் சிக்கல் நிரம்பியதாயிருந்தது பெண்ட்லியின் நிலைதான்.


இரண்டு நபர்கள் ஒரு பெரிய குற்றம் இழைக்கும் நோக்கத்துடன் ஆயுதங்களுடன் புறப்பட்டு, அவர்களைக் கைதாக்க முயலுகையில் பலத்த எதிர்ப்புக் காண்பிக்க முயன்றால் ஒருவனுடைய செயல் இருவரது செயலாகவும் கருதப்படும். ஒருவன் கொன்றால், இருவரும் சேர்ந்தே கொன்றதாகக் கருதப்படும். — இது சட்டம்.

ஆனால் இந்தச் சட்டத்தை எந்த அளவுக்குக் கொண்டு போவது?

"க்ரிஸ்! அவனைத் துப்பாக்கியால் சுடு!" என்று பொருள்படப் பெண்ட்லி கூறியது உண்மை என்று கொண்டாலும் (இதைச் சாட்சிகள் மறுத்தனர்) அது ஃபேர் ஃபேக்ஸைக் கொல்லுமாறு அவன் தூண்டியதாகும். ஆனால் ஃபேர் ஃபேக்ஸ் இறக்கவில்லை. மாறாக ஃபேர் ஃபேக்ஸ் சாகாமல் தப்பக் கேடயம் போலிருந்து உதவியவன் பெண்ட்லி. ஃபேர் ஃபேக்ஸுக்கு அடிபடுவதற்கு முன்னால் அவன் பலசாலியாக இருந்தபோதே அவனிடமிருந்து திமிறித் தப்பிவிடுவது பெண்ட்லிக்குக் கடுமையாயில்லை. ஆயினும் ஃபேர் ஃபேக்ஸுக்கு அடிபட்ட பின் அவனிடமிருந்து தப்பி க்ரெய்க்குடன் சேர்ந்துகொள்ளவோ க்ரெய்க்குக்கு உதவவோ பெண்ட்லி முயலவில்லை. ஆகவே முதல் முறை துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டதுமே அந்த அதிர்ச்சியில் அவன் நல்ல புத்தியை அடைந்து எதிர்ப்புக் காட்டாமல் போலீஸாருடன் ஒத்துழைக்கவே முடிவு செய்தான் என நியாயமாகக் கருதலாம். பெண்ட்லியிடமிருந்த ஒரே ஆயுதத்தையும் ஃபேர் ஃபேக்ஸ் கைப்பற்றிக் கொண்டான். ஒரு போலீஸ்காரனிடம் கைதாகி அவன் சொற்படி கேட்டுப் பெண்ட்லி நடந்து கொண்டான் எனக் கொள்ளலாம். போலீஸ்காரனின் கையில் அவன் சிக்கிய கால் மணி நேரத்துக்குப் பிறகு மைல்ஸ் கொல்லப்பட்டால் அதற்குப் பெண்ட்லி உடந்தையாக இருந்ததாகவோ க்ரெய்க்கை அக் காரியத்தைச் செய்யுமாறு அவன் தூண்டியதாகவோ எப்படிக் கருத முடியும்? தன் அண்ணனுக்காகப் பழி வாங்கி விட்டுத் தற்கொலை செய்துகொள்ளத் தயாராக இருந்த க்ரெய்குக்குப் பெண்ட்லியின் தூண்டுதல் அவசியமா என்ன? இல்லை என்றே சொல்லிவிடலாம்.

பெண்ட்லி சாட்சிக் கூண்டில் ஏறியபோது முட்டாள்தனமாக நடந்து கொண்டான் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் ஆண்டவனே அவனுக்கு அறிவு வளர்ச்சியைக் கொடுக்கவில்லை. சாட்சிக் கூண்டில், 'மைல்ஸ் சுட்டுக் கொல்லப்பட்டபோது தன்னை யாரும் கைது செய்திருக்கவில்லை' என்று கூறிய அறிவு முதிர்ச்சி பெறாத அப்பாவி பெண்ட்லி, தனக்குச் சாதகமான ஒரு சட்ட நுணுக்கத்தை அழித்துவிட்டது மட்டுமல்ல, தன்னைத் தானே அழித்துக் கொண்டான்!

"'க்ரிஸ் அவனைத் துப்பாக்கியால் சுடு' என்று பெண்ட்லி கூறவில்லை என்றால் போலீஸார் பொய் சொல்கிறார்கள் என்றாகிறது: அவ்வளவு வீரத்துடன் நடந்து கொண்ட அவர்கள் அத்தனை அப்பட்டமாகப் பொய் சொல்வார்கள் என்று நம்புகிறீர்களா?"


பவுன் சூரியன்
மார்க் புகையிலை
காரைக்குடி



என்பதாக நீதிபதி ஜூரிகளுக்கு கேஸ் விவரங்களை எடுத்துரைக்கும்போது குறிப்பிட்டார்.

ஜூரிகள் சுமார் ஒன்றேகால் மணி நேர ஆலோசனைக்குப் பிறகு, இருவருமே குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தனர். ஆனால் பெண்ட்லி விஷயமாகக் கருணை காட்டலாம் எனக் குறிப்பிட்டனர். நீதிபதியும் இதற்கு ஆதரவு தருவது போலத்தான் தமது தீர்ப்பை வழங்கியிருந்தார். ஆனால் பெண்ட்லிக்குக் கருணை காட்டப்படவில்லை. அவன் தூக்கிலிடப்பட்டான். அதற்கு முன் அவன் செய்துகொண்ட அப்பீல் கேஸ் தோற்றுவிட்டது. நீதிபதியும் ஜூரர்களும் ஒருமுகமாகக் கருணை காட்டலாம் என்று அபிப்பிராயப்பட்ட பிறகு அதன் பயனை அடையாத ஒரு குற்றவாளியை பிரிட்டிஷ் சரித்திரம் அதற்கு முன் கண்டதில்லை.

உள்நாட்டிலாகா காரியதரிசி, பெண்ட்லி தூக்கிலிடப்பட வேண்டும் என்று தீர்மானித்ததும் நாடு முழுதும் வெறுப்பு அலை பாய்ந்தது. ஸிட்னி ஸில்வர்மான் பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்னையை எழுப்பினார். பெண்ட்லி தூக்கிலிடப்பட்ட பிறகுதான் அது குறித்துப் பாராளு மன்றம் விவாதிக்க முடியும் என்று சம்பிரதாயச் சட்டங்களுக்கு உட்பட்டுச் சபாநாயகர் தீர்ப்பளித்தார்.

பாராளு மன்றத்தின் இருநூறு அங்கத்தினர்கள் உள்நாட்டிலாகா காரியதரிசிக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்தனர். அனூரின் பெவான் தலைமையில் ஸில்வர்மான், பாஜெட் ஆகியோர் உட்படப் பலர் உள்நாட்டிலாகா காரியதரிசியை நேரில் சென்று பார்த்தனர். பலன் கிடைக்கவில்லை. லண்டன் வீதிகளில் ஆங்காங்கே வெறுப்புக் கொந்தளிக்கும் உள்ளங்களுடன் மக்கள் கூடினர். ஆந்தொனி ஈடனிடம் தங்கள் மகஜரைச் சமர்ப்பிக்க அவர் வீட்டெதிரில் ஒரு கூட்டம் போலீஸ் கட்டுக் காவலை மீற முயன்றது.

என்றாலும் என்ன; பெண்ட்லி தூக்கிலிடப்பட்டு இறந்து விட்டதாகச் சம்பிரதாய வழக்கப்படி சிறைச்சாலை வாசலில் நோட்டீஸ் ஒட்டப்பட்டது. அடுத்த கணம் மக்கள் கூட்டம் அதைப் பிய்த்தெறிந்தது.

பெண்ட்லி இறந்து விட்டான்; அவன் குற்றவாளியா? குற்றவாளி என்றே கருதினாலும் அவனுக்குக் கருணை காட்டித் தூக்கிலிடப்படுவதைத் தவிர்க்கப் போதுமான காரணங்கள் இருக்கவில்லையா?

கொலை செய்த அனைவருமே தூக்கிலிடப்பட வேண்டும் என்று யாருமே கருதுவதில்லையே? பதினெட்டு வயதுக்கு அருகில் உள்ளவர்களை மிகமிக அத்தியாவசியமான சந்தர்ப்பச் சூழ்நிலைகள் இருந்தாலொழியச் சாதாரணமாகத் தூக்கிலிடுவதில்லை. பெண்ட்லிக்கு வயது பத்தொன்பதுதான் ஆகியிருந்தது.

கொலைக் குற்றமிழைத்தவன் தூக்கிலிடப்படாதபோது அதற்கு உடந்தையாக இருந்தவனுக் கருதப்படுபவன் தூக்கிலிடப்படுவதென்பது பிரிட்டிஷ் நீதியின் சரித்திரத்தில் இதுதான் முதல் தடவையாக நிகழ்வது. பெண்ட்லிக்கு மூளை சரியானபடி வளர்ச்சியுறவில்லை என்பது நிரூபணமான விஷயம். அத்தகைய ஒருவனுக்கு இத்தகைய கடுமையான தண்டனை அவசியமா? ஜான் ஆண்டர்ஸன் பாராளுமன்றத்தில், 'லவலேசம் சந்தேகம் எழுந்தாலும் உள்நாட்டிலாகாக் காரியதரிசி தண்டனையைக் குறைக்கவே சிபாரிசு செய்வார்' என்று 1948ல் கூறினார். பெண்ட்லி விஷயத்தில் போலீஸ் உட்பட அனைவருமே மைல்ஸ் இறந்தபோது பெண்ட்லி கைதாகியிருந்தான் என்றே சொன்னார்கள். பெண்ட்லி மட்டும்தான் அப்போது தான் கைதாகியிருக்கவில்லை என்றான். இது சம்பந்தமாகப் பெண்ட்லி தவறு செய்திருக்கலாம், மற்ற அனைவரும் சரியானபடி பேசியிருக்கலாம் என்று சந்தேகிக்க லவலேசமும் இடமில்லாது போய்விட்டதா என்ன?

பெண்ட்லி தூக்கிலிடப்பட்டதற்கு ஒரே ஒரு காரணம்தான் எனக்குத் தோன்றுகிறது. ஒரு போலீஸ்காரன் கொல்லப்பட்டால் அதற்குப் பழி வாங்குவது போல் யாரேனும் தூக்கிலிடப்பட வேண்டும் என்ற நூதனக் கொள்கைதான் அந்தக் காரணமாக இருக்க வேண்டும்.

போலீஸ் படையினர் தன்னம்பிக்கை குறையாமல் தொடர்ந்து மனோதிடத்துடன் தங்கள் கடமையை ஆற்ற உதவ வேண்டுமானால் அதற்கு அரைகுறையான மூளை வளர்ச்சி கொண்ட ஓர் அப்பாவியைப் பலி கொடுப்பதைக் காட்டிலும், மிஸஸ் மைல்ஸுக்கு இப்போது வாராவாரம் கிடைக்கும் அற்பப் பென்ஷனை இரண்டு பவுண்டு பதினாறு ஷில்லிங்கை விட அதிகமான ஒரு தொகையை அவளுக்குக் கிடைக்குமாறு செய்வதே நல்லது.




உலகுக்கு ஒரு கண்காட்சி

நியூயார்க் உலகக் கண்காட்சியில் பார்க்க வேண்டியது அனைத்தையும் பார்த்து முடிக்க ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் வீதம் முப்பது நாட்களை அங்கு கழிக்க வேண்டும் என்று கணக்கிட்டிருக்கின்றனர்! விஞ்ஞானம், தொழில்கள், கல்வி போன்ற துறைகளில், மனிதன் எந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறான் என்பதை உணர்த்தி, வருகிற மக்களை யெல்லாம் பிரமிப்பில் ஆழ்த்தும் ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள இந்த அகில உலகக் கண்காட்சி உலகுக்கே ஒரு கண்காட்சியாகத்தான் விளங்குகிறது. சென்ற மாதம் 22ந் தேதியிலிருந்து அமெரிக்கர்கள் மட்டுமின்றி உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் இந்தக் கண்காட்சியைப் பார்ப்பதற்கென்றே மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் வருவோரையெல்லாம் அவர்கள் வெகு தூரத்தில் இருக்கும்போதே முகமன் கூறி வரவேற்பது யூ. எஸ். ஸ்டீல் ஸ்தாபனம் அமைத்துள்ள 140 அடி உயரமுள்ள உலகம். வானவெளியில் ஆறுயிரம் மைல் தொலைவிலிருந்து பார்த்தால் உலகம் எந்த அளவினதாய்த் தோன்றுமோ அதே அளவில் இம்மியும் பிசகின்றிச் சமைக்கப்பட்டுள்ளது இது. மூன்று செயற்கைச் சந்திரன்களின் பாதைகளைக் குறிக்கும் வளையங்களுடன் கூடிய இவ்வுலகைக் கட்டி முடிக்க 162 நாட்கள் ஆயின!

ஐம்பத்தொரு அயல்நாடுகளும் 350க்கு மேற்பட்ட தொழில் ஸ்தாபனங்களும் பங்கெடுத்துக் கொண்டுள்ள இந்தக் கண்காட்சியில் உள்ளதுபோல் அறிவுக்குப் பயன் தருவதும், மனத்துக்கு இதமளிப்பதும், செவிக்குச் சுகம் தருவதும் கண்களுக்கு இனிமையானதுமான பலதரப்பட்ட காட்சிப் பொருள்களுடன்கூடிய ஒரு கண்காட்சி இதுவரை உலகில் வேறு எங்கும் எந்நாளிலும் அமைக்கப்பட்டதில்லை என்று விஷயமறிந்தவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் உறுதியாகக் கூறும்போது நாம் நம்புவதற்குத் தயங்குவானேன்?

ஒரு பக்கத்தில் வர்ண ஜாலங்கள் புரியும் பொங்கு புனல்களும் வாண வேடிக்கைகளும் அங்கு வருவோரை ஒரு சொப்பன உலகத்துக்கு அழைத்துப் போகுமென்றால், மறுபுறம் போர்டு, ஜெனரல் எலெக்ட்ரிக், ஜெனரல் மோட்டார்ஸ், ஐ. பி. எம்., பெல் டெலிபோன் ஆகிய ஸ்தாபனங்களின் கற்பனைக் கெட்டாத நூதனமான பாணியில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் ஏதோ ஒரு மாயாஜாலபுரியில் இருப்பது போன்ற பிரமிப்பை உண்டாக்கும். கட்டடக் கலை நிபுணர்களின் கற்பனையில் உதித்த விநோதமான உருவங்கள் காங்கிரீட்டினால் உறுதியான வடிவம் பெறுவதற்கு உதவிய பொறி இயல் நிபுணர்கள் மகத்தான சாதனைகளைப் புரிந்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை.

விஞ்ஞான, தொழில் முன்னேற்றங்களைப் பற்றிய விவரங்களை ஓரளவுக்கு மேல் மூளை





ஏற்றுக் கொள்ளாது என்பது நிச்சயம். அந்த நிலையை ஒருவர் அடைந்ததும் அவருக்குக் களிப்பூட்டி மகிழ்விக்கவும் எத்தனை எத்தனையோ விஷயங்கள் உள்ளன. மாபெரும் இனிஞ்சல் வடிவத்தில் அமைந்த கடல் தியேட்டரில் ஒரே சமயத்தில் 8,200 பேர்கள் அமர்ந்து மிதக்கும் மேடையில் நடக்கும், 'உலகைச் சுற்றி எண்பது நாட்கள்' என்ற பிரசித்தி பெற்ற நாடகத்தைப் பார்க்கலாம். சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பிரும்மாண்டமான மிருகங்களைச் சந்தித்து விட்டு வருங்காலத்தில் மனிதன் எப்படிக் கடலின் அடிவாரத்தில் ஹோட்டல் நடத்துவான், சந்திர மண்டலத்தில் எவ்விதம் உலவி வருவான் என்பதையெல்லாம் காணலாம்! சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகளை விளக்கும் மெழுகுப் பொம்மைகள், பல தேசத்து நடனங்கள், வேகமாய் வந்து ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் மோட்டார் கார்கள், ஒரு விநாடியில் நூறில் ஒரு பாகத்தைக் குறிக்கும் கடிகாரங்கள் போன்ற கணக்கற்ற அதிசயங்களை அனுபவிக்கலாம்.


ஹாலிவுட் கண்காட்சியில் கிளியோபாட்ராவாகவோ மார்க் அன்டோனியாகவோ வேஷம் போட்டுக் கொண்டு புகைப்படமெடுத்துக் கொள்ளலாம்! பலவிதமான திரைப் படங்களையும் உலகில் சிறந்த ஓவியங்களையும் சிற்பங்களையும் பார்த்து மகிழலாம். குழந்தை காணாமல் போய் விட்டால் அழுது கொண்டிருக்கும் அவனை அல்லது அவளை இருநூறு டெலிவிஷன் திரைகளுள் ஒன்றில் கண்டுவிட்டு அழைத்து வர ஓடலாம்!

நடந்து, நடந்து கால் வலி கண்டால் ரயில், பஸ், ஹெலிகாப்டர் ஆகியவற்றில் ஏறி அமர்ந்து கண்காட்சியைச் சுற்றி வரலாம். பசி, தாகத்தைத் தணித்துக் கொள்ள மூலைக்கு மூலை உணவு விடுதிகள் உள்ளன. கண்காட்சியைச் சுற்றி வர விரும்பாத சில முழுச் சோம்பேறிகள் இருந்த இடத்தில் இருந்தபடியே கண்காட்சியில் நடப்பவற்றையெல்லாம் டெலிவிஷனில் பார்த்துத் திருப்தியடையலாம்! அதுவும் அவர்களுக்கு அலுத்துப் போய் நிம்மதியாகத் தூங்க விரும்பினால் அவரவர்கள் உடலமைப்புக்கு ஏற்ற விதத்தில் தன் அமைப்பையும் மின்சக்தியால் தானாகவே மாற்றிக் கொள்ளும் கட்டிலில் படுத்து நித்திரையில் ஆழ்ந்து விடலாம்!

இந்த அகில உலகக் கண்காட்சியில் நம் பாரத நாடு பங்கு பெறவில்லையா என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. இங்கு 28,000 சதுர அடி நிலத்தில் பாரத நாட்டின் கட்டிடம் அமைந்திருக்கிறது. மொகலாய பாணியில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சலவைக் கற்களினால் எழுப்பப்பட்டது. சித்திர வேலைப்பாடு அமைந்த இந்தச் சலவைக் கற்கள் நம் நாட்டிலிருந்தே அங்கு கொண்டு செல்லப்பட்டன. பழங்காலத்திய சிற்ப வடிவங்களும் வெண்கலச் சிலைகளும் நமது புராதனமான கலைத் திறனை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இன்றைய ஓவியர்களின் வண்ணச் சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன. பாரத நாடு விஞ்ஞானம், தொழில் துறைகளில் அடைந்து வரும் முன்னேற்றங்களை விவரிக்கும் தனிப் பகுதியும் இருக்கிறது. கைத்தறி ஆடைகளும், கைத்திறனால் உருவான தந்த, மரச் சாமான்களும் கண்கவர் வனப்புடன் மிளிர்கின்றன.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் பாரதம் இந்தக் கண்காட்சிக்கு 'ஜனநாயகத்தின் முன்னேற்றம்' என்ற பொருத்தமான பெயர் சூட்டியுள்ளது. வியாபார நோக்கில் பார்த்தாலும் கூட இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்வதால் பாரத நாட்டுக்குச் சுமார் 165 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் ஆறால் நாளடைவில் சுமார் 24 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

பல தேசங்களும் பங்கெடுத்துக் கொண்டுள்ள உலகக் கண்காட்சி, ஒற்றுமையின் உருவகமாகவும் ஒத்துழைப்பின் சின்னமாகவும் விளங்கி, உலகில் அமைதி நிலவவும் முன்னேற்ற முயற்சிகள் வெல்லவும் துணை புரியும்.





முற்றும் புதியது!
3 ரம்மியமான, புகழ் பெற்ற வாசனைகள்..
கால்கேட் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கேசத்திற்குப் போஷாக்கும் நறுமணமும் கொடுத்து புதிய வசீகரத்தையளிக்கிறது
நீண்ட, செழிப்பான, கூந்தலை வளர்க்கிறது
உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்புக்கு காந்தியளிக்கிறது
கால்கேட்டிலிருந்து மிகவும் பரபரப்பூட்டும் ஹேர் ஆயில் செய்தி
புதியது! கால்கேட் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கேசத்தை அழகுபடுத்தி நறுமணமளிக்கிறது
3 வசீகரிக்கும் சுகந்தங்களில் ரோஜா லவண்டர் மல்லிகை
COLGATE
உங்கள் கேசத்தின் உண்மையான அழகை வெளிப்படுத்த உதவுவதும்...
உங்கள் குடும்பம் முழுவதும் மிகவும் விரும்பும் நறுமணம் கொண்டதுமான
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலுடன்
மற்றொரு நேர்த்தியான துணைத்தயாரிப்பு
COHO. G.J TAM

சினிமாப் படங்களுக்கே ஆதாரமாக விளங்குவது 'எடிட்டிங்'தான். 'எடிட்டிங்' சரியாயிருந்தால்தான் படம், திரைக் கதை, பாடல்கள், வசனம், எல்லாமே சரியாயிருக்கும். எந்தெந்த ஊர்களிலோ, எப்பொழுதெல்லாமோ எடுக்கப்பட்ட 'ஷாட்டு'களைச் சுருள் சுருளாக வைத்துக்கொண்டு வரிசைப் படுத்திப் படத்துக்கு ஒரு தனிக் கவர்ச்சி உண்டாக்குவதற்குத்தான் எடிட்டிங் என்று பெயர்.

வாஹினி ஸ்டுடியோவில் பதின்மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் திரு கல்யாணம் அநுபவம் மிக்க பிலிம் எடிட்டர்.

பிரகதி ஸ்டுடியோவில் சீப் எடிட்டராயிருந்த ராமனி என்பவரிடம் உதவியாளராயிருந்தார் கல்யாணம்; விளையாட்டு மன்னர்; கால் பந்து விளையாட்டில் கைதேர்ந்தவர். விளையாட்டு மும்முரத்தில் இவருக்கு ஒருமுறை காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுத் துன்பமடைய நேர்ந்தது. இதனால் கால் பந்து விளையாட்டுக் கலைக்கு ஏற்பட்ட நஷ்டம் திரைப்பட எடிட்டிங் கலையின் லாபமாயிற்று. சிரமப்பட்டு இந்தக் கலையைப் பயின்றார் அவர். ஒரு சமயம் எடிட்டிங்கில் செய்த தவறுக்காகப் பிரதம எடிட்டர் இவரைப் பல மணி நேரம் அறைக்கு வெளியே கால் கடுக்க நிற்கும்படி செய்து விட்டாராம்!

திரு கல்யாணம் தம்முடைய தொழிலைச் செய்து கொண்டிருக்கும் போது பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. நான் வாஹினி ஸ்டுடியோவுக்குப் போன போது அவருக்கு எடிட்டிங் வேலையெல்லாம் முடிந்து விட்டது. ஆயினும் அவர் 'மூவியோலா'வை இயக்கிக் காட்டி 'எடிட்டிங்' வேலையை விளக்கலானார். 'மூவியோலா' என்னும் இயந்திரத்தின் மூலம் ஒரு மேஜையின் முன் அமர்ந்து சிறிய அளவில் படத்தைத் தொடர்ச்சியாகப் பார்க்கலாம்.

ஒவ்வொரு படத்திலும் அவ்வப்போது எடுக்கும் காட்சிகளை, எடிட்டர் ஒரு தாற்காலிகப் பிரதி தயார் செய்து கொள்வார். படத்தின் நெகடிவ், ஒலிப் பதிவின் நெகடிவ் இரண்டும் தனித் தனியாக வந்து சேரும். இரண்டிலும் உள்ள 'க்ளாப் ஸ்டிக்' — தட்டுப் பலகை — அடையாளத்தின் உதவியால் எடிட்டர் படத்தில் ஒலியை இணைத்துக் கொடுப்பார். இந்த இணைப்பு வேலைக்குத்தான் 'ஸிங்க்ரனிஸேஷன்' என்று பெயர். வழக்கில் 'ஸிங்க்' பண்ணுவது என்று சொல்லுகிறார்கள். ஒலியும், படமும் இணைந்த காட்சிகளைத் தாற்காலிகப் பிரதி தயாரித்துக் கொள்வார்கள். எடுத்த வரையில் படம் திருப்திகரமாக இருக்கிறதா என்று பார்க்கத்தான் இப்படி 'ரஷ்' தயாரிப்பது.


டைரக்டர், காமிராமேன், ஒலிப்பதிவாளர், எடிட்டர், படாதிபதி ஆகியவர்கள் மேற்படி பிரதியைப் பார்ப்பார்கள். திருப்தி தராத காட்சிகளை மீண்டும் எடுக்க ஏற்பாடு செய்வார்கள்.


மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது மிகவும் எளிதெனத் தோன்றக் கூடிய எடிட்டிங் உண்மையில் மிகவும் சிக்கலானதும் சிரம சாத்தியமானதுமான ஓர் அருங் கலை. அதை நன்கு பயின்றுள்ள திரு கல்யாணம் நெருங்கிய நண்பரைப் போல் அன்பாகப் பழகினார்.

''பிலிம் எடிட்டிங் மிகவும் தொல்லை தரும் வேலை; கேட்பவர்களுக்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டும். ஆனால் கவனித்துப் பொறுமையாகச் செய்கிறவர்களுக்கு அதை விடச் சுவாரஸ்யமான வேலை எதுவுமே இல்லை எனத் தோன்றும். ஒவ்வொரு சமயம் வேலையே இருக்காது. ஆனால் படப் பிடிப்பு முடிந்ததும் அது வெளியாகும் 'மகத்தான' தினத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்டு விடுவார்கள். எடிட்டிங்கைத் துரிதமாக முடிக்கும்படி அவசரப்படுத்துவார்கள். அகோராத்ரம் அன்னம், தண்ணீர் அருந்தாமல், அயராமல் வேலை செய்ய வேண்டும். மிகக் கவனமாகச் செய்ய வேண்டிய வேலை. சங்கீத ஞானம், கதா ரசனை, நடிப்பில் ஒரு பிடிப்பு ஆகியவைகளெல்லாம் உள்ள கலைஞன்தான் சரியான பிலிம் எடிட்டராயிருக்க முடியும். அக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கவில்லை என்பது போல் படத் தயாரிப்பின் போது சோம்பேறித்தனமாக இருந்துவிட்டுக் கடைசி நிமிஷத்தில் எடிட்டரை விரட்டுகிறார்கள். அவசரக் கோலம் என்று அள்ளித் தெளித்த கதையாக எடிட்டிங் ஆகிவிடக் கூடாது என்பதுதான் எங்கள் கவலை......'' என்றார் கல்யாணம்.

சிலர் தமக்குத் தெரிந்த தொழில் நுணுக்கங்களைத் தம் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப் பயப்படுவார்கள். ஆனால் திரு கல்யாணம் தம் உதவியாளர்களுக்குத் தொழில் நுணுக்கங்களை மகிழ்ச்சியோடு கற்றுத் தருகிறார். வாஹினி ஸ்டுடியோவில் இருப்பதையே பெருமையாக நினைக்கிறார் திரு கல்யாணம். அநுபவமுள்ள கலைஞர் இருப்பதனால் வாஹினிக்கும் சிறப்புத்தானே! -விஜயம்







நீங்கள் அப்படிச் சொல்லமாட்டீர்கள்... ஆனால் அவள் சருமத்தில் களங்கமுள்ளது!

நீங்கள் அப்படி எண்ணமாட்டீர்கள்... ஆனால் இப்பொழுது அக்குறை நீங்கிவிட்டது!

அதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. அத்தனை நுட்பமாக, துல்லியமாக அதை மறைத்திருக்கிறது இலேசான, லாவண்யமான லாக்டோ-காலமைன்! குறை எதுவாயினும் சாமர்த்தியமாக மறைக்கவல்ல மழமழப்பான இப்பவுடர் தளம்... உங்கள் மேனியெழிலுக்கு மேன்மை அளிக்கிறது.

லாக்டோ-காலமைன் மறைப்பதோடு, குறை நீங்கவும் உதவுகிறது!

ஆம், லாக்டோ-காலமைனின் சாதனை தான், துரிதமாய் வேலை செய்யும். உயர்தர காலமைனிலிருந்து விசேஷமாய்த் தயாரிக்கப்பட்ட இப் பவுடர் மற்றெந்த தளங்களையும்விடச் சிறப்பாய் உங்கள் சருமத்துக்குப் பணிபுரிகிறது...குறைகளை மறைப்பதுடன் அவை நீங்கவும் உதவுகிறது. சடுதியில், இதமுடன் தொல்லைகளைத் தீர்க்கிறது லாக்டோ-காலமைன்...நீங்கள் என்றும் விரும்பும் தெளிவான, ஒளி வீசும் மேனியெழிலை அது உங்களுக்கு வழங்குகிறது.

சருமக் கோளாறுகள், வெயில், அனல்காற்று ஆகியவற்றால் கன்றும் சருமம், சிசுக்களுக்கு வரும் அரிப்பு ஆகியவற்றுக்கும் அனுகுணமானது லாக்டோ-காலமைன்.

லாக்டோ-காலமைன் வரிசையில் மேலும் கிடைப்பவை: லோஷன், க்ரீம், டால்கம். எங்கும் கிடைக்கிறது.

லாக்டோ-காலமைன்—உங்கள் ஒப்பற்ற எழிலின் அடித்தளம்.



க்ருக்ஸ் இன்டர்ஃரான் லிமிடெட், பம்பாய்-18.

81-C1-5 TAM.

கயல்விழி

அகிலன்

ஒன்பதாம் அத்தியாயம்

களப் பலி

ஐம்படைத் தாலி இருக்குமிடத்தைத் திருவுடைத்தேவி கூறியதும், ''இப்போது அதைச் சற்று எடுத்துவர முடியுமா?'' என்றார் விழுப்பரையர்.

திருவுடைத் தேவி மௌனமாக எழுந்தார். தமது இல்லத்துக்கு வரவிருக்கும் நங்கை நல்லாளின் கழுத்துக்குச் செம்பொன்னால் திருத்



தாலி செய்ய வேண்டிய பொழுதில், குமாரனின் பயில் நடைப் பருவத்துக் கழுத்தணியை எடுத்து வரப் பணிக்கிறாரே! நேருக்கு மாறான சிந்தனையில் செல்கிறதே அவர் உள்ளம்?

ஆலவாய் அழகனையும் அங்கயற் கண்ணி அம்மையையும் மனத்தால் பூசித்துக் கொண்டே பொன்னும் மணிகளும் நிறைந்த பேழையைத் திறந்தார் திருவுடைத் தேவி. தமது குமாரன் மாலை சூடவிருந்த மங்கைக்காகப் பல ஆண்டுகளாகவே சேகரிக்கப் பெற்ற, அணிகலன்கள் அதில் நிறைந்திருந்தன. கேசம் முதல் பாதம் வரையிலும் அலங்கரித்து அழகு பார்ப்பதற்கான ஆபரணச் செல்வங்கள்! தமக்குப் பெண் குழந்தை பிறவாக் குறையைத் தமது மருமகள் வாயிலாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை அவருக்கு.

மைந்தன் சூடிக் கொண்டு ஆடிக் களித்த ஐம்படைத்தாலி அவர் கரத்தில் அகப்பட்டது. அதை எடுத்து உற்றுப் பார்த்தார். பசும் பொன்னால் செய்யப் பெற்ற ஐந்து அணிகளின் சேர்க்கை அது. அவர் அதை நன்றாகப் பார்த்தார். புதிய விழிகளோடும், புதிய கருத்தோடும் நோக்கினார். அணிகலன்களா அவை? அல்ல, அல்ல, படைக்கலன்கள்! பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவன் சிறுவனாக ஆடிக் களித்த போது அணிந்து கொண்ட கழுத்தணி அது.

மின்னும் பொன்னாலான, கயல், வில், வேல், வாள், கேடயம்!

விழுப்பரையர் தம்மிடம் திருவுடைத் தேவி அதனைக் கொடுக்கும்போது, தேவி

யாரின் விரல் நுனி அனலாய்க் கொதிப்பது கண்டார். வாங்கி அதை உற்று நோக்கினார். கயல், வில், வேல், வாள், கேடயம் என்ற ஒவ்வொன்றையும் பார்த்துக் கணக்கிட்டார்.

''இந்த நாட்டு ஆண் மக்களுக்கு நாம் எதற்காக ஐம்படைத்தாலியைச் சிறு பருவத்திலேயே சூட்டுகிறோம், தெரியுமா?'' என்று தேவியைக் கேட்ட விழுப்பரையர், ''அவர்களுடைய ஆண்மையையும் வீரத்தையும் அந்தப் பருவத்திலிருந்தே வளர்த்து வருவதற்குத்தான்!'' என்று அதற்கு மறுமொழியும் கூறினார்.

''இப்போது வந்து.....?'' திருவுடைத்தேவியால் இனியும் கேட்டுத் தெரிந்து கொள்ளாவிட்டால் நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது.



''ஆலவாய்நம்பி இந்தப் பாண்டிய மண்ணில் பிறந்தவன். அவன் ஒரு படைத் தலைவன். இப்போது இந்த நாட்டுக்குப் போர் வந்து விட்டது!'' அவ்வளவே போதும் திருவுடைத்தேவிக்கு. அவர் அனைத்தையுமே விளங்கிக் கொண்டு விட்டார்.

"போர் வந்து விட்டது!'' — இப்படியொரு செய்தி கேட்ட சங்ககாலத்து மங்கை நல்லாள் ஒருத்தி தனது ஒரே மகனைப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தாள். போரில் அவனுடைய மைந்தன் புறமுதுகு காட்டி ஓடி வந்தாலும்; பகைவரின் வேல் அவன் முதுகில் பாய்ந்து அவனைக் கொன்று விட்டதாம். யாரோ இப்படிக் கூறிய செய்தி கேட்டுக் குமுறினாள் தாய். மகன் இறந்து விட்டானே என்பதற்கல்ல; புறமுதுகு காட்டிக் கோழையாகச் செத்து விட்டானே என்பதற்காக!

வெருண்டெழுந்த அவள் வீரச் சூளுரைத்தாள். ''இந்தச் செய்தி மெய்யாளுல் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த கொங்கைகளைக் களத்திலேயே அறுத்தெறிவேன்!'' என்று அவள் நடந்தாள். ஆனல் அவளுக்குப் பிறந்தவனு புறமுதுகு காட்டுவான்? வீரனகவே நெஞ்சில் வேல் வாங்கித் துஞ்சியிருந்தான் அவன். அவன் மாண்டு கிடந்த அந்தக் காட்சியைக் கண்டவுடன் அவன் பிறந்த போது அடைந்த ஆனந்தத்தை விடப் பேரானந்தமடைந்தாளாம் அவள்.

விழுப்பரையர் வாயிலாகத் திருவுடைத் தேவி இந்தக் கதையை முன்னமேயே கேட்டிருக்கிருர். ஆனல் கதை அதோடு முடிந்து விட்டதாக அவருக்குத் தோன்றவில்லை. அந்தத் தாய் அந்தக் கணத்தில் வேண்டுமானல் அப்படி மகிழ்ந்திருக்கலாம். பிறகு எப்படி அவளால் தனது மகனின் நினைவில்லாமல் உயிர் சுமந்து வாழ முடிந்தது ? பத்து மாதம் சுமந்து, பல மாதம் பாலூட்டி, காளைப் பருவம் வரையிலும் கண்ணிமைக்குள் காத்து வளர்த்தவளல்லவா அவள்? காலமெல்லாம் அவனை நினைத்து அவள் என்ன பாடு பட்டிருப்பாள்?

திருவுடைத் தேவிக்கும் போர்க் கொடுமை என்ருல் என்னவென்று முன்னரே தெரியும். அவர் தமது இளமைப் பருவத்தில் விழுப்பரையரின் கைத்தலம் பற்றியவுடனேயே போரும் வந்து விட்டது. களம் புகுந்து விட்டார் கட்டிளம் காளையான விழுப்பரையர். அவர் மாண்டு விட்டதாகச் சிலர் கூறினர்கள். மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை பொய்த்து விடுமோ என்று தேவியார் ஏங்கித் தவித்த தவிப்பை இன்று நினைத்தாலும் அவர் உள்ளம் பதறியது.

அந்தப் புண் மறைந்து தழும்பாகி அது வடுப்பட்ட காலத்தில் அதை மீண்டும் கீறி விட்டுவிட்டாரே! மகனின் திருமணத்துக்கு மன மாளிகைகளை எழுப்பி விட்டு, அவருடைய துணை கேட்கப் போகும் நேரத்தில்தான அவர் போர்ச் செய்தி கூற வேண்டும்? ''பெண் குலமே, நீ அழப் பிறந்தாய்; கண்ணீர் வற்றும் வரையில் அழுது விடு! ஆண்கள் அழிக்கப் பிறந்தவர்கள்; அவர்களால் முடிந்த வரையில் அழிக்கட்டும்!'' கண்ணீர்ப் பெருக்கை மஞ்சத்தில் பொழிய விட்டு அவர் விம்மினர்.

விழுப்பரையர் உறங்கச் செல்லும் போது, ''கருக்கிருட்டு நேரத்தில் முதற் சேவல் கூவியவுடன் என்னையும் நம்பியையும் துயிலெழுப்பு'' என்று தேவியிடம் கூறியிருந்தார். பல நாட்கள் உறக்கமின்றிக் கழித்ததால் அன்றிரவு நல்ல உறக்கம் அவருக்கு. தேவியால் எப்படி உறங்க முடியும்?

விடிவெள்ளியைக் கண்டவுடனேயே தமது மைந்தனை எழுப்பி விட்டு, ''உன் தந்தையார் உன்னை அழைக்கிருர்'' என்ருர். இருவரும் தங்களது புரவிகளை அவிழ்த்துக் கொண்டு ஊருக்குள் கிளம்பினர்கள். ''இன்று நமக்கொரு நன்னாள்; வைகையில் நீராடிக் கொற்றவைத் தேவியின் முன்பு சூளுரைத்து நீ ஒரு வீர சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காகவே உன்னை அழைத்தேன்'' என்ருர் விழுப்பரையர்.

இளைஞனுக்கு ஏதும் விளங்கவில்லை. இரவில் தனது திருமணப் பேச்சு முடிந்திருக்குமென்றும் அது பற்றித் தனித்துப் பேசவே அவர் அழைத்திருப்பார் என்றும் அவன் நம்பினன். ஆனல் அவரோ, அப்படி ஏதாவது அவன் நினைத்து விடப் போகிருனே என்று, எடுத்த எடுப்பிலேயே தமது நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விட்டார்.

கிழக்கு வெளுத்த நேரத்தில், குளிர்ந்து போன ஈயப் பாகுபோல் வைகை நீரின் மேற்பரப்பு காட்சியளித்தது. ஊரை விட்டு நெடுந்தூரம் வந்தவுடன் வைகையின் குறுக்கே தமது குதிரையைச் செலுத்தினர் விழுப்பரையர். ஆலவாய் நம்பியும் பரியின் கடிவாளத்தோடு தனது நெஞ்சின் கடிவாளத்தையும் இறுகப் பற்றிக் கொண்டு அவரைத் தொடர்ந்து சென்ருன். ஆற்றின் மறு கரையில் குதிரைகளை மேய விட்டார்கள்; உடை வாட்களையும் கைப்பொருளையும் கரையில் வைத்து விட்டு நீரில் மூழ்கிக் குளித்தார்கள்.

ஈரம் உலரா உடையும் கைவாளுமாகத் தமது தனயனைப் பின்பற்றச் சொல்லி முன்னே நடந்தார் விழுப்பரையர். அப்போது இலையுதிர் காலமாதலால் ஆற்றங்கரைக் காட்டில் காய்ந்த சருகுகளும், தழையற்ற மொட்டை மரங்களும் பாலை நிலம் போன்ற தோற்றத்தை அதற்குத் தந்தன. ''நம்பி ! விரைவில் இந்த மொட்டை மரங்களில் தளிரும் மலரும் குலுங்கப் போகின்றன ; இந்தப் பாலைக் காட்சி சோலைக் காட்சியாக மாறப்போகிறது'' என்ருர்.

ஆலவாய் நம்பியால் அவன் தந்தையின் கருத்தை உணர முடியவில்லை. மொட்டை மரங்களின் மீது தென்பட்ட சில கழுகுகளே அவனுடைய கண்களில் நின்றன. திரும்பிய பக்கமெல்லாம் வெம்மையால் வாடிய பசுஞ் செடி கொடிகள் அவனுள் காரணமற்ற ஒரு

சோக உணர்வையே எழுப்பிக் கொண்டிருந்தன. காட்டுக்குள்ளிருந்த காளித் தாயைக் காணச் செல்கிறார் தந்தை என்பது மட்டிலும் அவனுக்கு உறுதியாகி விட்டது.

இலைகளற்ற மரச்சூழலுக்கு மத்தியிலிருந்த அந்தக் கோயில் தேடுவாரற்ற கோயிலாகவும் நாடுவாரற்ற வெற்றிடமாகவும் இப்போது காணப்பட்டது. பலிபீடம் பச்சை இரத்தம் கண்டு எத்தனை காலமாயிற்றோ, தெரியவில்லை. கருவறைத் திருவும் தனது தாகத்தின் வேகத்தைத் தணித்துக் கொள்ள முடியாதவள் போல் வாடியிருந்தாள். வைகைத் தண்ணீரால் அடங்குகிற தாகமல்லவே அவளுடையது?

'எத்தனை எத்தனை வீரர்கள் கூடி, எத்தனை எத்தனை விதமாகத் தங்களது பிரார்த்தனைகளை இங்கு செலுத்தியிருப்பார்கள்! விழாக் காலமென்றால் இந்தக் காடு முழுவதிலும் இவளுடைய செம்மை நிறைந்திருக்குமே!' என்று நினைத்தார் அவர். இரத்தச் சிவப்பில் பூக்கும் தன்மை கொண்ட செவ்வரளி, செம்பருத்தி, கலியாண முருங்கை, புரசு முதலியவை மட்டிலும் கோயிலைச் சுற்றி மண்டிக் கிடந்தன.

''ஆலவாய் நம்பி, இந்தா நீ அணிந்திருந்த ஐம்படைத்தாலி!'' என்று அவனிடம் நீட்டினார் விழுப்பரையர். அவன் கரம் நீட்டி அதை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். ''இன்று ஒரு நன்னாள் என்று கூறினேனல்லவா? ஆமாம், மிகச் சிறந்த பொன்னாள் இது!'' என அவரே மீண்டும் கூறினார்.

''நாமார்க்கும் குடியல்லோம்,
நமனை அஞ்சோம்!
ஏமாப்போம், பிணியறியோம்
பணிவோ மல்லோம்....!
என்னாளும் இன்பமே துன்பமில்லை

தந்தையும் மைந்தனும் ஒன்றாகக் குரலெழுப்பி அந்தத் தேவாரத் திருப்பதிகத்தை முழங்கினார்கள். கோடை வானத்திலே சூழ்ந்தெழுந்த இடிகளைக் கூடிக் கிடுகிடுத்தன அவர்தம் குரல்கள்.

ஆவேசம் கொண்டவர்போல் பேசலானார் சொல்லேர்ப் புலவரும் வில்லேர் வீரருமான விழுப்பரையர்:

''இந்த நாடு இந்தக் கணத்தில் தனது அடிமைத் தளையை ஆயிரம் சுக்கலாய் உடைத்தெறிந்து தன்னுரிமை பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கிறது! இனி இதை என்றும் எவராலும் அடிமை கொள்ள முடியாதவாறு காத்து நிற்போம்! பகைவருக்குப் பணியோம்; எமன் வரினும் அஞ்சோம்; இந்தத் தாயின் மேலாணை!''

நாடு தன்னுரிமை பெற்று விட்டதா! தலை நிமிர்ந்து நிற்கப் போகிறதா? இந்த நற்செய்தியை நம்பவே முடியவில்லையே! ஆலவாய் நம்பிக்கு ஆனந்தக் கூத்தாட வேண்டும் போல் தோன்றியது.

''முதன் முதலில் உனக்குத்தான் இந்த நற்செய்தியைக் கூறுகிறேன். அரசர் குலசேகர பாண்டியருக்கோ, இளவரசர் சுந்தர பாண்டியருக்கோ கூட இன்னும் இது தெரியாது. நான் புலவன்; வருவதை வருவதற்கு முன்பே கண்டு உன்னிடம் சொல்கிறேன்!''

'சோழப் பேரரசுக்கு இந்தச் செய்தி எட்டுமானால் நாட்டைச் சுட்டெரித்துச் சுடுகாடாக்கி விடுமே!' என்ற நினைவும் அவனிடம் துளிர் விட்டது.

அதனைக் கண்டு கொண்டவர்போல், ''அழிவுக்குத் துணிந்தவனால்தான் ஆக்கம் பிறக்கிறது உலகத்தில்! கோழைகள் தங்களையும் அடக்கி ஆள்வதில்லை, வீடாள்வதுமில்லை!'' என்றார். ''முதன் முதலில் களப்பலி கொடுப்பதற்குத்தான் உன்னை இங்கு அழைத்து வந்திருக்கிறேன்.''

பிறந்த பயன் பெற்று விட்ட பேரானந்தம் ஆலவாய் நம்பிக்கு. ஆனந்தக் கண்ணீர் சொரிய அந்த ஐம்படைத்தாலிக்கு முத்தம் கொடுத்தான். அதனைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். கற்புடைப் பெண்டிருக்குத் திருமாங்கல்யம் எத்தனை பெருமையுடையதோ அத்தனை பெருமையுடையது கடமைக் கற்புடைய வீரத் திருமகனுக்கு அந்தத் தாலி.

''ஐயா! நான் பாக்கியம் செய்தேன்; இந்த நாட்டுரிமையைக் காக்க எத்தனை முறை பிறந்தாலும் அத்தனை முறையும் என்னைக் களப்பலி கொள்ளலாம்.''—ஆலவாய் நம்பி கரம் கூப்பி மண்டியிட்டு அவர் முன்பு சிரம் தாழ்த்தினான்.

''நம்பி, எழுந்திரு! உன் உயிரைக் களப்பலி கொடுத்தால் போதாது. அதைக் கொடுக்க வேண்டிய காலம் விரைவில் வரும்; அப்போது கொடுக்கலாம். இப்போது நீ உன் உயிரினும் மேலான ஒன்றை, உன் காதலியிடம் நீ கொண்டுள்ள அன்பை, இந்தக் காளித் தாயின் முன்பு பலியிட்டுத் தர வேண்டும்!''

ஆலவாய் நம்பி இதைக் கேட்டவுடன் உயிரொடுங்கிய சவமானான். அவனது சிரம் துண்டிக்கப் பெற்று அந்தக் காளித் தாயின் திருவடிகளில் வீழ்ந்

இருந்தால், அவன் உடல் எப்படியெல்லாம் துடித்திருக்குமோ தெரியாது. ஆனால் இப்போது அவன் உயிர் துடித்த துடிப்புக்கு முன்பாக அது அற்பத்திலும் அற்பமான காட்சியே.

''அந்தப் பெண்ணின் உயிரை உன் உயிரிலிருந்து பிரித்துப் பலியிட்டு, அந்த இடத்தில் இளவரசர் சுந்தர பாண்டியரை நீ வீற்றிருக்கச் செய்ய வேண்டும். இளவரசர் சுந்தர பாண்டியரின் உருவத்தில் முளைத்துவிட்டது விடிவெள்ளி. அவருடைய உடல், உயிர், மானமெல்லாம் உன் பொறுப்பில் இன்று விடுகிறேன். அவரைக் காப்பது இந்த நாட்டைக் காப்பதற்குச் சமமானது. உன் உள்ளத்திலே ஓர் அணு அளவு இடமும் இனி யாருக்கும் கொடுக்கக் கூடாது என்பதால்தான் முதலில் அவளை இன்று உன் இதயக் கோயிலின் பலிபீடத்தில் காவு கொடுக்கச் சொல்கிறேன். பெண்டிரின் உள்ளத்தில் கணவனும் வீரனின் உள்ளத்தில் தலைவனும் தெய்வமாக விளங்க வேண்டும்!''

''அவ்வாறே அவளைக் கொன்றுவிட்டேன் ஐயா!'' என்று நாத் தழுதழுக்கக் கூறினான் ஆலவாய் நம்பி. மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்தான்.

''உனக்கு ஒரு புதிய பொறுப்புக் கொடுக்கிறேன். நீ ஏழகப் படையிலிருந்து நம்பிக்கை மிகுந்த சிலரைப் பொறுக்கி யெடுத்து, ஆபத்து உதவிகளுக்குரிய வீர சபதம் பெற்றுக் கொள்ள வேண்டும். நீயே அதன் தலைவன். இளவரசரை நிழலாய்த் தொடரும் முதல் ஆபத்து உதவி நீதான்! இப்போது நீ அந்தச் சூளுரைத்து ஆணையிட்டுக்கொள்!''

''தாயே! என்னுயிர் போக்கியும் என் தலைவர் சுந்தரபாண்டியர் உயிரினைக் காப்பேன். அப்படிக் காக்கத் தவறினால் உன் முன்னால் வந்து என் உடைவாளாலேயே என் சிரத்தை உனக்குக் காணிக்கையாக்குவேன்.''

வீரர்கள் வழக்கமாய்ச் செய்துகொள்ளும் இந்தச் சபதத்தால் விழுப்பரையரின் மனம் முழுமையாக நிறைவு கொள்ளவில்லை.

''இப்படியும் சொல்லிச் சூளுரை செய்!'' என்றார்: ''இளவரசைக் காக்கத் தவறவே மாட்டேன்; காக்கும் முயற்சியிலே நான் உயிர் நீத்தால், என் தந்தையார் உள்ளவரையிலும் அவர் உள்ளத்தில் உறைந்து வாழ்வேன். இல்லையேல் முதலில் என் தந்தையாரின் சிரமரிந்து உனக்குக் காணிக்கை செலுத்திவிட்டு அடுத்தாற்போல் என்னையே தருவேன்.''

அவரை ஏறிட்டுப் பார்த்தான். அவர் சிலையாகி நின்றார்.

தனயன் தயங்கினானில்லை. மந்திரத்தால் கட்டுண்டவன் போல் அவ்வாறே வாளெடுத்துச் சூளுரைத்தான். விழுப்பரையரின் பூரிப்புச் சொல்லிலடங்காது. தாம் முற்பிறவியில் செய்த பெரும் பேறே புதல்வனின் உருவாக வந்து பிறந்திருப்பதாய்க் கண்ணருவி பொங்க விட்டார் அவர். அவனை நெஞ்சாரத் தழுவிக்கொண்டு, ''தாயே! இந்த மண்ணில் உரிமை மலர்ந்து விட்டது! உரிமை மலர்ந்து விட்டது!'' என்று கூவினார்.

பத்தாம் அத்தியாயம்

முதல் முழக்கம்

தெற்கே ஒருபுறம் குமரிமுனை வரையிலும் மறுபுறம் சேது சமுத்திரக் கரை வரையிலும் பரவியிருந்த பாண்டிய மண்டலத்தின் வளநாட்டுத் தலைவர்கள் அனைவரும் குலசேகர பாண்டியரின் அரண்மனைப் பேரவையில் குழுமியிருந்தனர். மறவர் படைத் தலைவர் மழவச் சக்கரவர்த்தி, ஏழகப்படைத் தலைவர் அழகிய பெருமாள், அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபர், அவைப் புலவரும், அந்தரங்க ஆலோசகருமான காரணை விழுப்பரையர் முதலானோர் தம் தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

பாண்டிய நாட்டின் பழம் பெருமை மிக்க சிங்காதனங்கள் இரண்டும் இரு பெரும் சிங்கங்களைச் சுமந்து கொண்டிருந்தன. 'மழவராயன்' என்ற ஆசனத்தில் குலசேகர பாண்டியரும், 'காலிங்கராயன்' என்ற ஆசனத்தில் சுந்தரபாண்டியனும் வீற்றிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஏதோ மிகப் பெரிய விஷயம் ஒன்றை முடிவு செய்வதற்காகவே அவ்வளவு பேரும் அங்கு கூடியிருந்தார்கள் என்பது ஒவ்வொருவரது முகத்திலிருந்தும் தெரிந்தது. வளநாட்டுத் தலைவர் ஒவ்வொருவரும் பாண்டியரின் அதிகாரத்தின் கீழ், நாடுகள் என்றும் கூற்றங்கள் என்றும் பிரிக்கப்பட்ட பல பகுதிகளை அரசின் ஆணைப்படி ஆட்சி செலுத்தி

வந்தவர்கள். அவர்கள் அனைவருமே அங்கு குழுமியிருந்தார்கள் என்றால், பாண்டிய நாடு முழுதுமே அந்த அவைக்குள் நிறைந்து விட்டதுபோலத்தான்.

அமைச்சர் சயங் கொண்ட சோழ வல்லபரின் முகம் மட்டிலும் உயிரற்றுத் தென்பட்டது. மறுநாள் தம்மிடம் முடிவு கூறுவதாகத் தெரிவித்த பாண்டியர், அப்படிக் கூறாமல், பாண்டிய மண்டலத்தையே அங்கு கூட்டிவிட்டது தான் அவருக்கு வேதனையைத் தந்தது.

அவர் சோழ நாட்டுத் தூதுவர்களிடம் அப்போதே ஓலை கொடுத்து அனுப்பி விட்டார். தாமதத்தைச் சிறிதுகூட மன்னிக்காதவர் குலோத்துங்க சக்கரவர்த்தி. ஆகவே, பாண்டியருக்கு உடல் நலம் சரியில்லையென்றும், விரைவில் தாமே மறுமொழியோடு சக்கரவர்த்தியை வந்து சந்திப்பதாகவும் எழுதிவிட்டார்.



இங்கோ பாண்டியர் அதற்குள் மண்டலத்தையே தமது மண்டபத்துக்குள் நிரம்பி வழியச் செய்திருக்கிறார். எதற்காக இந்த ஏற்பாடுகள்?

குலசேகர பாண்டியர் சோழச் சக்கரவர்த்தி தமக்கு அனுப்பி வைத்த ஓலை பற்றிக் குறிப்பிட்டு விட்டு அதையே படித்துக் காட்டும்படி தமது திருமந்திர ஓலையாளிடம் நீட்டினார். இரகசியமாக அனுப்பப்பட்ட செய்தி இந்த அளவுக்குப் பகிரங்கமானவுடனேயே அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபருக்கு அங்கு கொஞ்சமும் இருப்புக் கொள்ளவில்லை. முள்ளின் மேல் அமர்ந்தவர் போல் புழுங்கத் தொடங்கினார்.

சபை நடுவே ஓலையைப் படித்த அதிகாரியின் குரல், அதன் கடைசி வரிகளைப் படிக்க முற்பட்டபோது தழுதழுத்தது. அவருடைய கண்களில் நீர் நிறைந்ததால் அதைத் துடைத்துவிட்டுக்கொண்டு அவர் படிக்கலானார்.

''சக்கரவர்த்திகளுக்கு மதுரை மாளிகையில் வீராபிஷேகம் நடக்கும்போது ஏதேனும் விரும்பத் தகாத செயல்கள் நடந்து அதன் பெருமைக்குப் பங்கம் விளையக் கூடாது. அதற்காகவே விழா முடியும்வரையிலும் இளவரசர் சுந்தர பாண்டியனைச் சிறை செய்து நிலவறைக்குள் வைத்திருக்க வேண்டும்.''

வள நாட்டுத் தலைவர்களின் இரத்தம் கொதித்தது. ஏழகப் படைத் தலைவர் அழகிய பெருமாள் தமது பற்களைக் கடித்தார். மறவர் படைத் தலைவரான மழவச் சக்கரவர்த்தியின் விழிகள் அனலைக் கக்கின. அவர்களுடைய உணர்ச்சிகளை அளவெடுத்துவிட்ட பாண்டியர் கூறினார் :

''சுந்தரபாண்டியன் மீதுள்ள பேரன்பால் உங்களது உள்ளம் குமுறுவதை நான் அறிந்து கொண்டு பெருமைப் படுகிறேன். உங்களுடைய அன்பின் வலிமையாலேயே எதிர்காலத்தில் இந்தப் பாண்டிய மண்டலத்தின் ஆட்சிப் பொறுப்பைச் சுமக்கப் போகிறவன் அவன். அவனுக்கு ஓர் இழுக்கென்றால் அது பாண்டிய நாட்டின் பெருமைக்கே இழுக்கு என்று நீங்கள் கருதுவது முற்றிலும் பொருத்தமானதுதான்.''

விழுப்பரையர் தமது ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார். சயங்கொண்ட சோழ வல்லபரின் சிரம் தாழ்ந்தது. பாண்டியரின் குரல் தொடர்ந்து ஒலித்தது.

''இதைவிட முக்கியமான விஷயம் ஒன்று அந்த ஓலையில் மறை பொருளுடன் கூறப்பட்டிருக்கிறது. பாண்டிய நாட்டுக்குச் 'சோழ பாண்டிய மண்டலம்' என்று பெயர் சூட்ட ஒப்புக் கொள்வதன் மூலம் நாம் நேரடியான சோழ ஆட்சிக்கே இந்தநாட்டைவிட்டு விடச் சம்மதிக்கிறோம். இப்போது திறை வாங்கும் மேலாட்சி மட்டும் இருக்கிறது. என் ஆயுளுக்குப் பிறகோ அல்லது அதற்குள்ளேயோ நேரடியான சோழர்களின் ஆட்சியே இங்கு வந்து விடும். சுந்தர பாண்டியன் இனி இந்த நாட்டுப் பொறுப்பை ஏற்க நினைக்கக் கூடாது என்பதற்காக இப்போதே சோழப் பேரரசு நமக்கு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறது.''

சயங்கொண்ட சோழ வல்லபர் திடுக்கிட்டார். பாண்டியரின் நுண்ணறிவுக்குக் குலோத்துங்க சோழரின் நுணுக்கமான ராஜதந்திரம் புலப்பட்டு விட்டது. அதை அவர் வெளிப்படையாகவே கூறியும் விட்டார். — இதைப் புரிந்து கொண்ட வல்லபரின் உள்ளம் நடுக்கம் காணத் தொடங்கியது. (தொடரும்)

வழக்கறிஞர் வரிசை

'முருகா' என்றதுமே நினைவில் திருத்தணி தோன்றுவது சகஜம். திருத்தணி நினைவுக்கு வந்துவிட்டால் கூடவே மனத் திரையில் தோன்றுபவர் திருப்புகழ்மணி கிருஷ்ண சாமி ஐயர்தான். ஆண்டு முழுவதும் அகத்திலே படியும் அழுக்கையும் இருளையும் அந்த ஆண்டவனின் சன்னதியிலே பஜனை மூலம் போக்கிப் புத்தாண்டுக்கு அருளையும் ஒளியையும் சேர்த்து வரப் பக்த கோடிகளுக்கு இந்த வழி வகுத்துக் காண்பித்தவர் திரு கிருஷ்ண சாமி ஐயர்.

'அவர் கிரிமினல் சிவில், துறைகளில் தொழில் நடத்தும் தீவிரத்தை விடப் பன் மடங்கு அதிகமாகவே பக்தித் துறையில் தீவிரமாகப் பிராக்டீஸ் செய்கிறார்' என்று அவர் நண்பர்கள் குறிப்பிடுவது உண்டு. தொழில் முறையில் அவர் ஓர் அனுபவ மிக்க வழக்கறிஞர். ஆத்மீகத் துறையில் அவர் ஒரு பழுத்த முருக பக்தர். 'தொழில் வேறு பக்தி வேறு. இரண்டும் ஒன்றில் ஒன்று கலவாது தனித்து நிற்கும்படி நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று அவர் அடிக்கடி கூறுவது உண்டு.

திருவாடி எம். கிருஷ்ணசாமி ஐயர் திருப்புகழ்மணி என்ற பட்டத்தைப் பெற்றார். பட்டத்தின் சுருக்கமான டி. எம். மும் இயற்கையாக அமைந்த டி. எம்.மும் எத்தனை பொருத்தமாக இருக்கிறது!

1885ம் ஆண்டில் திருவாடியில் நடுத்தரக் குடும்பத்தில் தோன்றிய திரு ஐயரின் தந்தை வழக்கறிஞராக இருந்தவர் இல்லை. அதே போல் ஐயரின் குமாரர்களும் வழக்கறிஞர்களாகப் பணியாற்ற முன்வரவில்லை. வேறு தொழிலில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இது அவருக்குப் பரம்பரைத் தொழில் அல்ல.

பச்சையப்பன் கல்லூரி, கிறிஸ்துவக் கல்லூரி, சென்னை சட்டக் கல்லூரி முதலியவற்றில் முதலிடத்தில் நின்று படித்துப் பட்டம் பெற்று திரு டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் 1907ம் ஆண்டில் தம்மை வக்கீலாகப் பதிவு செய்து கொண்டார். அந்த நாட்களில் அவருக்கு சீனியர்களாக இருந்தவர்கள் கோவிந்தராகவ அய்யரும், சேலம் சுப்பிரமணிய ஐயரும் ஆவார்கள். திரு சுப்பிரமணிய ஐயர் உடல் நலம் குன்றி வீட்டில் தங்கிவிட்டபோது ஜூனியராக இருந்த ஐயருக்கு அவருடைய ஆலோசனையின்பேரில் கோர்ட்டில் வாதாட வாய்ப்புக் கிடைத்தது. அதுவே அவருடைய அநுபவத்துக்கு அஸ்திவாரமாகவும் அமைந்தது. அவர் வழக்கறிஞராகத் தொழில் நடத்த ஆரம்பித்த பதினைந்து வருடங்களுக்குள்ளாகவே உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளின் பாராட்டுதல்களுக்குப் பாத்திரமானார். 'இந்த வழக்கின் வாதங்களை இவ்வளவு தெளிவாகவும், திறமையாகவும் எடுத்து விளக்கிய திரு டி. எம். கிருஷ்ணசாமி ஐயருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்' என்று வாலஸ் என்ற நீதிபதி ஒரு தீர்ப்பில் கூறியிருக்கிறார். ஒரு நீதிபதியால் பாராட்டப்படுவது என்பது 'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி' என்று சொல்வதுபோல் தான். அதுவும் எழுத்திலேயே பாராட்டப்படுவது என்பது அபூர்வமான விஷயம்தானே?

திரு ஐயர் தொழிலை ஆரம்பித்த நாட்களில் கிரிமினல் சட்டத் துறையில்தான் அதிக கவனம் செலுத்தினார். பிரசித்தி பெற்ற 'ஆஷ்' கொலை வழக்கில்கூட எதிர்த் தரப்பில் ஓர் ஆசாமிக்காக ஆஜரானார். அப்புறம் நாளடைவில் எல்லாத் துறைகளிலுமே தம் கவனத்தைச் சம அளவில் திருப்பி விட்டார். வழக்காட அவர் சென்ற ஊர்களுக்கெல்லாம் பின்னால் தம் பஜனைக் குழுவுடனும் போய்ப் பக்தி பரவசராகி நின்றிருக்கிறார்.

திரு ஐயரைத் திருவாங்கூர் உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாய்க் கொண்டு போய் அமர்த்திய பெருமை சர் சி. பி. ராமசாமி ஐயரையே சாரும். 1943லிருந்து 1947 வரை சுமார் நான்கு வருட காலம் ஐயர் அவர்கள் அந்தப் பதவியில் வீற்றிருந்தார். அந்த நான்கு ஆண்டு காலத்தில் நீதி வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தீவிர முயற்சி எடுத்து உயர் நீதி மன்றத்திலும் வெளியூர் நீதி மன்றங்களிலும் வெகுவாகக் குறைத்திருக்கிறார்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் அவர் பெற்ற பட்டம் 'ராஜ்ய சேவா பிரவீண' என்பதாகும். 'திருப்புகழ் ஜோதி' என்ற பட்டத்தைக் கொடுத்தவர் ரிஷிகேசத்திலிருந்த சுவாமி சிவானந்தா.

திரு ஐயர் எல்லா வகையிலும் அதிருஷ்டசாலி. நல்ல குமாஸ்தாவையும் பெற்றிருக்கிறார். திரு சீனிவாசய்யர் அவருடன் நாற்பது வருடகாலமாக இருக்கிறார். லா ஜர்னல்களிலுள்ள அத்தனை கேஸ் விவரங்களும் அவர் விரல் நுனியில் இருக்கும்.

திரு ஐயர் தம் ஜூனியர்களுக்குக் கடிய உழைப்பைக் கற்றுக் கொடுத்து அதே சமயம் அன்பையும் பொழிவதில் நிபுணர். அந்த அன்பைத் தம் ஜூனியர்களுக்கு மாத்திரம் என்று ஒதுக்கி வைக்க மாட்டார். தமக்குத் தெரிந்த அத்தனை இளம் வழக்கறிஞர்களிடமும் காண்பித்து உற்சாகமூட்டுவார்.

அவரிடம் ஜூனியர்களாக இருந்தவர்களில் பலர் இன்று உயர்ந்த பதவியில் இருக்கிறார்கள். இப்போது சென்னை உயர் நீதி மன்ற நீதிபதியாக இருக்கும் திரு நடேசனும் கர்நாடகப் பிரதேச உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருக்கும் திரு நாராயண பாயும் இவரிடம் ஜூனியர்களாக இருந்தவர்கள்.

ஒரு சமயம் பணப்பசை இல்லாத ஒரு கட்சிக்காரர் அப்பீலுக்காக வந்த இடத்தில் இவருடன் ஆறு மாதமாகத் தங்கிவிட்டார். வெளியூர் பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தப்பட்ட வழக்கு. ஆள் மாறாட்டம் செய்துவிட்டதாகக் குற்றச்சாட்டு. கீழ்க் கோர்ட் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை அளித்து விட்டது. அதை ஆட்சேபித்து அப்பீல்



ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர்

செய்ய அவர் உயர்நீதி மன்றம் நாடி வந்தார். ஐயரிடம் தம் வழக்கை ஒப்புவித்து அவர் கூடவே இருந்தார். உயர் நீதி மன்றத்தில் அவர் அப்பீல் ஆறு மாத காலம் நடந்தது.

தீர்ப்பு அளிப்பதற்கு முதல் நாள் மற்பகல். ஐயர் வீட்டில் வக்கீல், கட்சிக்காரர், மற்றும் உறவினர்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சமையற்காரரிடம் அந்தக் கட்சிக்காரர் பொரித்த அப்பளம் ஒன்றை மீண்டும் கொண்டு வரச் சொன்னார். பொரித்த அப்பளம் தீர்ந்துவிட்டது என்று சமையற்காரர் சற்று அலட்சியமாகச் சொல்லி விட்டு அடுத்த அயிட்டத்திற்குப் போய் விட்டார். வக்கீல் அந்த வேண்டுகோளையும் பதிலையும் கவனித்து விட்டார். உடனே, கட்சிக்காரர் முகம் கோணக் கூடாதென்பதற்காகப் பக்கத்திலிருந்த உறவினரிடம் தணிந்த குரலில் ஆங்கிலத்தில், உடனடியாக மீண்டும் அப்பளம் பொரித்து வந்து அவருக்குப் பரிமாறி விட்டு அப்புறம் சாதம் எடுக்கச் சமையற்காரருக்கு உத்தரவு கொடுக்கச் சொன்னார். அந்தக் கட்சிக்காரருக்கு ஆங்கிலம் தெரியாது. சில நிமிடங்களில் பொரித்த அப்பளம் வந்து சேர்ந்த பிறகே மீண்டும் சாப்பாடு தொடங்கியது.

இது பற்றிப் பிற்பகலில் ஐயர் தம் குமாஸ்தாவிடம், 'நாளைக்கு அவர் வழக்கில் தீர்ப்பு எப்படி ஆகுமோ? கீழ்க் கோர்ட்டு தண்டனை உறுதி செய்யப்பட்டு ஆறு மாதம் உள்ளே போய்விட்டால், அந்த ஆறு மாத காலத்துக்கு யார் அவருக்குப் பொரித்த அப்பளம் கொடுக்கப் போகிறார்கள்? அந்த ஏக்கம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் அப்படிச் சொன்னேன்' என்று விளக்கம் கொடுத்தார்!

அதோடு நிற்காமல் குமாஸ்தாவுக்கு வேறு ஒரு வேண்டுகோளும் விடுத்தாராம். 'நாளை தீர்ப்பு அறிவிக்கப்பட்டு முருகன் அருளால் அவர் வெற்றி பெற்றால் 'ஜெயித்தது கேஸ்' என்றே வந்து சொல். கேஸ் ஜெயித்தது என்று சொல்ல வந்தால் கூட ஜெயித்தது என்ற வார்த்தையைக் கேட்கு முன் அவருக்கு ஏதும் அதிர்ச்சி ஏற்படலாம். 'கண்டேன் சீதையை' என்ற ஹனுமானின் வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்' என்றாராம். மனித சுபாவத்தை அவ்வளவு தூரம் ஆராய்ந்து வைத்திருப்பவர் திரு ஐயர். மறு நாள் சாதகமான தீர்ப்புக் கிடைத்து அவர் கட்சிக்காரர் மலர்ந்த முகத்துடன் வக்கீலிடம் விடைபெற்றுக் கொண்டார். அவருடைய நன்றி உணர்ச்சிதான் அவர் கொடுத்த பீஸ்!

'ஓய்வுள்ள நேரமெல்லாம் ஓங்கார முதலை ஓதலாம், உணரலாம்' என்பதை ஒவ்வொரு நாளும் செயலில் காட்டும் ஐயர் அவர்கள் சென்ற ஆண்டு இறுதியில் உடல் நலமில்லாமல் போனதிலிருந்து ஐம்பத்தியாறு வருடங்களாக நடத்திய தீவிர பிராக்டீசை நிறுத்திக்கொண்டு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த ஓய்வுக்கு முன்னால் அவர் ஆஜரான வழக்கும் முருகன் சம்பந்தப்பட்டது. சென்னையில் உள்ள ஒரு வியாபார ஸ்தாபனம் வெகு நாட்களாகவே வேல் தாங்கும் பால முருகன் படம் ஒன்றை அச்சிட்டு விநியோகித்து வருகிறது. பல பூஜாக் கிருகங்களில் அந்தப் படம் இடம் பெற்றிருக்கிறது. மதுரைக்காரர் ஒருவர் அதே முருகன் படத்தை அங்கும் இங்கும் கொஞ்சம் வர்ணத்தை மாத்திரம் மாற்றி வெளியிட்டார். சென்னை அன்பர் வழக்குப் போட்டார். காப்பிரைட் இல்லாதபோதிலும் மதுரைப் படம் என்னவோ காப்பி என்பதை உணர்ந்த முஸ்லீம் நீதிபதி ஒருவர் வழக்கை ஏற்றுச் சென்னைக்காரருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார். மதுரைக்காரர் அப்பீல் செய்தார். அப்பீலில் முதல் தீர்ப்பை ஏற்று மதுரைக்காரருக்குப் பாதகமாகவே முடிவாயிற்று. ஒரிஜினல் முருகன் சார்பில் வாதாடியவர் திரு ஐயர்.

''உலக வாழ்க்கையில் தாமரை இலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் இருக்கும் வைராக்கிய சீலர். ஹைகோர்ட் வக்கீலாக இருந்தாலும் தொழிலுக்குரிய சட்டையைக் கழற்றி எறிந்ததும் எளியரில் எளியராகி, குழந்தையில் குழந்தையாகி, கையிலே தாளம் ஏந்தி முருகன் புகழ் பாடி மனம் உருகிக் கண்ணீர் சொரியும் திருப்புகழ் மணி'' என்று பேராசிரியர் கல்கி ஒரு சமயம் திரு ஐயரைப் பற்றிக் குறிப்பிட்டார்.

ஓய்வாக இருக்கும் திரு ஐயரைப் பார்த்து அவருடன் சற்று நேரம் பக்தி பரவசம் பொங்கும் பேச்சில் லயித்துத் திரும்புபவர்கள் ஐயர் வேறு முருகன் வேறு என்ற நினைவில்லாமல் திரும்புகிறார்கள் என்றால் ஆச்சரியமில்லை.

'தொழிலில் பக்தியைக் காண்பி. ஆனால் பக்தியைத் தொழிலாகச் செய்யாமல் ஆத்மார்த்தமாகச் செய்' என்றுதான் திரு ஐயர் தம்மை நாடி வருபவர்களிடம் சொல்கிறார்.

அதிசயமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பது



இளைய பாரதத்தினர்



இலங்கையில் அசோகா ஹாஸ்டல் திறப்பு விழாவுக்காக வந்திருந்தார் டாக்டர் சி. பி. அவர்கள். அப்பொழுது அந்த இளம் ஆசிரியரை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

''நீங்கள் இந்தியரா? இலங்கையரா?'' என்று கேட்டார் சி. பி.

''நான் இந்தியன். கும்பகோணத்தான். ஆனால் இலங்கைப் பிரஜை!'' என்றார் அந்த இளம் ஆசிரியர்.

''உங்களுக்குப் பிரஜா உரிமை கிடைத்து விட்டதா? ஆச்சரியமாயிருக்கிறதே! உங்களுக்கு வயதென்ன?''

''இருபத்திரண்டு. 'கதம்பம்' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியன்!'' என்றார் மோகன்.

குதிரைக் கொம்பான இலங்கைப் பிரஜா உரிமையைப் பெற்று, தாய்நாட்டிலிருந்து சேய்நாட்டுக்குப் போய்ப் பத்திரிகை நடத்தும் அந்த இளைஞர் மோகனைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார் டாக்டர் சி. பி. ஆனால் அந்த இளைஞர், 'அறுபது டன் குன்ய டாங்கி' என்று பேராசிரியர் கல்கி அவர்களால் பாராட்டப்பட்ட 'வீரகேசரி' ஆசிரியர் திரு கே.வி. எஸ். வாஸ் அவர்களின் புதல்வர் என்று சி.பி. அவர்களுக்குத் தெரிந்திருந்தால் இத்தனை தூரம் அவர் வியக்க வேண்டியிருக்காது!

தந்தையும் தனயனும் ஒரே மாதிரித் துறையில் — ஆசிரியப் பணியில் — ஈடுபட்டிருப்பது அபூர்வமல்லவா? திரு வாஸ் அவர்கள் பி. ஏ. (ஹானர்ஸ்) பரீட்சை எழுதிவிட்டு இலங்கையில் 'வீரகேசரி'ப் பத்திரிகையில் முதலில் துணையாசிரியராகச் சேர்ந்தார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இளைஞர் மோகன் கும்பகோணத்தில் இரண்டாம் பாரம் படித்துவிட்டுப் பிறகு இலங்கை பெனடிக் கல்லூரியில் சீனியர்வரை படித்து முடித்ததும் பத்திரிகைத் துறையில் புகுந்து விட்டார். கல்லூரி நடத்தும் கட்டுரைப் போட்டிகளிலெல்லாம் மோகனுக்குத்தான் முதல் பரிசு கிடைத்து வந்தது. ரேடியோ சிலோனில் இவரது குழந்தை நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டு வந்தன. முதல் தடவையாகக் குழந்தைகள் புத்தகக் கண்காட்சியும், குழந்தைகள் கவியரங்கமும் நடத்தினார் மோகன். இப்படியாகச் சின்ன வயதிலிருந்தே தாம் பணியாற்றத் திட்டமிட்ட துறைக்கான ஆர்வத்தை உரமிட்டு வளர்த்து இன்று முப்பது டன்னுக்குக் குறையாத டாங்கியாக விளங்குகிறார் அவர்.

நாங்கள் பேசிக் கொண்டிருந்த வேளையில் அவர்கள் வீட்டிலிருந்த குழந்தையொன்று விஷமம் செய்து கொண்டிருந்தது. திடீரென்று மோகன், ''சப்பாத்தியைத் தொடாதே!'' என்றார் குழந்தையிடம். நான் வியந்து குழந்தைப் பக்கம் திரும்பியதைக் கண்டு, ''சார்! சப்பாத்தி என்றால் இலங்கையில் செருப்பு என்று அர்த்தம். பழக்கத்தின் காரணமாக இந்த வார்த்தை வந்து விட்டது'' என்றார் சிரித்துக் கொண்டே.

உடனே எனக்குத் தெரிந்த இலங்கை மொழியில் ''உங்கள் கந்தோர் எங்கிருக்கிறது?'' என்று அவரிடம் கேட்டு வைத்தேன்.

''எங்கள் வீட்டின் கீழ்ப்பாகத்தில் அச்சகம் இருக்கிறது. அச்சடிக்கும் இயந்திரங்கள் மட்டும் இன்னும் வரவில்லை. வெளி அச்சகத்தில்தான் பிரிண்டிங் மட்டும் செய்கிறோம். எனக்கு அச்சுக் கோக்கக் கூடத் தெரியும்!'' என்றார் மோகன் பெருமையுடன்.

''உங்கள் பத்திரிகை கதம்பம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?''

''ஸார்! 1959ம் வருஷம் 'கதம்பம்' வெளிவரத் தொடங்கியது. இலங்கையில் பிளாக் செய்வது, சித்திரக்காரர் கிடைப்பது சிரமமாயிருந்த போதிலும் எப்படியோ சமாளித்துப் பத்திரிகையைக் கொண்டுவந்து விடுகிறோம். என் தகப்பனார் முதலில் நான் சிறுவனாயிற்றே என்று மேற்பார்வையிட்டு வந்தார். மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவருக்கு என் திறமையில் நம்பிக்கை பிறந்து விட்டது. அரசியல் சம்பந்தமாக அவரிடம் யோசனை கேட்பதோடு சரி!'' என்று தம் பத்திரிகை சுதந்திரத்தைத் தெளிவுபடுத்தினார்.



''எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஏஜன்டுகள் வியாபாரிகளாக இருப்பார்கள். ஆனால் என் பத்திரிகைக்கு ஏஜென்டுகள் தனி ரகம்!'' என்று ஒரு புதிரைப் போட்டார் மோகன். அவரே பதிலும் கூறினார் :


''கல்லூரிகளில், பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் என் பத்திரிகைக்கு ஏஜண்டுகளாகப் பணியாற்றுகிறார்கள். படிக்கும் போதே தொழில் செய்யும் மாணவர்கள் அயல்நாடுகளில்தான் இருப்பார்கள் என்றில்லை; இலங்கையிலும் இருக்கிறார்கள். மாணவர்களே என் பத்திரிகைக்கு ஏஜண்டுகளாக இருப்பதால் விரைவில் 'கதம்பம்' மாணவர் உலகில் பரவிவிடுகிறது!'' என்று தம் தொழில் ரகசியத்தை அம்பலப்படுத்தி விட்டார் மோகன்.

''உங்கள் பத்திரிகையில் சினிமாவுக்கே பிராதான்யம் கொடுக்கிறீர்களே....!''

''ஆமாம்! இலங்கையில் சினிமா சம்பந்தமான செய்திகளை நிறைய விரும்புகிறார்கள். பத்திரிகை நிறைய விற்க இதைக் கையாள்கிறேன். இதில் தவறென்ன?''

'இளவட்டம். இப்படித்தானே பதில் வரும்? வயது முதிர்ந்தால் இயல்பாக ஏற்படும் மன வளர்ச்சியுடன் பத்திரிகையின் அடிப்படையான குறிக்கோளும் மாறி உயர்ந்த நோக்கங்களுடன் வெளிவரத் தொடங்கும்' என்று நினைத்துக் கொண்டேன்.

இளம் ஆசிரியர் மோகனுக்குப் புகைப் படம் பிடிப்பதில் ஆர்வம்; அதோடுமட்டுமல்ல; அரசியல், திரை உலகப் பிரபலஸ்தர்களோடு தம்மையும் சேர்த்துப் படம் பிடித்துக்கொள்வதில் அளவற்ற ஆசை. பாரதப் பிரதமர் நேருஜியோடு தாம் படம் பிடித்துக்கொள்ளும் பாக்கியம் கிட்டியதைக் கதை கதையாகச் சொன்னார். - **குண்டுமணி**



நீரோட்டம்

எஸ். ரங்கநாயகி

பதினான்காம் அத்தியாயம்

சுசிலா நாடகத்துக்குப் போகலாம் என்று சொன்னதை விடக் கீதாவின் அழைப்புத்தான் தியாகுவுக்குப் பெரிதாகப் பட்டது. ஆகவே, ''நீ இனி கிளம்புவதற்கு நேரமாகும். நாளை இதே சபாவில் இதே நாடகம். அதற்குப் போகலாம்.....'' என்று சுசிலாவிடம் கூறியபடி தியாகு தெருவில் இறங்கி விட்டான். மேலே நடந்தும் விட்டான்.

சுசிலா சினத்துடன் தந்தையை நோக்கினாள். ''பார்த்தீர்களா, அப்பா அவர் போக்கை. நீங்கள் அனைவரும் பார்க்கிறீர்கள். ஆனால் அதட்டி நீங்கள் யாராவது ஒரு வார்த்தையாவது கேட்டீர்களா? எனக்குத் தெரியும், அப்பா, நான் அநாதை. தாயற்ற அநாதை......'' — சினமாகப் பொங்கி வந்த வார்த்தைகள் அவள் மீது அழுந்தி நெஞ்சை முட்டி மோதி அழுத்திக் கண்ணீருக்கும் வழி செய்தது. அந்தக் கண்ணீரில் அவன் கண்டதுதான் அநாதை என்ற பொருள்.

''சுசிலா! பிறந்த வீட்டுப் பெருமையை அண்ணனிடமே யாராவது பேசுவார்களா? உன் அம்மாவைக் காட்டிலும் யசோதையிடம் நீ எவ்வளவோ சலுகைகள் பெறுகிறாய் என்பதை நீ அறிவாய்..... உன்னையே நீ ஏன் ஏமாற்றிக் கொள்ளுகிறாய்?''

ராஜு இவ்வாறு மெல்லக் கேட்டதும் சுசிலா, ''பொய்....பொய்....அப்பா! எல்லாமே பொய். நீங்கள் சித்தியிடம் இப்படி ஒட்டி விடுவீர்கள் என நான் நினைக்கவில்லை......'' என்றாள்.


''சுசிலா, நான் உன் அப்பா. கண்டபடி பேசாதே!''

''என்ன தவறாகப் பேசி விட்டேன்? சித்தியின் காரணமாகப் பெண்ணைக்கூட மறந்து விட்டீர்கள் என்று கூறுவது தவறா?'' என்று சுசிலா பல்லைக் கடித்தபடி கூறினாள்.

''ராஜு!'' உமாபதி உள்ளே நுழைந்தார். யசோதை கண்களைத் துடைத்துக்கொண்டு சமையலறைக்குச் சென்று விட்டாள்.

''ராஜு! நேற்று ஒரு புத்தகம் கொடுத்தேனே. அதைத் தருகிறாயா?''

புத்தகம் எடுத்து வர ராஜு மாடிக்குச் சென்றார்.



''சுசிலா!'' மெதுவாக அவள் அருகில் வந்து உமாபதி கூப்பிட்டார். சுசிலா அவரை ஏறிட்டு நோக்கினாள். அவள் கண்கள் சிவந்திருந்தன.

''சுசிலா! ஒரு நிமிடம் வாசலில் நின்று கேட்டு விட்டுத்தான் உள்ளே வந்தேன். யசோதையை நீ இதுபோல் பேசுவது நன்றாக இல்லையம்மா! இதோ பார் சுசிலா! என் மீது கண்களைப் பதிய வைத்து, மனத்தை ஆண்டவனிடம் திருப்பிக் கைகளால் நெஞ்சைத் தொட்டுப் பிறகு நீ நினைத்துப் பார். உண்மையாகவே உனக்கு யசோதையிடம் வெறுப்பு உண்டா....? ஏன் தயங்குகிறாய்...? நான் சொன்னபடி செய்து பார்.......''

சுசிலாவுக்குத் தான் நிற்பதே பாரமாகக் காணப்பட்டது. கண்களை அவர் மீது செலுத்த முடியவில்லை. நெஞ்சில் ஏதோ அலை மோதி வருவது போல் இருந்தது. 'யசோதையிடம் குறையில்லை, இல்லை' என வாய் கூறத் துடித்தது. இந்நேரம் அப்பாவிடம் வாதாடியதையும் அவரிடமே தன் கணவரையும் தன் சித்தியையும் பிணைக்கும் விதத்தில் அவதூறாகப் பேசியதையும் அப்போது தன் வாயைத் தன் கணவர் பொத்தியதையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள். தான் கூறியதெல்லாம் சினத்தின் ஆதிக்கத்தில் பொறுமைக்கான அஸ்திர வார்த்தைகள்தான் என்பதை உணர்ந்தாள். இப்போது சத்தியத்தைத் தொட்டு வார்த்தைகளை வெளியிடும்படி உமாபதி கூறியபோது அவள் அந்தச் சத்தியத்தை ஏமாற்ற முடியாமல் திணறினாள். சத்தியத்தின் முன் சினம்கூட அவளிடம் தோற்று விட்டது.

''ஐயோ, மாமா!'' வீறிட்டு அவள் கீழே சாயப் போனாள். உமாபதி அவளைத் தாங்கிக் கொண்டார். அவளது கண்ணீரைத் துடைத்து விட்டார்.

ராஜு கீழே இறங்கி விட்டார்.

''ராஜு! உன்னிடம் புத்தகம் வாங்க நான் வரவில்லை. நீ ரகசியமாகக் கேட்டறியச் சொன்னதைத் தெரிந்து கொண்டேன். அதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்.''

''அதற்குள் கேட்டு விட்டாயா?''


''ஆமாம்.... தியாகு வேலை செய்யும் ஆபீசில் கேட்டேன். கீதா ரொம்ப நல்ல பெண்தானாம். ஆண்களிடம் நெருப்பாகத்தான் பழகுகிறாளாம். தியாகுவிடம்கூட நெருங்கிப் பழகுவதில்லை என்றுதான் ஆபீசில் சொல்கிறார்கள்......''

''வீட்டுக்குத்தான் போய் விடுகிறாரே! ஆபீசில் என்ன இருக்கும்?'' இடையே சுசிலா படபடத்தாள்.

''எனக்கும் ஒன்றும் புரியவில்லை, உமாபதி. தியாகு சுசிலாவிடமும் வீட்டில் சிரித்துச் சிரித்துப் பழகுகிறான்.''

''அவ்வளவும் வேஷம்.'' சுசிலா தான் கோபத்துடன் கூறினாள்.

உமாபதி கூறினார்: ''ராஜு! டைரக்டரிடம்



தியாகுவை மட்டும்தான் மாற்றும்படி கேட்டிருந்தேன். ஆனால் கீதாவும் அவனும் காசாளர் இலாகாவில் கல்கத்தாவில் வேலை பார்த்தார்களாம். நம்பகமான ஆட்களை இங்கு அனுப்ப வேண்டுமென்று இருவரையுமே அனுப்பி விட்டார்கள்.....தியாகு நல்ல பையன் என்பது அவர்கள் எண்ணம்.''

''சுசிலாவும் கொஞ்சம் தணிந்து பார்க்கலாம். கல்கத்தாவிலிருந்து கோபித்துத் தனியே வந்து விட்டாள். இங்கு வந்த பிறகு அவள் விஷயத்தை விளக்கிக் கூறவும் இல்லை. அவள் மனக் கசப்பு மட்டும் ஒருவாறு எங்களுக்குப் புரிந்தது. கல்கத்தாவுக்குப் போகவே மாட்டேன் என இவள் பிடிவாதம் பிடித்ததும் யசோதை அவளைக் கட்டாயப்படுத்தி அனுப்ப வேண்டாம் என்று கூறி விட்டாள். அதனால்தான் வேறு வழி யோசித்துத் தியாகுவை இங்கேயே மாற்ற வழி உண்டா எனச் சிந்தித்துப் பார்க்கக் கூறினாள். நீ அந்த டைரக்டரில் ஒருவரைத் தெரியும் என்று கூறவே உன்னிடம் உதவி கோரினேன். தியாகு இங்கு வந்த பிறகுதான் கீதாவுடன் அவன் நெருங்கிப் பழகுவதால் சுசிலா அவனிடம் மனக் கசப்பு அடைந்து விட்டாள் எனப் புரிந்தது.''

''அதெல்லாம்தான் நேற்றே கூறிவிட்டாயே! சுசிலா, நான் சொல்வதைக் கேளம்மா. அவனுடன் நீயும் மனம் விட்டுப் பழகிப் பாரேன்.....''

''அது மட்டும் என்னால் முடியாது, மாமா. உள்ளொன்றும் புறமொன்றும் வைத்துப் பேசுபவர்களிடம் நான் எப்படி மாமா சரளமாகப் பழக முடியும்?''

''அதன் மூலம் கீதாவின் வீட்டுக்கு அவன் ஏன் போகிறான் என்பதைப் புரிந்து கொள்ளலாமே!''

''கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா ?''

''அப்படி ஒரேயடியாக ஒன்றும் சொல்லிவிட முடியாது சுசிலா. கல்கத்தாவிலிருந்த அவன், இந்த மாற்றலுக்கு விரும்பவில்லை என்று கூடத் தெரிகிறது.''

''பொய், அவளும் வெறும் பாசாங்குக்காரி........''

''எப்படியாவது போகட்டும். நீ இனி தியாகுவுடன் சண்டையிட்டுக் கொள்வது நல்லதல்ல. அவனிடம் சரளமாகப் பழகினால்தான் அவன் போக்கு புரியும். மேலும் அவனிடம் கடுகடுக்கும்போது என்ன வார்த்தைகள் பேசுகிறோம் என்பது தெரியாமல் வீட்டிலுள்ளவர்களையும் துன்புறுத்திவிடுகிறாய்'' என்று ராஜு கூறினார்.

சுசிலாவுக்கு மீண்டும் உள்ளம் கொதித்தது. ''கேட்டீர்களா, மாமா! அவர் என்ன செய்தாலும் நான் அடங்கி அடிமையாகவாழ வேண்டுமாம். அம்மா இருந்தால் இப்படி நினைப்பாளா? அப்பா! நீங்கள் எனக்காகக் கஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டாம். நான் எங்கேயாவது போய்க் கொள்கிறேன். எப்படியாவது வாழ்ந்து கொள்கிறேன்... நீங்களும் சித்தியும்.......''

உமாபதி சடக்கென அவள் வாயைப் பொத்தினார். ''சுசிலா! மீண்டும் கோபத்துக்கு இடம் கொடுக்காதே.... அம்மா இல்லை என வேண்டுமென்றே நினைத்து மனக் கஷ்டத்தை மேலும் வளர்த்துக் கொள்கிறாய். உன் அம்மாவைக் காட்டிலும் பதின்மடங்கு மேலானவள் யசோதை. அவளிடம் நீ அந்தரங்கமாக இருந்தால் உன் துயரை எவ்வளவோ மறக்கலாம்'' என்றவர், பிறகு ராஜுவை நோக்கி..... ''ராஜு! சுசிலாவை நான் சிறிது நேரம் வெளியே அழைத்துச் சென்று வருகிறேன். அதனால் அவள் மனம் கொஞ்சம் நிம்மதியடையும்'' என்றார்.

''வேண்டாம், நான் எங்கும் வரத் தயாராக இல்லை, மாமா !'' என்று கூறிய சுசிலா மாடிக்கு விரைந்தாள்.

ராஜு உமாபதியை அழைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

சுசிலா குப்புறப் படுத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

தியாகுவுடன் கீதாவும் சென்னைக்கு மாற்றலாகி வருவாள் என்பது ஒருவரும் எதிர்நோக்காத விஷயம். வந்தவுடனேயே கீதாவை ஹோட்டலில் விட்டு வர அவன் கிளம்பிய போது யசோதை வியந்தாள். சுசிலா அளவற்ற ஆத்திரம் கொண்டாள்.

தியாகு அவளை விட்டு விட்டுச் சீக்கிரமே திரும்பி விட்டான். திரும்பியவன் ஒன்றுமே நடவாதது போல் சுசிலாவிடம் சரளமாகப் பேசினான். குழந்தையை மடியை விட்டு இறக்கவில்லை. ராஜுவும் முன் போல் இல்லாமல் அவனுடன் கலந்து பேச முற்பட்டபோது இருவருடனும் சேர்ந்து அவன் கலகலப்பாகப் பேசினான். வேடிக்கையாகக் கதைகள் கூறினான். அவனிடம் என்ன குற்றம் காண முடியும் என்று ராஜுவே வியந்தார். யசோதையும் திகைத்தாள்.

சுசிலாவோ இந்த நிலையைச் சற்றும் எதிர்பார்த்திருக்க வில்லை. மாற்றலுடன் வந்திருக்கும் மருமகனை அப்பா கூப்பிட்டுச் சுசிலாவுடன் அவன் சண்டை

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்

உன்னதமான காஷ்மீர் பொக்கேயின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக்கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்





குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமானது. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!

காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB-6-19-TAM.


புகழ்ச்சிக்குரிய தலைவி
அவள்தான் வகுப்பில் ஒழுங்கை நிலைநாட்டும் தலையாய மாணவி: அவள் தன்னம்பிக்கையோடு, தான் அணிந்திருக்கும் பிரகாசமுடன் வெண்மையான ஆடைகளால பெருமையும் கொண்டவள்! வெள்ளை ஆடைகளை, துவைத்தபின், ''ராபின் ப்ளூ'' கலந்த நீரில், அவள் தாய் கடைசியாக அலசுவதால்; இத்தகைய பிரகாசம் ஏற்படுகிறது.
ராபின் ப்ளூ
வெள்ளைத் துணிகளை பிரகாசிக்கச் செய்கிறது
ராபின் ப்ளூ சிக்கனமானது; ஏனெனில் அது ஜலத்தில் எளிதில் கரைவதுடன், சிறிதளவு உபயோகித்தாலும் குடும்பத்தின் துணிமணி சலவைக்கும் போதுமானது.
Robin Ultramarine
STANDARD
QUALITY
ARBC-76 TP

விட்டுள்ள காரணத்தைக் கேட்பார்; அவனைத் திட்டுவார்; யசோதையும் கண்டிப்பாக அவனுக்காகப் பரிந்து அவவிடம் சண்டை பிடிப்பாள் என எதிர்நோக்கினான். தியாகுவும் தன்னிடம் சரளமாகப் பேச மாட்டான் என்றே நினைத்தான்.

கடைசியில் அவன் கண்டது தோல்வி. தியாகு சிரித்துப் பேசப் பேச அப்பாவே மகிழ்ந்து விட்டார். யசோதையும் அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. தியாகு வெற்றி கண்டு விட்டான்.

தியாகு குறித்த நேரத்தில் ஆபீசுக்குப் போய் வந்தான். ஒவ்வொரு முறை தோவைச் சந்தித்து விட்டு வருவதாகச் சொல்லி விட்டே செல்வான். அப்படிப் போகும்போது ஒவ்வொரு முறை இரவில் நேரம் கழித்து வீடு திரும்புவான். ஆனால் யசோதைதான் கதவைத் திறப்பாள். தட்டு வைத்து அன்னமிடுவாள். "யசோதை! தோவை ஒரிடத்துக்கு அழைத்துப் போய் வந்தேன். அதனால் நேரமாகி விட்டது" என்பான் நேரிடையாக.

யசோதை அவனைக் கண்டிக்க விரும்புவாள். ஆயினும் உதட்டைத் திறந்து வார்த்தைகள் வெளிவராது.

ஒருநாள் துணிந்து கேட்டு விட்டாள்: "தியாகு! அந்தத் தோ யார் என்பது எனக்குத் தெரியாது. ஆயினும் அவளுடன் நீ பழகுவது விரும்பத்தக்கது அல்ல. சுசீலாவுடன் இன்பமாகக் குடும்பம் நடத்த உனக்கு ஆசையில்லையா?"

"யசோதை! சுசீலாவை நான் வெறுக்கிறேன் என நீ நிச்சயமாகக் கூறிவிட முடியுமா?" தியாகு சாதத்தைப் பிசைந்தபடி அவளிடம் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் தோவிடம் நீ பழகுவதை நிறுத்துவதுதான் நல்லது."

"ஏன் யசோதை! அப்படிக் கூறுகிறாய்? எனக்கு ஒரு சகோதரி இருந்தால் அவளுடன் பழகுவதை நீங்கள் தடுப்பீர்களா? அதே போல் தோவையும் நினையுங்கள்..... இதோ பார், யசோதை! விவாகமாவதற்கு முன் உன்னைத்தான் மணக்க வேண்டுமென நினைத்திருந்தேன். குறி மாறி விட்டது. ஆனால் நான் வருத்தப்படவில்லை. சுசீலாவிடம் மனத்தை ஈடுபடுத்தினேன். மனத்தில் இடம் கொடுத்திருந்த உன்னிடமே நான் சகோதர பாவத்துடன் நடக்க முற்பட்டு விட்ட போது, அயல் பெண்களிடம் நான் எப்படிப் பழகுவேன் என்பதை நீ கண்டிப்பாகத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். தோ என்னிடம்

திரை [illegible]

இம்மாதத்தில் ஒரு வாரம்

ஜனநாயகத்துக்கு ஒரு சிறப்பான எடுத்துக் காட்டாகவும் உலகில் வேறு பல நாடுகளிலும் ஜனநாயகம் வெற்றிபெறச் சலியாமல் பேருதவிகள் புரிந்து வருவதுமான அமெரிக்காவிலேயே ராணுவப் புரட்சி நடத்தி அரசாங்கத்தைக் கவிழ்த்து அதிகாரத்தை ஒரு தளபதி கைப்பற்றுவதென்றால்....இப்படி ஓர் அபூர்வமான கற்பனை ஓடுகிறது ஓர் எழுத்தாளரின் உள்ளத்தில். உண்மையான ஜனநாயகம் தழைத்து மக்கள் பூரண சுதந்திரம் பெற்றிருக்கும் ஒரு தேசத்திலன்றி வேறு எங்கு இவ்வளவு புரட்சிகரமான ஒரு நாவலை எழுதி ஒருவர் நல்ல பெயரும் புகழும் சம்பாதித்துவிட முடியும்?

'ஆக்கிரமிப்பிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒரே வழிதான் உண்டு. அது பிறர் நம் நாட்டைத் தாக்குவதற்கு முன்னும் நாம் அவர்களைத் தாக்குவதுதான்' என்ற அபாயகரமான கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட ஒரு ராணுவத் தளபதியைச் சுற்றிக் கதை பின்னப்பட்டிருக்கிறது. பெரிய பரபரப்பையும் காரசாரமான வாதப் பிரதிவாதங்களையும் உருவாக்கிய "மே மாதத்தில் ஏழு நாட்கள்" என்ற நூல் இப்போது திரைப்படமாகவும் வெளி வந்திருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதியாக பெடரிக் மார்ச் (படம்). ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்யும் விமானப் படைத் தளபதியாக பர்ட் லான்காஸ்டர். அந்தச் சூழ்ச்சியைக் கண்டுபிடித்து முறியடிக்க உதவும் ஒரு கடற்படைச் சேனாபதியாக கிர்க் டக்ளஸ் ஆகியோர் நடிக்கிறார்கள். இன்னும் ஆவா கார்டினரும் எட்மண்டு ஓ ப்ரேய்னும் வேறு திரையில் தோன்றுகிறார்கள். இந்த பிரபல நட்சத்திரங்கள் பங்கெடுத்துக் கொண்டுள்ள இந்தப் படம் சிறப்பாக அமைந்திருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்?

ஃ ஃ ஃ

ஒடிந்து விழுவதுபோல் தோற்றமளிக்கும் கிர்க் டக்ளஸின் எடை என்ன தெரியுமா? 175 பவுண்டு! உயரம் ஆறு அடி.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது காலையும் மாலையும் பேப்பர் விற்றுச் சாப்பாட்டுக்கு வழி தேடிக் கொண்டவர் கிர்க் டக்ளஸ். கல்லூரியில் படிக்கும்போதும் ஒரு ஹோட்டலில் சர்வராக வேலை செய்தவர். பல கல்லூரிகளுக்கிடையில் நடந்த போட்டிகளில் சேர்ந்தாற்போல் மூன்று வருஷங்களில் மல்யுத்த சாம்பியன் என்றபட்டத்தைப் பெற்றவர். இன்றைக்கும் விளையாட்டுக்களில் மிகுந்த ஆர்வம் காட்டும் கிர்க் டக்ளஸ் மற்றவர்கள் பொறாமைப்படக் கூடிய அளவுக்கு உடற்கட்டைப் பாதுகாத்து வருகிறார்.



ஆதரவு காண்கிறன். அவள் இரகசியத்தைக் காப்பாற்றுவதாக நான் வாக்களித்து விட்டேன். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியுமா என்பது எனக்குப் பலத்த பரீட்சை. அதில் தேர்வு பெற நீதான் உதவ வேண்டும். இன்னும் சில நாட்களில் எல்லாமே சரியாகிவிடும் என எதிர்பார்க்கிறேன்'' என்று கூறியவன் சாப்பாட்டில் முனைந்தான். யசோதை அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை.

யசோதை ராஜுவிடம் மெதுவாக விஷயத்தைக் கூறி, ஆபீசில் தியாகுவின் பெயரைப் பற்றிக் கேட்டறியச் சொன்னாள். ராஜு உமாபதியிடம் கூறினார். உமாபதியும் கேட்டறிந்து வந்தார்.

சுசீலாவின் மனம் வெந்து கொண் டிருந்தது. குழந்தை கண்ணனும் அப்பாவிடம் அதிகம் சலுகை காண ஆரம்பித்து விட்டான். அதனால் அவனும் அப்பாவிடமே ஒட்டிக் கொண்டது அவளுடைய ஆத்திரத்தை மேலும் வளர்த்துவிட்டது. அனைவரும் சேர்ந்து தன்னைப் படுகுழியில் தள்ள முயற்சி செய்கிறார்கள் என்றே அவள் கண் முன்னால் காட்சி விரிந்தது.

மெதுவாக நாட்களும், மாதங்களும் பறந்தன. மறு வாரம் இரு குழந்தைகளுக்கும் பிறந்த நாள் வைபவம்.... யசோதை எவ்வளவு தடுத்தும் கேளாமல் கண்ணனுடன் பானுவின் பிறந்த நாளையும் சிறப்பாகக் கொண்டாடத் தயாரிப்புகள் செய்ய ஆரம்பித்து விட்டான் தியாகு.

மாலை வெகு நேரம் கழித்து வீடு திரும்பினான் தியாகு. ''யசோதை! ரொம்ப நேரமாகி விட்டது. சீதா இன்றைய விமானத்தில் கல்கத்தா போய் விட்டாள். அவளை வழியனுப்ப ஏரோடிரோமுக்குப் போனேன். அநேகமாகக் சீதா இனி இங்கு வர மாட்டாள்......''

யசோதைக்கு இவ் வார்த்தைகள் மனச் சங்கடத்தை யெல்லாம் விலக்கி விடுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தின. ''திடீரென இதென்ன ஏற்பாடு?'' என்று கேட்டாள் யசோதை.

''நான் முயற்சி செய்துதான் அவளை அனுப்பினேன் யசோதை. இந்த மானேஜர் இந்த ஆபீசை விட்டு அவளைக் கல்கத்தாவுக்கு மீண்டும் அனுப்ப விரும்பவில்லை. அதற்குமேல் நான்தான் லீவு வாங்கிப் போகும்படி அவளுக்கு வழி சொல்லிக் கொடுத்தேன். லீவுக்குப் பிறகு கல்கத்தாவிலேயே தங்க ஏதாவது வழி செய்யலாம்.......'' தியாகு சாப்பிட்டபடி கூறினான்.

சுசீலா கூடத்து அறையில் விழித்தபடிதான் படுத்திருந்தாள். தியாகுவின் வார்த்தைகளை அவளால் நம்பவே முடியவில்லை. கல்கத்தாவிலிருந்து வந்தபோது வேண்டுமென்றே அவளைத் தன்னுடன் அழைத்து வந்திருப்பதாக எண்ணினாள். மீண்டும் அவளைக் கல்கத்தாவுக்கு அனுப்ப வழி செய்து விட்டாராமே! இந்தப் பேச்சு கண் துடைப்போ, அல்லது வேஷமோ !

''இனியாவது சீதாவுக்கு மனக் கஷ்டம் நேராமலிருக்கக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்....'' தன் போக்கில் தியாகு கூறினான்.

பொய்ப் புதிர்

வைத்தியர் தம்மைக் காண வந்திருந்த நண்பரிடம் சொன்னார்: ''முன் அறையில் மூன்று பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவருக்கு உடம்பெல்லாம் பொய். அவருக்குப் பொய் சொல்வதே ஒரு வியாதி. அந்த ஆசாமி யார் என்று கண்டுபிடிக்க முடியுமா?''

''பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு நண்பர் சென்றார்.

''நீங்கள் பொய்யரா?'' என்று முதலில் உட்கார்ந்திருந்தவரைக் கேட்டார்.

அவர் பதிலுக்கு என்னமோ முணுமுணுத்தார்.

''தாங்கள்?'' என இரண்டாமவரை விசாரித்தார்.

அவர், முணுமுணுத்தவரைக்காட்டி, ''அவர் பொய்யரல்ல'' என்றார்.

மூன்றாவது ஆளை விசாரித்தபோது அவர் இரண்டாவதாக அமர்ந்திருந்தவரைச் சுட்டிக் காட்டி ''அவர்தான் பொய்யர்'' என்றார்.

வைத்தியரின் நண்பர் பொய்யர் யார் என்று கண்டு பிடித்துவிட்டார். எப்படி?

விடை: கடைசியில் இருந்தவர் கூறியபடி இரண்டாவதாக அமர்ந்திருந்தவரே 'பொய்யர்' என்று வைத்துக் கொண்டு பார்க்கலாம். அப்படியானால்முதலிலிருந்தவரும் பொய்யராக வேண்டும். ஏனென்றால், நடுவிலிருந்தவர், அவர் உண்மை பேசுபவர் என்றுகூறினாரல்லவா? அதற்கு நேர் விரோதமாகத் தானே அவர் இருப்பார். ஆகவே இப்போது இரண்டு பொய்யர்கள் இருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. ஆனால் அங்கே ஒருவர்தான் அப்படிப்பட்டவர் என்று நமக்குத் தெரியும். ஆகவே மூன்றாவதாக அமர்ந்திருப்பவர்தான் பொய்யர்!

"அவள் கஷ்டம் கிடக்கட்டும். அவள் போவதால் இந்த வீட்டைப் பிடித்து ஆட்டிவைத்த கஷ்டமும் விலகும் என்று நான் எதிர்பார்க்கிறேன்." யசோதை மெதுவாகக் கூறினாள்.

"காரணமின்றி ஒரு கஷ்டத்தை மனத்தில் ஏற்றுக் கொண்டால் அதற்கு மாற்றுக் கண்டு பிடிப்பதே கஷ்டம், யசோதை......" என்று கூறியபடியே கைகழுவச் சென்றான் தியாகு.

சுசீலாவுக்குத் தூக்கமே வரவில்லை. கீதா ஊருக்குப் போய் விட்டாள். அவள் வாழ்வில் குறுக்கிட்ட தடங்கல் விலகி விட்டது. ஆனால் தியாகுவிடம் அவள் எப்படி அந்யோந்யமாகப் பழகுவது? மற்றவர்கள் அவனிடம் சரளமாக இருந்து விட்ட போது அவள் மட்டும் அவனை வெறுத்துத் துச்சமாகப் பேசி வந்தாளே!

யசோதை மன நிம்மதியோடு தூங்கினாள். ராஜுவும் தியாகுவும்கூடச் சலனமின்றித் தூங்கினர். மறு நாள் வீட்டில் அடிக்கவிருந்த புயலை ஒருவருமே அறிந்திருக்கவில்லை.

'டம் டம்' விமான நிலையத்திலிருந்து தன் வீட்டை அடைவதற்குள் கீதா தவிதவித்துவிட்டாள். இனியாவது நல்ல காலம் பிறக்கும் என்ற நம்பிக்கைக் கயிற்றில் அவள் தொத்திக் கொண்டு நின்றாள். அந்தக் கயிற்றின் நுனியில் வந்து விட்டாள். கயிறு அறுந்துவிடக் கூடாதே என்ற அச்சம். நம்பிக்கையை இறுக்கிப் பிடித்திருந்த சக்தியினால் தானே அவள் பணத்தையும் பொருட்படுத்தாமல் விமானமேறி வந்தாள்.

இன்னும் சிறிது நேரத்தில் மூர்த்தி வந்துவிடுவான். போரிலிருந்து திரும்பும் வெற்றி வீரனையோ அல்லது வெளியூர் சென்று திரும்பும் பிரயாணியையோ வரவேற்கும் நிலையிலா அவள் இருந்தாள். அவள் வரவேற்பை ஏற்கப்போகிறவன்.... ஐயோ, இனி அதைப் பற்றி நினைக்கவும் கூடாது.

வீட்டில் படிந்திருந்த தூசி, தும்புகளை நீக்கி ஒழுங்குபடுத்த ஆரம்பித்தாள் கீதா. சிறிது சத்தம் கேட்டாலும் வாசலில் எட்டிப் பார்த்தாள். கல்கத்தாவில் ஒரு நாள் இந்தத் துடிதுடிப்புக்கு ஒரு தனி இடம் வேண்டும் என்றுதானோ என்னவோ, தியாகுவோடு அவள் மாற்றலாகிச் சென்னைக்குப் புறப்பட்டபோது அவ்வீட்டைக் காலி செய்ய வேண்டாமெனத் தியாகு சொல்லி விட்டான். அப்பொழுது அவளுக்கு அது அனாவசியச் செலவாகத் தான் தோன்றியது. இப்பொழுது தான் தியாகு கூறியதன் உண்மையை அனுபவமாகக் கண்டறிகிறாள்.

தியாகு!

தியாகுவைப் போல் ஒருவனைச் சந்திக்கப் போகிறோம், தன் வாழ்வில் அவனிடமிருந்து இவ்வளவு உதவிகள் கிடைக்கப் போகின்றன என்பதை அவள் நினைத்துப் பார்த்திருக்கவேயில்லை. முதன் முதலாக அவள் இந்தக் கம்பெனியில் வேலைக்கு அமர்ந்த போது தியாகுவுக்குப் போட்டியாகத் தான் அவள் நின்றிருந்தாள். அவனைக் கம்பெனியின் வாசலில் சந்தித்த காட்சி இன்னும் நினைவிருக்கிறது.

மானேஜரைப் பேட்டி கண்டுவிட்ட அன்றே வேலையிலும் அமர்ந்துவிட்டாள் அவள். அதற்கு வேண்டிய சிபாரிசுக் கடிதம் அவள் கையில் இருந்தது. மேலும் அந்தப் பதவியில் ஒரு பெண்ணை அமர்த்திப் பார்க்க விரும்பினார் மானேஜர் ராய் சௌத்ரி.

ஆபீசிலிருந்து வெளியே வந்தபோது தான் அவள் முதல் முதலாகத் தியாகுவைச் சந்தித்தாள். அவனது முணுமுணுப்பு அவளது காதில் விழுந்தது. "இன்று காலை வரை எனக்கு வேலை தருவதாகக் கூறினவர் இப்பொழுது ஒரு பெண்ணை வைத்து விட்டாராம். இனிமேல் ஆண்களுக்காக விடுதலைப் பாட்டுப் பாட ஒரு பாரதியைப் பிறக்க வைக்க வேண்டும்."

கீதாவுக்குத் 'திக்'கென்றது. தன் காரணமாக ஓர் இளைஞனுக்குக் கிடைக்க வேண்டிய வேலை பறி போய்விட்டது. பாவம், அவருக்கு எத்தனை கஷ்டமோ!

கீதா தானே வலுவில் சென்று அவனிடம் மன்னிப்புக் கேட்டாள். தியாகுவுக்கு . அவளை நோக்கியதும் ஆச்சரியம். 'தமிழ் நாட்டுப் பெண்மணி இங்கு வேலைக்குப் போட்டியாக நிற்கிறாள்!' பேச்சினூடே அவன் தன் நிலையை விளக்கி விட்டான். "அம்மணி! தாய் தந்தையற்ற ஒண்டிக் கட்டை நான். இந்தக் கட்டைக்கு உரமிடக் கல்கத்தா உதவவில்லையே... இந்த நகரம் காட்டும் வழியில் நான் போகத் தயார். ஆனால் என் வயிறு பிடிவாதம் செய்கிறது. சாதத்தைப் போட்டு நிரப்படா என்கிறது!"

அன்று கீதா அவன் வேடிக்கைப் பேச்சில் லயித்துப் போய்ச் சிரித்தாள். அதில் மறைந்து நின்ற பொருளில் உள்ளம் உருகினாள். அவனைக் கட்டாயப்படுத்தித் தன் இல்லத்துக்கும் அழைத்துச் சென்றுவிட்டாள்.

(தொடரும்)







ஒரே ஒரு ஸாரிடான்

'ரோஷ்'

வலிகளையும் நோவுகளையும் போக்கும்!

வலியைப் போக்குகிறது. ஆசுவாசப்படுத்துகிறது. புத்துணர்ச்சி யூட்டுகிறது

உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடம்புவலி, ஜுரம் வரும்போலிருப்பது, ஜலதோஷம் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்



ஸாரிடான் ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா

JWT/VT1845(a)

சிரிக்கவும் சிந்திக்கவும்



அறுபதாவது வயதில் சஷ்டியப்த பூர்த்தி நடப்பதற்கும், எண்பதாவது வயதில் சதாபிஷேகம் நடப்பதற்குமிடையில் எழுபதாவது வயதிற்கென்று ஒரு கொண்டாட்டம் கொண்டாடுவதற்கில்லையே என்று பல கிழவர்கள் குறைப்பட்டுக் கொண்டிருந்தார்கள் போலும்! அந்தக் குறையைத் தீர்ப்பதற்காக பீஹார் ராஜ்யத்தில் '70 வயதுக்கு அதிகமானவர்களின் மாதம்' கொண்டாடப் போகிறார்கள். அந்த வயதினர் கோஷ்டியைச் சேர்ந்த கவர்னர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார் அவர்களே அந்த விழாவை ராஜபவனத்தில் ஆரம்பித்து வைக்கப் போகிறார்.

அன்று பாட்னாவில் உள்ள ராஜபவனத்தில் எங்கு திரும்பினாலும் வழுக்கைத் தலைகள், நரை மயிர்த் தலைகள், மூக்குக் கண்ணாடிகள், கைத்தடிகள் முதலியவை கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கும். அன்றையச் சிற்றுண்டி ஜாபிதாவில் முறுக்கு, சீடை; பொரிவிளங்காய் உருண்டை, முதலியன சேர்க்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

அன்று அந்தக் கிழவர்களின் மனைவிமார்களும் ராஜபவனத்துக்கு வந்திருப்பார்கள். இந்த ஜோடிகள் கூடியுள்ள காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் சட்ட சபை அங்கத்தினர்களாவதைத் தடை செய்ய வேண்டுமென்று சட்டமியற்றச் செய்ய ஸ்ரீ காமத் முயற்சி செய்து கொண்டிருக்கிறாரல்லவா? அதை ஆட்சேபித்து ஒரு தீர்மானம்கூட நிறைவேற்றப்படலாம்.

'எழுபது வயதுக்கு அதிகமானால்?' என்ற தலைப்புடன் பி. ஜி. வோட்ஹௌஸ் 'பஞ்ச்' பத்திரிகையில் ஒரு ருசிகரமான கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் சில பகுதிகளை மட்டும் தருகிறேன்.

....''எழுபது வயதுக்கு மேற்பட்டவனை என்னிடம் டாக்ஸி டிரைவர்கள் நடந்து கொள்ளும் விதத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. முன்னெல்லாம் என் மீது வண்டியை ஏற்ற முயல்வதற்கு முன்னர் வெளியே நிற்கும் என்பக்கம் முகத்தை நீட்டிப் பல்லைக் கடித்துக் கொண்டு 'ஏ, முட்டாள்!' என்று கத்துவார்கள். ஒரொரு சமயம் 'முட்டாள் பயலே!' என்றுகூடச் சொல்வதுண்டு. இப்போதோ 'ஏ முட்டாள் கிழமே!' என்கிறார்கள்...



''நான் இன்னும் தேகப்பயிற்சி செய்து வருகிறேன். ஆனால் குனிந்து கட்டை விரலைத் தொட முடிவதில்லை. இப்பொழுதெல்லாம் முன் போல் பூனையைத் தூக்கிப் பிடிக்க முடிவதில்லை....''

கீதலி

'கயிறு போர்டு' சம்பந்தப்பட்ட ஒரு சிறிய காரியாலயம் உள்ளது. தேங்காய் உரிமட்டை நாரினால் தயார் செய்யப்படும் மிக உயர்ந்த ரக விரிப்புக்களும் மற்றச் சாமான்களும் அங்கே வைத்திருக்கிறார்கள்.

இங்கே மிக நவீனக் கயிறு சாமான்கள் வைத்திருக்கிறார்களா?

சென்னை கன்னிமாரா வாசகசாலையின் மாடியில் மிகப் பழைய கயிறு விரிப்புப் போடப்பட்டிருக்கிறது. அது வாசகசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இருந்து கொண்டிருக்கிறதென்று நினைக்கிறேன். அது நாம் அதன் மீது நடந்து செல்வதற்கு மட்டுமேயன்றி மற்றப் பல காரியங்களுக்கும் உபயோகப்படுகிறது.

ஒரு நாள் ஒரு கல்லூரி மாணவி ஒரு பெரிய அகராதியைத் தன்னிரு கைகளாலும் தலைக்கு உயரே பிடித்துக் கொண்டு நடந்து வந்தாள். இப்படிச் செய்வதால் 'இடுப்புக் கூன் விழாது', 'நேராக நடக்கலாம்' என்று பத்திரிகைகளில் வரும் 'பெண்கள் அழகுப் பகுதிகள்' கதறுகின்றனவே. அப்படி ஏதோ பயிற்சி செய்கிறாளோ என்று நினைத்தேன். திடீரென்று அவள் தன் இடதுகாலைக் கீழே வைத்து முன் பக்கமாகக் குனிந்தாள். ஏதாவது நடனமோ என்றுகூட நினைக்கும்படியாயிருந்தது. ஒன்றுமில்லை. கீழே விரித்திருந்த கயிற்றுக் கம்பளம் ஒரே கிழிசல். ஒரு பெரிய ஓட்டையில் அந்தப் பெண்ணின் ஒரு கால் மாட்டிக் கொண்டு விட்டது! அவள் நிலை தடுமாறிக் கீழே விழவிருந்தாள்.

ஆனால் கயிறு விரிப்புக்கள் இதற்காக வெட்கித் தலை குனிய வேண்டியதில்லை. சென்னை அரசாங்கப் பஸ்களில் நுழைவதற்காக முதலில் கியூவில் நிற்பது முதல், அதற்குள் ஒரு பாதத்தை எடுத்து வைத்து உள்ளே நுழைந்துவிடும் வரையுள்ள முயற்சிகளே ஒரு நடனக் காட்சியாக அமையும். ஆனால் காட்சி கண்டக்டர் டிக்கெட் கொடுப்பதுடன் 'மொட்டை'

யாக முடிகிறது. இப்படி முடிவடையாதிருப்பதற்காக பஸ்களில் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்! பஸ்களில் கீழே பரப்பப்பட்டிருக்கும் ரப்பர் ஷீட்டு'கள் ஓரோரிடத்தில் வாயைப் பிளந்து கொண்டிருக்கும். அதற்குள் செருப்புக் காலை வைத்துப் பல்டி அடிக்கலாம்.



ஒரு சமயம் மௌலானா ருக்புதீன் ஒரு ஒண்ணரைக் கண்ணனைப் பார்த்து ''ஏனப்பா! ஒண்ணரைக் கண்ணுள்ளவருக்கு எல்லா வஸ்துக்களும் இரண்டாகத் தெரியுமாமே. அப்படித்தானா?'' என்று குறும்பாகக் கேட்டான்.

''ஆமாம், ஐயா! உண்மைதான். உதாரணமாக நீங்கள் எனக்கு ஒரு நாலு கால் மிருகம் மாதிரித் தென்படுகிறீர்கள்'' என்று அவரிடமிருந்து பதில் வந்தது.

பழைய கால, புகழ்பெற்ற கலியாணராம அய்யர் நாடகக் கம்பெனியின் நாடகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அதில் கொலு மண்டபத்தில் அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். மந்திரி, பிரதானிகள் கூடியிருந்தார்கள். அரசன் மந்திரியைப் பார்த்து, ''மதியூக மந்திரியே! தேசத்தில் மாதம் மும்மாரி பெய்கிறதா?'' என்று விசாரித்தார்.

அப்போது மேடை ஓரமாக நின்றுகொண்டிருந்த மேடை நிர்வாகி ஸ்ரீ வேங்கடராம பாகவதர் சபையோர்களைப் பார்த்து இரகசியமாகச் சொன்னார்:

''ஊரில் மழை பெய்கிறதுகூட ராஜாவுக்குத் தெரியாது!''

காருகுறிச்சி அருணாசலம் தாம் காலமாவதை யொட்டி ஏதாவது வாதப் பிரதிவாதங்கள் எழுமென்று அவருக்குத் தெரிந்திருந்தால் அவர் மறைந்திருக்கவே மாட்டார். அவரைப் பற்றி ஏதோ சில புகழுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. பிறகு அவர் கரம் பிடித்து வாசிக்க உபயோகித்த அந்த வாத்தியத்தின் பெயரைச் சிலர் பலமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது நாதஸ்வரமா, நாககரமா, அல்லது நாகஸ்வரமா?

நாதஸ்வரம் என்றுதான் தொன்று தொட்டுப் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. அதுதான் சரியான பெயர் என்று ஒருவர் சொல்கிறார்.

''இல்லை, தீட்சிதரின் கிருதி ஒன்றில் 'நாகஸ்வரம்' என்று வந்திருக்கிறது. ஆகையால், அதுதான் சரியான பெயர்'' என்கிறார் இன்னொருவர்.

''இல்லவே இல்லை. அதற்குக் குழல் என்று பெயர். 'குழலினிது' என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரே தமது திருக்குறளில் கூறியிருக்கிறார்'' என்று வாதம் செய்கிறார் மற்றும் ஒருவர்.

''அதெப்படி? அந்த வாத்தியம் சமீப காலத்தில்தானே தோன்றியது. கம்பராமாயணத்தில் கூட அது பிரஸ்தாபிக்கப்படவில்லையே'' என்பது பிரதிவாதம்.

அதோ அம்பிப் பயல் வருகிறான். அவன் என்ன சொல்கிறான், கேட்கலாம்.

''அம்பி! கல்யாண வீட்டில் என்ன வாசிக்கிறார்கள்?''

''அது தெரியாதா? நாயனம்!'' என்று அம்பி சொல்கிறான்.

நாயனம்! அதுதான் வழக்கத்தில் உள்ள உயிருள்ள வார்த்தை.

ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கான பாடத் திட்டத்தில் 'மரியாதையாய் நடந்து கொள்வதெப்படி' என்ற அம்சத்தையும் சேர்க்கப் போவதாக லோக சபையில் உள் நாட்டு இலாகா உதவி மந்திரி கூறினார். இந்தப் பயிற்சி பின்வருமாறு அமையலாம்:

கலெக்டர் அல்லது ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உடையுடன் சிரசாசன நிலையில் நிற்கவும். பிறகு ஏகாக்கிர சித்தத்துடன் பின் வரும் மந்திரத்தைப் பதின்மூன்று முறை மனத்திற்குள்ளேயே உச்சரிக்கவும்:

நான் பொதுஜனங்களிடமும், முக்கியமாகக் காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர்களிடமும், பஞ்சாயத்து சபை சம்பந்தப்பட்டவர்களிடம், அவர்களுக்கு வேண்டியவர்களான எல்லோரிடமும், அவர்களுடைய மோட்டார் வண்டி டிரைவர்களிடமும் பயபக்தியுடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள ஆண்டவனது அந்தரங்கக் காரியதரிசி அருள் புரிவானாக!

❀ நல்லவர்களாயிருப்பது கௌரவமானது; ஆனால் எப்படி நல்லவர்களாயிருப்பது என்று மற்றவர்களுக்கு உபதேசிப்பது அதை விடக் கௌரவமானது — சுலபமானதுகூட.

—மார்க் ட்வெயின்

❀ டெலிபோனில் சம்பாஷணை முடிந்தபிறகு கடைசியாக 'ஓ.கே.' என்று கூறிக் குழாயைப் பொத்தென்று வைக்கும் போது ஏதோ பெரிய விஷயத்தைப் பற்றியோ, வியாபாரத்தைப் பற்றியோ பேசித் தீர்த்து விட்ட மனத் திருப்தி ஏற்பட்டு விடுகிறது. ரயில்வே ஸ்டேஷனைக் கூப்பிட்டு ஒரு குறிப்பிட்ட ரயில் வண்டி எப்போது வருகிறதென்று விசாரித்தால்கூடத்தான்.



—அர். ட்ஹால்

❀ அன்புடை வாழ்க்கையில் பின்பற்றப்பட முடியாத எதுவும் மார்க்கமாகாது. —காந்திஜி




காலஃகேட் பேபி பவுடர்
New
COLGATE
BABY
POWDER
ரூ.7000
பரிசுகளாக
ஜெயிப்பதற்கு!
உங்கள் செல்லக் குழந்தை ரூ. 1,000 ஜெயிக்கக்கூடும்
கால்கேட் பேபி பவுடர் புகைப்படப் போட்டி
பரிசுகள்
முதல் பரிசு: ரூ. 1,000/-
50 ஆறுதல் பரிசுகள் ரூ. 50/-வீதம்
முதல் பரிசு: ரூ. 1,000/-
50 ஆறுதல் பரிசுகள் ரூ. 50/-வீதம்

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

ஸ்வாமிஜியின் இந்தியப் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்த ஸேவியர் தம்பதியர் அதே சமயத்தில் தங்களது இந்தியப் பிரயாணத்துக்கும் ஏற்பாடு செய்தனர். குடும்ப விவகாரங்களை யெல்லாம் அதிவிரைவில் முடித்துக் கொண்டனர். சொத்துக்களை யெல்லாம் பணமாக்கிக் கொண்டனர். ஆடை ஆபரணங்கள், புத்தகங்கள், சித்திரங்கள், மரச் சாமான்கள் யாவும் அவர்களிடமிருந்து பிரிந்தன. அவ்வளவு பணத்தையும் தங்கள் குருநாதரான ஸ்வாமி விவேகானந்தரிடம் சமர்ப்பித்தனர். பக்தியின் எல்லை நிலத்தை அந்த ஆங்கிலேய தம்பதியிடமன்றி வேறு யாரிடம் காணப் போகிறோம்? பிறந்த மண்ணையும், பழகிய மனிதர்களையும் பிரிந்து ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள அந்நிய நாட்டுக்குச் செல்ல ஆயத்தமாயினர், விசுவ குடும்பத்தைச் சேர்ந்துவிட்ட அந்த விந்தைத் தம்பதி!

ஸ்வாமிஜி தாயகம் திரும்பப் போகிறார் என்றறிந்த ஆங்கில சிஷ்யர்கள் இங்கிலாந்தில் ஆத்





மீகச்சுடரை ஏற்றிவைத்த பெருமகனுக்கு நன்றி தெரிவித்துப் பிரிவுபசார விழா நடத்தினர்.

1896 டிஸம்பர் 13ந் தேதி பிக்கடிலியிலுள்ள நீர் வண்ண ஓவியர்களின் அரசாங்க சங்கக் கட்டடத்தில் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். மன்றம் வழிந்தது: மன்றத்தில் கூடியிருந்தோரின் மனங்களும் அன்பில் நிரம்பி வழிந்தன : அருள் வழிகிற நெஞ்சத்தோடு ஸ்வாமிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

''கூட்டத்தில் பல்வகை மக்களும் இருந்தனர். அவ்வளவு பேரும் ஒரே ஆசையில் நிறைந்திருந்தனர். ஸ்வாமிஜியைக் காண வேண்டும். முடியுமானால் அவரது அங்கியின் நுனியை மீண்டும் ஒரு முறையேனும் தொட்டுப் பார்க்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை'' என்கிறார் எரிக் ஹேம்மாண்ட்.

ஸ்வாமிஜிக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. அதற்கு நெகிழ்ச்சியுடன் பதில் அளித்த ஸ்வாமிஜி, ''இந்த உடலிலிருந்து விடுபடுவதுகூட நன்மை யென்று நான் எண்ணுவதுண்டு: உபயோகம் தீர்ந்து போன ஓர் ஆடையைத் தூக்கி எறிவதுபோல் உடலை எறிய விரும்புவதுண்டு. ஆனாலும் உத்தம சத்தியத்தை எல்லோரும் அறியும் வரையில் மனித குலத்துக்குப் பிரசாரம் செய்வதிலிருந்து நான் ஓய்வு பெற இயலாது'' என்று கூறினார்.

ஆம், உலகின் கடைசி மனிதன் கடைத்தேறும் வரையில் அவர் தமது மோக்ஷத்தைத் துறக்கத் தயாராக இருந்தார். ஆனால் தமது இதய அந்தரங்கத்தில் அவர் அறிந்துதான் இருந்தார் —அவ்வாறு உலகின் கடைசி மனிதன் வரையில் சத்திய சாக்ஷாத்காரம் பெறுகிற நாள் வரவே வராது என்று. நாம் எவ்வளவு தான் பிரசாரம் செய்தாலும் ஒவ்வொரு மனிதனும் தானேதான் தன்னை முன்னேற்றிக் கொள்ள முடியும் என்று அவர் நம்பினார்.

'உத்தரேத் ஆத்மனாத்மானம்' என்ற ஆப்த மொழியை அடிக்கடி எண்ணிப் பார்த்தார். 'தெய்வ அருள், குருவின் அருள் இவை இருந்தாலும் அவற்றைவிட முக்கியமாக ஒருவனுக்குத் தன்னுடைய நெஞ்சின் அருள் இருக்க வேண்டும்' என்று பரமஹம்ஸர் கூறியதை அடிக்கடி நினைத்துக் கொண்டார். அப்படி நெஞ்சின் அருள் உடியாமலும், தன்னாலேயே தன்னை உயர்த்திக் கொள்ளாமலும் இருப்பவர்கள்தான் பெரும்பாலோர் என்று உணர்ந்தார். ஒரு கடிதத்தில் அவர் கூறுகிறார்: ''உத்தமமான உலகம் என்று சொல்வது 'கொதிக்கிற பனிக்கட்டி' என்று சொல்வதற்கு ஒப்பாகும். உத்தமமாக ஆகிவிட்டால் அது உலகமாகவே இராது.....''

67

மகாபுருஷர்களின் பணியைப் பற்றி எழுதும் போது நாம் பக்தி ஆவேசத்தாலோ, அல்லது வார்த்தை ஜாலத்திலுள்ள ஆசை காரணமாகவோ அவர்

களால் உலகமே புரண்டுவிட்டதென எழுதி விடுகிறோம். இவ்வாறு உலகம் முழுவதும் திருந்தியதென்பது உண்மையில் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. அப்படியானால் அவதார புருஷர்களின் பணிதான் என்ன?

ஆத்மிகம் அடியோடு நசித்து விடாமல் காப்பதுதான் அவர்களின் பணி. அவர்கள் ஒரு சிலரை மோக்ஷ மார்க்கத்துக்கு அழைத்துச் சென்றாலும் அதுவே அவதாரத்தின் பலனாகும். ஏனெனில், அப்படி மோக்ஷ மார்க்கத்தில் செல்லும் ஒரு சிலருமே தங்களுக்குள் அகில உலகத்தையும் அடையப் பெற்றவர்கள் அல்லவா?

சகல ஜீவராசிகளாகவும் தோன்றுகிற பரம்பொருள் ஓர் அவதாரமாக வந்து அனைவரையும் முக்தி நிலைக்கு இட்டுச் செல்லும் எனில் இத்தனை ஜீவராசிகளும் தோன்றியிருக்கவேண்டிய அவசியமே யில்லை. அஞ்ஞானத்துக்கு ஆட்பட்ட எண்ணிறந்த ஜீவர்கள்போலிருந்து, எத்தனையோ இடர்ப்பாடுகளில் இடறி விழுந்து அல்லலுற்றுச் சிறுகச் சிறுக அவர்கள் தாமாகவே தங்கள் உண்மை நிலையைக் கண்டு கொள்வதுபோல் விளையாடத்தான் பரம்பொருள் விரும்புகிறது போலும். இவ்வளவு அஞ்ஞானத்தில் ஆழ்ந்துள்ள நாமும் நம் முயற்சியிலேயே பரம நிலையைத் தொட முடியும் என்று ஆண்டவன் நம்பி நம்மை உலகில் விட்டிருக்கிறான். நாம் அவனை நம்புகிறோமோ இல்லையோ, அவன் நம்மை நம்புகிறான். இவ்வாறு தன் முயற்சியிலேயே ஜீவன் அமர நிலையை எய்த முடியும் என்பதிருக்க, அவதாரத்தின் மூலம் பரிபூரணமாக உலக உத்தாரணத்தை நிறைவேற்றி வைக்க ஆண்டவன் நினைப்பானா? ஆகவே, பரம நிலையை உலகு ஒரேயடியாக மறந்துவிடாமல் நினைவூட்டவே அவதாரங்கள் நிகழ்கின்றன எனலாம். ஆனால் ஆண்டவனின் இரகசியங்களை யாரே முழுதும் அறிந்து விளக்க முடியும் ?

அன்னை குழந்தைக்காக உணவைத் தயாரிக்கிறாள்; பிறகு பிசைகிறாள்; அதன்பின் ஊட்டுகிறாள். என்றாலும் அதை உண்ண வேண்டியது குழந்தை தானே ஒழிய குழந்தைக்காக அன்னையே அதனை உட்கொள்ள முடியாதல்லவா? நமக்காக ஞானிகள் ஆத்மிகத்தை ரஸமான பொருளாக உற்பத்தி செய்கிறார்கள்; தங்கள் அநுபவத்தால் அதனைக் குழைத்துப் பிசைகிறார்கள்; உபதேசங்களாக அவற்றை நமக்கு ஊட்டுகிறார்கள் ; எனினும் உண்ண வேண்டியது நாம்தானே ? நாம் எல்லோருமே அதனை உண்போம் என்று சொல்ல முடியாது. ஜுரம் வந்த உடலுக்கு நல்ல உணவும் கசப்பது போல் நம்முடைய சம்ஸ்காரம் காரணமாக ஞானமுதம் பிடிக்காமலும் போகலாம்.

நமக்கு நீர் வார்த்து உரமிடுகிறவர்களே ஆசாரியர்கள்; ஆனால் நாமேதான் புஷ்பிக்கவும் பழுக்கவும் வேண்டும் !

''இனி எனக்கு ஒரே சிந்தனைதான். இந்தியாதான் அது'' என்றார் ஸ்வாமிஜி ஸேவியர் தம்பதியிடம். ஒரு நண்பர் அவரிடம் கேட்டார்: ''போகங்களும் பெருமைகளும் ஆற்றல்களும் நிறைந்த மேல் நாடுகளில் நாலாண்டுகள் வாழ்ந்துவிட்டீர்கள். இப்போது உங்கள் தாய் நாட்டைப் பற்றி எப்படி நினைக்கிறீர்கள்?'' — என்று.

''எப்படியா? நான் என் தாய் நாட்டிலிருந்து கிளம்பு முன் அதனை நேசித்தேன். இப்போதோ அதனுடைய ஒவ்வொரு தூசியும் எனக்குப் புனிதமாகி விட்டது. அதன் மீது வீசுகிற காற்று எனக்குப் புனிதமானது. இப்போது எனது தாய்நாடான — புனித தேசமான — இந்தியா முழுவதுமே எனது க்ஷேத்திராடன ஸ்தலம், தீர்த்தாடன லட்சியம்'' என்றார் ஸ்வாமிஜி.

டிஸம்பர் 16-ந் தேதியன்று ஸ்வாமிஜியும் ஸேவியர் தம்பதியும் லண்டனிலிருந்து புறப்பட்டனர். ஆங்கிலக் கால்வாயைக் கடந்தது தவிர, நில மார்க்கமாகவே அவர்கள் நேபிள்ஸ் வரை சென்றனர். எழுத்தர் குட்வின் கடல் மார்க்கமாகச் சென்று அவர்களுடன் நேபிள்ஸில் சேர்ந்தார்.

பிரான்ஸ், ஆல்ப்ஸ் இவற்றின் வழியாக மிலானை அடைந்தனர் ஸ்வாமிஜியும் ஸேவியர் தம்பதியும். இத்தாலி அநுபவம் ஸ்வாமிஜிக்கு ஆனந்தமாக இருந்தது.

முனிவர்களுடன் வைத்து மதிக்கத் தக்க பாலையும், புனித பீட்டரையும் நினைந்தபடி, கிறிஸ்துவ மதம் ஐரோப்பாவில் பல இன்னல்களுக்கும், இன்னுயிர்த் தியாகங்களுக்கு மிடையில் பிரவேசித்த நாட்களில் நினைத்தவாறு ரோமாபுரியில் உள்ள ஸெயின்ட் பீடர்ஸ் சர்ச் என்ற மகோன்னதமான ஆலயத்தை மௌனத்தில் மூழ்கியபடி தரிசித்தார் ஸ்வாமிஜி.

அங்கு விமரிசையாக நடந்த சடங்குகளையெல்லாம் கண்டார். ''ஸ்வாமி, உங்கள் மனக்கு இந்தச் சடங்குகள் ஏற்கின்றனவா?'' என்று கேட்டாள் உடன் வந்திருந்த ஒருத்தி.

''ஆண்டவனை உருப்படைத்தவனாக நீ விரும்புகிறாயெனில் அவனுக்கு உலகத்தில் உள்ள சிறப்புக்களையெல்லாம் அளிக்க வேண்டியதுதானே? தலைசிறந்த வாசனைப் பொருட்களையும், புஷ்பங்களையும், பழங்களையும், பட்டுக்களையும் அவனுக்கு அளிக்க வேண்டியது முறைதானே?'' என்றார் ஸ்வாமிஜி.

1896ம் ஆண்டு டிஸம்பர் முப்பதாம் தேதி நேபிள்ஸிலிருந்து புறப்பட்ட கப்பல் ஸ்வாமிஜியைத் தனது பல பிரயாணிகளிடையே பெற்றிருந்தது.

1897ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதி. ஸ்வாமிஜி பிறந்து முப்பத்து நான்கு ஆண்டுகளும் மூன்று தினங்களும் ஆகியிருந்தன. முப்பத்து முக்கோடி தேவர்களும் புகழத்தக்க மாபெரும் சாதனையைச் செய்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த அந்த இளைஞர், கப்பல் தளத்திலிருந்து தமது ஒளி காந்தும் கண்கள் விழுக்கத்தனைவிட ஒளிரத் தம் எதிரே, இளம் காலையின் மோகன அரவணைப்பில் தூர தூரத்தில் தெரிந்த நிலப்பரப்பை பார்த்துக் கொண்டிருந்தார். இன்று அந்நிய நாடாகவும் அன்று இந்தியாவில் ஒரு பகுதியாகவும் இருந்த இலங்கையின் பூமியைக் கண்டு தாயின்

மேனியைக் காணும் குழந்தையின் அன்புக் கிளர்ச்சியை அடைந்தார் ஸ்வாமிஜி.

உதிக்கின்ற சூரியனின் செவ்விள ஒளியில் நிழலாட்டமிட்ட கொழும்பு மாநகரத்தின் துறைமுகமும், அதனைச் சுற்றி யிருந்த பசிய மரங்களும், மஞ்சள் பழுப்பான கடற்கரையும் மெல்ல மெல்லத் தெளிவு பெற்று வந்தன.

ஸ்வாமிஜி பரபரப்படைந்தார். அவரைக் குறித்துக் கொழும்புத் துறைமுகமும் பரபரப்படைந்திருந்தது!

'வந்தான் வந்தான் வந்தான் யுக புருஷன்' என்ற துடிப்போடு ஸ்வாமிஜியை வரவேற்றுக் கொழும்பு மக்கள் எழுப்பிய ஜயகோஷம் அதன் பின் அவர் பாரதத்தில் சென்ற இடங்களிலெல்லாம் எதிரொலித்தது.

இந்திய நாட்டின் பெருமையை அவ்வப்போது இந்தியர்களுக்கே எடுத்துரைத்த அவதார புருஷர்களாகிய ஆசாரியர்கள் பலருண்டு. ஆனால் நம் நாட்டுக்கு மட்டுமின்றி உலகுக்கெல்லாம் பாரதத்தின் மேன்மையை எடுத்துரைத்துத் திரும்பிய முதல் ஆத்மிகத் தூதரல்லவா ஸ்வாமிஜி? அப்படிப்பட்டவரை எப்படி மதித்துப் போற்றிப் பூஜிக்க வேண்டுமோ, அவரது ஆக்ஞையை எப்படித் தாங்கிப் பணிபுரிய வேண்டுமோ அப்படி மதிக்கவும், போற்றவும், பூஜிக்கவும் இந்தியா துடித்துக் கொண்டிருந்தது. அந்தத் துடிப்பின் தொடக்கத்தைக் கொழும்பிலேயே கண்டார் ஸ்வாமிஜி.

கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் நின்றது. ஜன சமுத்திரத்திடையே இறங்கினார் ஸ்வாமிஜி. ஏராளமான மக்கள் யாராலும் அடக்க மாட்டாமல் திமிறிக் கொண்டு வந்து ஸ்வாமிஜியின் பாதங்களில் விழுந்து பணிந்தனர். விரைவு விரைவாக வரவேற்பு வைபவம் முன்னேறியது. விரைவு விரைவாகச் செல்கிற இரு புரவிகள் பூட்டிய ஸாரட்டு ஸ்வாமிஜியை பார்னெல் சாலையில் அமைத்திருந்த பந்தலுக்கு இட்டுச் சென்றது. அதைத் தொடர்ந்து ஊர்வலத்தில் வண்டிகள் எல்லாம் சென்றன. பாதசாரிகளும் திமிதிமி என்று ஓடிப் பின்தொடர்ந்தனர். கொடி பிடித்து, குடை பிடித்து, நடை பாவாடை போட்டு, மரபுப்படி ஸ்வாமிஜியை வரவேற்றவர் இந்தியரான அந்நாள் இலங்கையர்.

வழி நெடுகிலும் வீடு தோறும் ஸ்வாஜிக்குப் பூரண கும்பம் அளிக்கப்பட்டது. ஈழத்தின் வழக்கப்படி வாயிற்படியில் பழங்களை அலங்காரமாக வைத்துத் தீபமேற்றி யிருந்தனர்.

ஸ்வாமிஜி வரவேற்புப் பந்தலில் பிரவேசித்ததும் ஓர் அழகிய செயற்கைக் கமலம் தனது இதழ்களை விரித்துக் கொண்டது. அதனுள்ளிருந்து பட்சியொன்று பறந்து சென்றது. பாரதத் தாயின் கூம்பியிருந்த இதய கமலம் விரிந்து விட்டது. இத்தனை நாள் அதில் மறைந்து வாழ்ந்த பெருமை இன்று சிறகடித்துப் பறக்கத் தொடங்கி விட்டது.

தேவார இன்னிசை எழும்பியது. ஸ்வாமிஜியை சம்பிரதாயமாகப் பாரதத்துக்கு வரவேற்ற முதற்சொற்கள் தீந்தமிழ்ச் சொற்கள், அதுவும் சிவநேசச் செல்வர்களின் தெய்வச் சொற்கள் என்பதில் நமக்குத் தனிப்பட்ட பெருமை உண்டல்லவா?


குட்டிக் கதை

''ஏண்டா இப்படி வேலை இல்லாமல், வெய்யில் பாழ் போகாமல் ஊரைச் சுற்றுகிறே? வெய்யிலில் சுற்றத்தான் சுற்றுகிறாய், இந்தக் கருவடாத் தட்டையேனும் தலையில் வைத்துக் கொண்டு சுற்றி வாயேன். கருவடாமும் உலரும்; தலைக்கு நிழலுமாச்சு'' என்று சொல்வாள் குண்டப்பாவின் பாட்டி. இப்பொழுது அவனுக்கு உத்தியோகம் கிடைத்து விட்டது.

உத்தியோக நிமித்தமாக வெளியூர்களில் தங்க நேரிட்டபோது சாதாரண ஹோட்டல்களிலேயே தங்கிப் பணத்தை மிச்சப்படுத்தினான் குண்டப்பா. கம்பெனியின் வியாபார முன்னேற்றத்துக்காக அவன் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்யவேண்டியிருந்தது. ஒரு நாள் பகல் முழுதும் வியாபார விஷயமாக ஊரைச்சுற்றி விட்டு இரவு பத்து மணிக்கு ஹோட்டலில் தன் அறையில் வந்து படுத்தான். இரவு ஒரு மணி இருக்கும். அவன் அறைக் கதவு தட்டப்பட்டது. தூக்கக் கலக்கத்தில் தள்ளாடித் தள்ளாடிக் கதவைத் திறந்தான். 'சார்! மன்னிக்கணும். உங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது' என்றான் ஹோட்டல் சிப்பந்தி. குண்டப்பாவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. 'தந்தியைக் கொண்டு போய் குப்பையிலே போடு' என்று அவன் முகத்தில் அறைந்தாற்போல் கதவைப் 'படார்' என்று சாத்தினான். உதறிவிட்டு வந்த தூக்கத்தைப் பிடித்துக் கொண்டு மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தான்.

இரண்டு மணி சுமாருக்கு மறுபடியும் குண்டப்பாவின் அறைக் கதவு தட்டப்பட்டது. மிகுந்த களைப்புடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த குண்டப்பா, ரொம்பக் கோபத்துடன் எழுந்து வந்து மீண்டும் கதவைத் திறந்து பார்த்தான். அதே ஹோட்டல் சிப்பந்தி அங்கு காட்சி யளித்தான். 'ஏனய்யா மறுபடியும் என்னை எழுப்பினே?' என்று கத்தினான் குண்டப்பா.

''சார்! மன்னிக்கணும்! தந்தி உங்களுக்கு வரல்லே. தவறாகச் சொல்லிவிட்டேன். பக்கத்து அறைக்காரருக்கு வந்தது தான். அவரிடம் கொடுத்துவிட்டேன்!'' என்றான் சிப்பந்தி.





ஹ்யூலெட்ஸ் மிக்சர்

அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது



உங்கள் உழைப்பு சிரமமிக்கது. குடும்பப் பொறுப்புகள் ஒரு பக்கம்; குழந்தைகளின் பராமரிப்பு ஒரு பக்கம். உங்கள் அலுவல்கள் மிகவும் சிரமமானதுதான். இவ்வாறிருக்க, அஜீரணத்தினால் அடிக்கடி தொந்தரவேற்பட்டால் மிகவும் கஷ்டமல்லவா? ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்பட வேண்டியதில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில்போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வயிறுண்டாகும் அமிலங்களை அகற்றி, ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்குங்கூட உத்தமமானது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

86/A, கனியப்ப நாயக் தெரு, மதராஸ்-3

JWT/CJH/1939

விண் எட்டும் கரகம்பத்திடையே எழுந்து எழுச்சி கொண்ட உணர்ச்சியுடன் பேசினார் ஸ்வாமிஜி. ''பிச்சைக்காரனை ஒரு சந்நியாசிக்கு இப்படிப்பட்ட ராஜோபசாரம் செய்வதிலிருந்தே ஹிந்துக்கள் ஆத்மிகத்துக்கு அளிக்கும் மதிப்பு தெரிகிறது'' என்று நெகிழ்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் கூறினார் ஸ்வாமிஜி. **இந்திய தேசம் உயிர் வாழவேண்டுமானால் சமய உணர்வையே தேசிய வாழ்வின் முதுகெலும்பாகச் செய்ய வேண்டும்** என்று ஆணையிட்டார்.

பிறிதொரு நாள், கொழும்புப் பொது மன்றத்தில் சர்வதேச சமயத்தைச் சமைப்பது பற்றிப் பேசினார். சர்வ தேசியத்தைப் பற்றிப் பேசினாலும், சுதேச அபிமானத்தை இழந்து அந்நிய மோகம் பிடித்தலைவதை ஒரே கூட்டத்தில் கண்டித்தார் ஸ்வாமிஜி. கூட்டத்தினரில் பலர் ஆங்கிலேய உடை அணிந்திருந்தது தான் ஸ்வாமிஜியின் கண்டனத்துக்குக் காரணம். இந்நாட்டுச் சூழலுக்குச் சற்றும் ஒத்து வராத அந்த உடைகளை அணிவது, அந்நியர்களைக் 'காப்பி' அடிப்பதன்றி வேறெதுவும் இல்லை என்று விண்டு கூறினார் ஸ்வாமிஜி.

இன்று இந்தியா வந்தால் ஸ்வாமிஜி என்ன சொல்வாரோ ?

பிரகிருதி சுந்தரி தனது சௌந்தரியத்தையெல்லாம் மலர்த்திக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார் ஸ்வாமிஜி. யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு சாலையும்—ஒவ்வொரு வீடுமே — பண்டிகைக் கோலம் பூண்டிருந்தது. அந்நகரில் ஸ்வாமிஜி நிகழ்த்திய நூறு நிமிட உரையில் யாழ்ப்பாண சமூகமே மின்சாரம் பாயப்பெற்றதுபோல் 'ஆயிற்று' என்று ஒரு பத்திரிகை கூறுகிறது.

ஈழத்தில் ஸ்வாமிஜிக்கு வந்த அழைப்புக் கடிதங்களும், தந்திகளும் கணக்கிலடங்கா. ஆனால் அவரால் அவற்றை ஏற்க முடியவில்லை. காலம் போதாதது ஒரு காரணம். அவரது உடலும் மிக அலுத்துப் போயிருந்தது. ''அவர் இன்னும் அதிக நாள் இலங்கையில் இருந்திருந்தால் அன்பினாலேயே கொல்லப்பட்டிருப்பார்'' என்று கூறுகிறார் உடன் இருந்த ஒருவர்.

ஈழத்திலிருந்து புறப்பட மனம் கொண்ட ஸ்வாமிஜியை, இன்று பாரதம் என்ற பெயரில் விளங்கும் தாய்த் திருநாட்டுக்கு மனம் கசிந்து அனுப்பி வைத்தனர் ஈழத்து அன்புத் தமிழர்கள்.

ஜனவரி 26ந் தேதி, மங்களவாரம் — பரம மங்களமான தினமேதான் அது — நீராவிப் படகு பாம்பனை நெருங்கியது.

ஆண்டிப் பரதேசியாக ஸ்வாமிஜி திரிந்த காலத்திலேயே அவரை அண்டி ஆசி பெற்று அவரது அமெரிக்கப் பயணத்துக்கு உதவிய ராமநாதபுரத்து மன்னர் பாஸ்கரஸேதுபதி தமது அதிகாரிகளுடன் தாமே ராஜாங்கக் கப்பலோடு அங்கு ஆர்வமாகக் காத்திருந்தார். நீராவிப் படகிலிருந்து ஸ்வாமிஜி அந்தக் கப்பலுக்கு மாறியவுடன் மன்னர் உள்ளிட்ட யாவரும் மகனீயரை வணங்கினர்.

கடற்கரை அதோ தெரிந்தது. 'அதோ' மெல்ல மெல்ல 'இதோ' ஆயிற்று. அங்கு ஆயிரமாயிரம் மக்கள் பக்தி ஆவேசத்துடன் ஆர்ப்பரித்துக் காத்திருந்தார்கள். அலைகளில் துள்ளித் துள்ளிச் சென்று இந்தியாவின் முதல் சர்வதேச ஆத்மிக தூதரைக் கரைக்குக் கொண்டு சேர்த்தது கப்பல்.

புண்ணிய பாரத மண்ணுக்கு மேலும் புண்ணியம் கூட்டியது ஸ்வாமி விவேகாநந்தரின் திருப்பாதம்.

வங்காள விரிகுடாவை விடப் பரந்த, ஆழ்ந்த அன்பைத் தெரிவிக்கும் முறையில் வங்காளம் தந்த வேதாந்த வேந்தரை வரவேற்றது தமிழகம். பாம்பன் மக்களின் வரவேற்பு அதற்குக் கொடியேற்றமாகும்.

மன்னரின் ஸாரட்டில் ஸ்வாமிஜி ராஜ மாளிகை நோக்கி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். மன்னரும், உயர் அதிகாரிகளும் வாகனத்தோடு நடந்து சென்றனர். அவ்வளவு மரியாதை செய்தும் மன்னருக்குத் திருப்தி உண்டாகவில்லை. புரவிகளை வண்டியிலிருந்து அவிழ்த்து விடுமாறு உத்தரவிட்டார். தாமே தமது அதிகாரிகளுடன் வாகனத்தை இழுக்கலானார்.

மறு நாள் ராமேசுவரத்தில் மகோந்நதமான ஆலயத்துக்குக் கசிந்த கண்களும் கசிந்த நெஞ்சுமாகச் சென்றார் ஸ்வாமிஜி. ஐந் தாண்டுகளுக்கு முன் அலை பாயும் உள்ளத்தோடும், நடந்து நடந்து கொப்புளம் கண்ட உள்ளங்காலோடும் ராமநாதனைக் கண்டதையெல்லாம் நினைவுகூர்ந்தார். அன்று யாரும் கவனியாமல் வந்தவரை இன்று கோவில் அருகே யானைகளும் ஒட்டகங்களும் கோவில் திருச் சின்னங்களும் வரவேற்றன.

கடல் தாண்டிச் சென்று வெற்றி பெற்றுத் திரும்பிய ராகவன் ராமநாதனைப் பூஜித்தது போலவே கடல் தாண்டிச்சென்று அஹிம்ஸா வெற்றி — ஆத்மிக வெற்றி — பெற்றுத் திரும்பிய ஸ்வாமிஜியும் ராமநாத ஸ்வாமியை மனமாரப் பணிந்தார்.

ராமேசுவரத்து ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்புக்கு அற்புதமாக விடையளித்துப் பேசினார். சிவபெருமான் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கிறான் என உணர்ந்து, மக்கள் சேவையை மகாதேவன் சேவையாக நினைக்குமாறு அறைகூவினார். மறுநாளே மகாராஜா ஆயிரக்கணக்கான ஏழையருக்கு உணவும் உடையும் அளித்து ஸ்வாமிஜியின் ஆணையைக் காரியமாக்கிக் காட்டினார்.

ஸ்வாமி விவேகாநந்தர் மேனாடுகளில் ஸநாதன தர்மத்துக்கு வெற்றி கண்டு திரும்பியதை யொட்டி மன்னர் நாற்பதடி உயர முள்ள ஒரு ஜய ஸ்தம்பம் எடுத்தார். இன்று பாரத அரசின் பிரமாண வாசகமாக விளங்கும் 'ஸத்யமேவ ஜயதே' என்ற உபநிஷத மகா மந்திரத்துடன்தான் இந்த ஜய ஸ்தம்பத்தின் வாசகமும் தொடங்குகிறது.

ஸ்வாமிஜி ஸம்ஸ்தானத்துத் தலைநகராகிய ராமநாதபுரத்தை அடைந்ததும் அமோக வரவேற்பினைப் பெற்றார். தீவர்த்திகள் வெளி எடுத்தது போல் இருமருங்கும் ஜ்வலிக்க ஸ்வாமிஜி மன்னரின் வாகனத்தில் நகர்வலம் சென்றார். மன்னரே பாதசாரியாகப் பாதையைக் கூறிக் கொண்டு சென்றார். 'சங்கர



''வியாபாரம் படிப்படியா மேலே ஏறிண்டிருக்காப்பலே இருக்கு....''

வில்லா' என்ற பெருமாளிகையும் வந்து சேர்ந்தது. அத்வைத ஸ்தாபகரின் பெயரைத் தாங்கிய அம்மாளிகையில், அத்வைதத்தின் தனிப்பெரும் பிரசாரகரான ஸ்வாமிஜி பிரவேசித்தார். சிறிது நேரம் ஓய்வு கொண்டு விட்டு அதன் பிரம்மாண்டமான சபா மண்டபத்தை அடைந்தார். ஆயிரக்கணக்கான கண்டங்களிலிருந்து புறப்பட்ட வாழ்த் தொலிகள் ஆகாயத்தை முட்டின. மன்னர் பாராட்டுரை வழங்கியபின் அவரது சகோதரரான ராஜா தினகர சேதுபதி வாழ்த்துப் பத்திரத்தை வாசித்தார். அதனைச் சொக்கத் தங்கத்தினால் ஆகிய சௌந்தரியப் பேழை ஒன்றில் வைத்து ஸ்வாமிஜிக்கு அர்ப்பணித்தார்.

ராமநாதபுரத்துத் தர்பாரில் கோலாகலமாக நடைபெற்ற ஒரு வரவேற்பில் ஸ்வாமிஜி ராமநாதபுரத்தரசருக்கு, ''ராஜ ரிஷி'' என்ற விருதளித்துச் சிறப்பித்துப் பேசினார்.

அருமந்தச் சீடர்கள் நிறைந்த நமது அன்புக்குரிய சென்னைக்குக் கிளம்பினார் ஸ்வாமி விவேகானந்தர்.

வழியில் உள்ள பல இடங்களில் வரவேற்பு உபசாரங்களை ஏற்று உபதேசித்தார். ஸ்வாமிஜியின் புகழ் தமிழ் நாட்டில் எப்படிக் காட்டுத் தீயாகப் பரவியிருந்தது என்பது அப்போது வெளியாயிற்று. ஓயாத அலைச்சலாலும், சொற்பொழிவாலும் உடல் அலுத்திருந்தாலும் தமிழ்ப் பெருமக்களின் அன்பு அவர் உள்ளத்தை உற்சாகமாகவே வைத்திருந்தது. மதுராபுரியில் இந்த உற்சாகத்தை வார்த்தைகளாக வடித்துப் பிரசங்கம் புரிந்தார் ஸ்வாமிஜி. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் வழிபட்டார். ஆலவாய் ஆலயத்தின் கலைச் சிறப்புக்களைக் கண்டு பெருமிதமும் பேருவகையும் கொண்டார்.

மதுரையிலிருந்து அவர் கும்பகோணம் செல்கிற மார்க்கத்தில் ஒரு சிற்றூர் மீதமில்லாமல ரயில நிலையம் தோறும் மக்கள் கூடி அவருக்கு அஞ்சலிகளை அளித்தனர்.

திருச்சியில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் விடியற்காலை நாலு மணிக்கு ரயில் நிலையத்தில் கூடியிருந்தனர். பல நிறுவனங்களின் சார்பில் வாழ்த்தேடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. தஞ்சையும் உயர்ந்த முறையில் ஸ்வாமிஜிக்கு மரியாதை செலுத்தியது.

கும்பகோணத்தில் ஸ்வாமிஜி மூன்று நாட்கள் தங்கி விருந்தார். 'வேதாந்தத்தின் உபதேசப்பணி' (Mission of Vedanta) என்ற ஞானச்சுடர் உரையை நிகழ்த்தினார். ''**உத்திஷ்டத. ஜாக்ரத. ப்ராப்ய வராந்நிபோதத**—எழுமின், விழிமின், குறிக்கோளை அடையக் குன்றாமல் முயன்றிடுக'' என்று முழங்கினார். இதுவே உறங்கிய இந்தியாவுக்கு ஸ்வாமிஜி மீண்டும் மீண்டும் விடுத்த அறைகூவலாகும்.


''ஆத்மா என்பது அனந்தமான ஒன்றே — நானும் நீங்களும் சோதரர் மட்டுமல்ல; நாம் ஒருவரே'' என்றார்.

ஞானியர்களுக்கும் எளிதில் கைவராத அத்வைதம்தான் உலகத்தின் எல்லா மக்களுக்கும் லட்சியம் என்று ஸ்வாமிஜி அறைகூவினார் எனில் அவர் மனித சமுதாயத்திடம் எத்தகைய நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்? அவர் மேலும் கூறியதைப் பாருங்கள் :


''நான் அத்வைதத்தை அளவுக்கு மீறி உபதேசிக்கிறேன், துவைதத்தை மிகவும் சொற்பமாகத்தான் சொல்கிறேன் என்று குறை கூறப்படுகிறது. துவைத சமயத்தில் எவ்வளவு மனோந்நதம் உள்ளது, எத்தகைய அன்புக்கடல் உள்ளது, எப்பேர்ப்பட்ட எல்லையற்ற பரவச அருள் நிலையும் ஆனந்தமும் உள்ளன என்பதை யெல்லாம் நான் நன்றாக அறிவேன். என்றாலும் இது அழுவதற்கான காலமில்லை; ஆனந்தத்தில்கூடக் கண்ணீர் விடுகிற சமயமல்ல இது. நாம் வேண்டிய மட்டும் அழுதாயிற்று; மிருதுவாக இருக்க இது தருணமல்ல. இப்போது நமது தேசத்துக்கு வேண்டியன இரும்பை நிகர்த்த தசைகளும், உருக்கை ஒத்த நரம்புகளும், எதனாலும் தடுக்க முடியாத மகத்தான சங்கல்ப பலமுமே. ஆழ்கடலில் அடிவாரம் வரையில் சென்று மரணத்தை நேருக்கு நேர் எதிர்கொள்கிற சங்கல்ப பலம் இன்று தேவை. யாவும் ஒன்றே என்கிற அத்வைத லட்சியத்தைப் புரிந்து கொண்டு உணர்வுக்குக் கொண்டு வருவதால் தான் இந்த நிலைமையை உண்டாக்கவும், நிலை நாட்டவும், வலுவாக்கவும் இயலும். எந்த அந்நியரானாலும், விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் முப்பத்து முக்கோடி மக்களாகிய நம்மைக் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஆண்டு வருவது எதனால்? அவர்களுக்குத் தங்களிடம் நம்பிக்கை இருப்பது போல் நமக்கு இல்லை.


''பலவீனமென்ற இந்த மயக்கத்திலிருந்து விழிப்புறு. பலவீனமானவர் எங்குமே இடையாது. உன் சக்தியை அறிந்து அதனை எடுத்துக் கூறு. உனக்குள் உள்ள ஆண்டவனை எடுத்தியம்பு. அவனை மறுதலிக்காதே.''

மக்களிடமெல்லாம் ''ஆண்டவனுருங்கள்'' என்று அறைகூவுவதுதான் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது! ''தேவராவோம்; தேவ









ராக்குவோம்'' என்று கம்பீரமாகச் சங்க நாதம் செய்தவரல்லவோ ஸ்வாமிஜி?

கும்பகோணத்திலிருந்து சென்னை வரும் வழியில் மீண்டும் பலப் பல வரவேற்புகள்.

சென்னை நெருங்கிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சிற்றூர். அங்கு ஸ்வாமிஜி பயணம் செய்த 'எக்ஸ்பிரஸ்' ரயில் நிற்காது. என்றாலும் மக்களுக்கு அவரைப் பார்த்து அஞ்சலி செலுத்தியே ஆகவேணுமெனப் பேராவல். ரயிலை நிறுத்தும்படி ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டுக் கொண்டு பார்த்தார்கள். ஆனால் அவருக்கு ஏது அந்த அதிகாரம்? ரயிலோ கண்ணுக்குத் தெரிகிற தொலைவில் வந்து விட்டது. 'ஜுகு ஜுகு' என்று நெருங்கிக் கொண்டும் இருக்கிறது. அவ்வளவுதான்! நூற்றுக்கணக்கான மக்கள் தண்டவாளத்தின் குறுக்கே படுத்துக்கொண்டு விட்டார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் விலவிலத்துப் போனார்! ரயிலின் கார்ட் விஷயத்தைப் புரிந்து கொண்டு ரயிலை நிறுத்தினார். மக்கள் ஆனந்த பரவசமாக ஸ்வாமிஜியின் பெட்டியைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்தனர். அந்தத் தமிழ் நாட்டுக் கிராம வாசிகளின் அமிழ்த நெஞ்சைக் கண்டு ஸ்வாமிஜியின் நெஞ்சு நெகிழ்ந்தது. கண்களிலிருந்து பொல பொல என நீர் உதிர்ந்தது. இரு கரங்களையும் தூக்கி ஆசி கூறினார்.

ஸ்வாமிஜி வரப் போகிறார் என்பதை அறிந்த சென்னை, ராமபிரானை வரவேற்கத் துடித்த அயோத்தி போல உற்சாகத்தில் இக்குமுக்காடிக் கொண்டிருந்தது. பரதேசிப் பரிவிராஜராக அவர் சுற்றிய நாட்களில் அவரது உபதேசத்தை மிக மிகப் புரிந்து கொண்டு அவரைப் பெருமைப் படுத்தித் தானும் பெருமை கண்ட நகரம் சென்னையே. அமெரிக்கா செல்வதற்காக அவருக்கு நிதியம் சேகரித்து அளித்த நகரமும் சென்னையே. இன்று சென்னையில் ஸ்வாமிஜியை வரவேற்க அதி விமரிசையாக ஏற்பாடுகள் நடந்தன.

வழக்கறிஞர் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், நீதிபதி எஸ். சுப்பிரமணிய அய்யர், வழக்கறிஞர் பிலிகிரி அய்யங்கார், டாக்டர் நஞ்சுண்டராவ் முதலிய பிரமுகர்கள் ஸ்வாமிஜியின் வரவேற்பில் பெரும் சிரத்தை கொண்டிருந்தார்கள். ராமகிருஷ்ண மாணவர் இல்லம் என்ற கல்விக் கோயிலைப் பிற்காலத்தில் தோற்றுவித்த வி. ராமஸ்வாமி அய்யங்கார், வி. ராமநுஜாச்சாரியார், மற்றும் முன்பே நமக்குப் பரிச்சயமான 'கிடி' என்ற சிங்காரவேலு முதலியார், அழகிய சிங்கர் ஆகியோர் ஸ்வாமிஜியின் சென்னை வாசம் சிறப்புற நிகழ்ந்ததற்குக் காரணகர்த்தர்களானவர்.

சென்னை மாநகரம் பிரம்மோற்சவக் கோலம் பூண்டது. நகர வீதிகள் அலங்கரிக்கப்பட்டன. 'பூஜ்ய விவேகாநந்தர் நீடு வாழ்க', 'ஓங்குக ஈசுவர சேவகர்', 'ஸ்ரீராமகிருஷ்ணரின் அருமைச் செல்வர் வாழ்க' என்பது போன்ற வாசகங்கள் சாலைகளில் எல்லாம் காணப்பட்டன.

அனைவர் நாவிலும் விவேகாநந்தர் நாமமே நின்றது. முக்கியமாக இளைஞர்கள் இந்த ஆதரிச ஆசாரியனைக் காணத் துடித்துக் கொண்டிருந்தனர். இந்த இளைஞர்களில் நம் அரும்பெரும் தலைவர் ராஜாஜி அவர்களும் இருந்தார்!

1897ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆறாம் தேதி. அந்த மகத்தான தினத்தில் அதிகாலையிலிருந்து நகரமாந்தர் திரள் திரளாக எழும்பூர் ரயில் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். எல்லோர் இதயமும் அன்பு, ஆவல், ஆர்வம் இவற்றில் தத்தளித்துக் கொண்டிருந்தன.

அவ்வளவு கூட்டத்துக்கும் இட வசதி இராதென்பதால் பிளாட்பாரத்தில் செல்வதற்கு விசேஷக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. அப்படியும் பிளாட்பாரம் நிரம்பி வழிந்தது.

சரியாக ஏழு மணி ஐம்பது நிமிஷத்துக்கு, ஸ்டேஷன் அதிர — ஸ்டேஷனில் கூடியிருந்த அனைவரின் இதயங்களும் அன்பு ஆவேசத்தில் அதிர — ஸ்வாமிஜி பிரயாணம் செய்த ரயில் வண்டி வந்து நின்றது. (தொடரும்)

ஒட்டுக்குப் பொட்டு

கடந்த மூன்று வாரங்களில் டில்லி செக்ரடேரியட்டில் தேவையற்ற பத்து லட்சம் பைல்களை ஒழித்தும் கூட மீதம் 32 லட்சம் பைல்கள் உள்ளன. இவையும் மற்ற தஸ்தாவேஜுகளும் 125 மைல் நீளமுள்ள ஷெல்புகளில் அடுக்கப்பட்டுள்ளன.

—புள்ளி விவரம்



செக்ரடேரியட்டில் வேலை பார்ப்போர் தூக்க மாத்திரைகள் சாப்பிட்டுச் சிரமப் பட வேண்டாம் என்பதையும் அடுக்கடுக்காய் அழகாய்த் தூங்கும் பைல்களை ஒருமுறை பார்த்தாலே போதும். ஆனந்தமாய்த் தூக்கம் வரும் என்பதையும் இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. ●

தமது வட இந்தியப் பணியாட்களுடன் ஹிந்தியில்தான் பேசவேண்டியிருக்கிறது என்பதால் டில்லியில் காமராஜ் ஹிந்தி கற்றுக்கொள்கிறார்—செய்தி

காமராஜ் மீதே இப்படி மறைமுகமாக ஹிந்தி திணிக்கப்படுமேயானால் அரசாங்க உத்தியோகங்களில் இருக்கும், இனி சேர விரும்பும் பிற சாதாரண மக்களின் கதி என்னவோ? ●

மே தினத்தன்று ருஷ்யாவின் ரகசிய ஆயுதமொன்று பகிரங்கமாக ஊர்வலத்தில் கலந்து கொண்டு பவனி வந்தது.

—மாஸ்கோ தகவல்

ஆனால் கம்யூனிஸத்தின் கீழ் மக்கள் சுதந்திரமிழந்து பல சங்கடங்களுக்குள்ளாகிறார்கள் என்ற பகிரங்கமான விஷயத்தை அவர்கள் ரகசியமாக வைத்துக் கொள்ள முயல்கிறார்களே! ●



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

மிட்டாய் பேசியது



சர்க்கரையால் ஆனதொரு பொம்மை உயிர் பெற்று நம்முடன் பேசினால் எப்படி இருக்கும்? வியப்பான விஷயம்தான். ஆனால் கல்வி கோபாலகிருஷ்ணன் இப்படியொரு பொம்மைக்கு உயிர் கொடுத்து அதை ஓட ஓட விரட்டிக் குழந்தைகளுக்குப் பல விஷயங்களை அதன் மூலம் விளக்குகிறார். சர்க்கரைப் பொம்மையைத் தேனீக்கள் தூக்கிச் செல்கின்றன. அங்கு இந்த மிட்டாய்ப் பாப்பா தேனீக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்கிறது. பிறகு எறும்புகள் மிட்டாய்ப் பாப்பாவைத் தங்கள் புற்றுக்கு இழுத்துச் செல்கின்றன. அங்கு எறும்புகளின் வாழ்க்கையைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்கிறது பாப்பா. தேனீக்களின் வாழ்க்கையை விட எறும்புகளின் வாழ்க்கை முறை விரிவானது. வியப்பானது. ஆனால் ஆசிரியர் இதில் எறும்புகளின் வாழ்க்கையைப் பற்றி மிட்டாய்ப் பாப்பாவுக்கு ஒரு சிறிதுதான் விளக்கியிருக்கிறார். எறும்பு உலகத்தைப் பற்றி விரிவான தனிப் புத்தகங்கள் முன்பே வெளிவந்திருப்பது இதன் காரணமாயிருக்கலாம். அல்லது மிட்டாய்ப் பாப்பா தன் வீட்டுக்குத் திரும்புவதில் காட்டிய அவசரமாகவும் இருக்கலாம். பெரிய தெளிவான எழுத்துக்களில் தேவையான அழகான படங்களுடன் வெளிவந்திருக்கும் 'மிட்டாய்ப் பாப்பா' குழந்தைகளுக்குச் சுவையானதொரு புத்தகம்.

ஆசிரியர்: கல்வி கோபாலகிருஷ்ணன், பிரசுரம்: பாரதி பதிப்பகம், சென்னை-17 விலை ரூபாய் இரண்டு.

முத்து மாலை

கவிதை பேசும் மொழியில் இனிமையும் இருக்க வேண்டும்; எளிமையும் இருக்கவேண்டும்; கருத்தும் இருக்க வேண்டும் — அத்துடன் கவிதைநயமும் இருக்க வேண்டும்!

எதுகை, மோனை, சீர், தளை ஆகியவை தட்டாமல், இலக்கண விதிகள் பிறழாமல் இருந்துவிட்டால் மட்டும் அது கவிதையாகாது. இவ்வளவுக்கும் மேலாக ஓசை நயமும், கவிதை நயமும் சேர்ந்து ஒலிக்க வேண்டும். பாட்டைப் பாடிப் பார்த்து ஓசை நயத்தைக் கண்டு கொள்ளலாம். ஆனால் கவிதையை உள்ளத்தில் ஊற்றாய்ப் பெருகும் உவகை வெள்ளத்தைக் கொண்டுதான் உணர முடியும். நல்ல கவிதையைப் படித்தால்தான் அத்தகைய உவகை உணர்ச்சி பெருகும். வெறும் வார்த்தை ஜாலம் செய்து கவிதை நூலை இயற்றி விட்டதாகச் சொல்ல முடியாது.

''முத்து மாலை'' என்ற இச் சிறு நூலில் அடங்கியிருக்கும் கவிதைகள் சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் ஆகியவைகளை நிறைவாகக் கொண்டு விளங்குகின்றன.

செந்தாமரை, தமிழ் வாழ்த்து, தமிழ்ப் பாவை, தமிழ் ஊசல், தமிழ் அம்மானை போன்ற பாடல்கள் இனிமையாயிருக்கின்றன.

இயற்றியவர்: ரெ. முத்துக் கணேசன், விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை-1. விலை: ரூ. 1.25.

இருட்டில் வெளிச்சம்

ஆன்மிகத்திலும், அஸ்திகத்திலும் நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை ஒரு நாவல் மூலம் நிறைவேற்றிப் பார்க்க நூலாசிரியர் முயன்றிருக்கிறார். பாராட்டுக்குரிய முயற்சி. நவநாகரிக மோகத்தில் ஆழ்ந்துள்ள இரு குடும்பங்களில் அஸ்திக நாட்டமுடைய ஒரு வாலிபனும் வனிதையும் தப்பிப் பிறந்து, அவர்களுக்குள் மணமாகி, தங்கள் குடும்பத்தினர் இழைத்த இன்னலுக்கெல்லாம் அவர்கள் பொறுமையோடு ஆளாகி, கடைசியில் தங்கள் பெருமையை நிலைப்படுத்திக் கொள்வதாகக் கதை. அவர்களுக்கு எதிர்ப்பாக இருந்த உறவினரில் பெரும்பாலோர் மரணமடைந்து விடுகின்றனர். அல்லது பித்தாகிவிடுகின்றனர். அவர்களும் தங்கள் இருளை நீக்கிக்கொண்டு ஒளிக்கு முன்னேறுவதாகக் கதையை உருவாக்கியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். கூடியவரையில் கதாபாத்திரங்களை உயர்த்த முயல்வதுதான் நல்ல உத்தி.

கதை மூலம் தர்மப் பிரசாரம் செய்ய ஆசிரியர் ஆசைப்படுகிறார். எனினும் கதைப் பகுதியும், தத்துவமும் இயல்பாக இணைந்திருப்பதாகச் சொல்ல முடியவில்லை. நாம் ஓரளவுக்குக் கதை அம்சத்தையும், கதை உத்திகளையும் மறந்து விட்டால் நூலை வெகுவாக ரசிக்கலாம். கதாநாயகன் ராமுவுக்கும், கதாநாயகி மாலாவுக்கும் இடையே நடைபெறும் ஆன்மிக வாதங்களும் அவர்களுக்கு உபதேசமளிக்கும் துறவியின் கருணைமயமான வாக்குகளும் நம் நெஞ்சைத் தொடுகின்றன. எளிய முறையில் தெள்ளிய மொழியில் பல உன்னதக் கருத்துக்களைக் கூறியுள்ள ஆசிரியரின் ஆழ்ந்த சமய நம்பிக்கையும், அந்தரங்கசுத்தியான பக்தியும் போற்றுதலுக்கு உரியன.

ஆசிரியர்: வி. கே. என். ஆசார்யா; வெளியீடு: லக்ஷ்மண விஜயம் பப்ளிகேஷன், சென்னை—17, விலை ரூ. 2.50.

புத்தகப் பார்வைகள்

இது....அதாவது பயம்

ராஜேந்திரகுமார்

"ப்பூ!" என்று யாராவது ஊதியிருந்தால் பத்துக் குட்டிக் கரணம் போட்டு விழுந்திருப்பான் முரளி. அவ்வளவு தூரம் அயர்ந்து போனானென்றால் அதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.

"ஒரு கேள்வியா ஸார் இது?" என்று சிறியவன் சற்றே விலகி நின்று கேட்டான். "காலையில் வழித்துக் கொண்டு வந்ததென்னவோ வாஸ்தவம்தான். ஆனாலும் இவ்வளவு சொரசொரப்பான கன்னங்கள் உலகத்தில் எந்தப் பெண்ணுக்கும் இருக்காது. எந்த இந்தியப் பெண்ணும் இப்படி அமெரிக்கன் கிராப் வைத்துக் கொள்ள மாட்டாள். என்னதான் 'ஜீன்' நாகரிகம் இந்தியாவுக்கு வந்திருந்தாலும், இப்படியொரு 'உல்லன் பாண்டு'ம் 'டெரிலின் சட்டையும் எந்தப் பெண்ணும் போட்டுக் கொள்ள மாட்டாள். இந்த மாதிரி பூட்ஸுகளைச் சுமப்பதென்பது எந்த மங்கையாலும் முடிகிற காரியமில்லை" என்று சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பொழிந்து தள்ளி....... "என்னைப் பார்த்து இப்படிக் கேட்டு விட்டீர்களே?" என்று கூறி முடித்தான்.

"ஐயா.... ஸ்வாமி..." என்று தலைக்கு மேலே கைகூப்பிக் கும்பிட்டார் அந்த 'ரிசர்வேஷன்' குமாஸ்தா. "தெரியாமல் கேட்டு விட்டேன். நீர் வேறு பிலு பிலு என்று பிடித்துக் கொண்டு விடாதீர்கள். ஆமாம். நாளைக்கு நீங்கள் பயணம் போக வேண்டியது அவசியம்தானா?"

"சட்! அபசகுனம்!" என்று பாய்ந்தான் முரளி. "உம்மை இங்கே உட்கார வைத்திருப்பது பொதுமக்களுக்கு உதவி செய்யவா? தொல்லை தரவா! இப்போதே ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய் ரிப்போர்ட் பண்ணுகிறேன். 'சவன்' ரயில் மந்திரி வரைகூடப் போகாமல் விடமாட்டேன்."

"ஐயோ! ரொம்பத்தான் கோபிக்கிறீர்களே!", என்று இளித்தவாறு அழைத்தார் குமாஸ்தா. "இங்கே வாருங்கள்" என்று அழைத்துத் தலை முதல் கால் வரை ஏற இறங்க உன்னிப்பாகக் கவனித்தார்.

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று முரளி முறைத்தான்.

"இல்லை.... யோக்கியமானவர்தானா, என்று பார்க்கிறேன்" என்று அவர் கூறுமுன், "நீரும் வேண்டாம், உம்ம ரிசர்வேஷனும் வேண்டாம்" என்று முரளி நகர்ந்தான்.

"ஸார், ஸார்!" என்று குறுக்கே விழுந்து தடுத்தார் அவர்.

"நேரமோ ரொம்ப ஆகி விட்டது. உங்களை விட்டால் வேறு ஆள் கிடைக்குமோ கிடைக்காதோ.... பணத்தை எடும். மதராஸுக்குத்தானே.....?" என்று பணத்தை வாங்கியவர் பணத்தை வாங்கும் போதும் சரி, பதிவு பண்ணும் போதும் சரி, "அதிர்ஷ்டக்காரன்.... கொடுத்து வைத்தவன்..... லக்கி மேன்" என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருந்ததன் காரணம் அப்போது அவனுக்குப் புரியவில்லை.

மறுநாள் ரயிலேறியபோதுதான் புரிந்தது.

பெண்கள்! பெண்கள்! பெண்கள்!

திருதிருவென்று விழித்துத் தவறிப் போய்ப் பெண்கள் வண்டியில் புகுந்து விட்டோமோ என்று எண்ணி வெளியே வந்து வாசல் பக்கம் பார்த்தான்.

ஆண்கள் வசதிப் பெட்டிதான். ஒட்டியிருந்த பட்டியலைப் பரபரப்புடன் துழாவினான். 'தர்மராஜ் பெண்கள் கல்லூரி உல்லாசப் பயணக் கோஷ்டி' என்ற பெயரையும் தன் பெயரையும் தவிர வேறு பெயரையே காணோம். சங்கடத்துடன் அவன் தலையைச் சொறிந்து கொண்டான்.

குழந்தையிலிருந்து ஹாஸ்டலிலேயே தங்கிப் படித்து வளர்ந்தவனாதலால் பெண்களோடு அவ்வளவாகப் பழக்கம் கிடையாது. ஆகையால் அவனுக்குப் பெண் என்றாலே ஒரு இது....அதாவது பயம்! அந்தப் பயத்தினால் ஏற்படும் கோபத்தால் காச்ச மூச்சென்று சண்டைக்குப் போய்விடுவான்,



இந்த 'இது' ஒருதலைபட்சமானதல்ல.... பெண்களுக்கும் ஏனோ இவனைக் கண்டால் பிடிப்பதில்லை.

பிரபல கிறிஸ்தவக் கல்லூரியில் இடம் கிடைத்தும்கூட மறுத்து வேறு கல்லூரியில் சேர்ந்தானென்றால் அதற்குக் காரணம் அந்த 'இது' — அங்கே கூட்டுக் கல்வி முறை. பெண்களும் இருப்பார்களே! அது தவிர இப்போதிருக்கும் ஆபீஸில் எல்லோரும் ஒன்பதரை மணிக்குச் சாவகாசமாக வருவார்களென்றால், இவன் ஒன்பது அடிப்பதற்குள் விழுந்தடித்து ஓடுவானென்றால் அதற்கும் காரணம் அந்த 'இது'தான். அந்த ஆபீஸின் டெலிபோன் ஆபரேடர் மிஸ் வயலெட் ஒன்பதேகாலுக்கெல்லாம் 'டக்'கென்று இடத்தில் அமருவாள். அவள் மேஜையில் தான் அட்டெண்டென்ஸ் இருக்கும்.

அவ்வளவு எதற்கு? இரண்டு நாட்கள் லீவில் வந்தவன் ஒரு வாரம் தங்கி விட்டானென்றால் அதற்கும் காரணம் அந்த 'இது'தான். பெண் பார்க்கப் போகத்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும் சித்தப்பாவின் காலில் விழுந்து எழுந்து சமாளிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. பண்ணையார் வீட்டுப் பெண்ணாம்! பணக்கார வீட்டுப் பெண்ணாம்! பெரிய அல்லி ராணி! பட்டணத்தில் படித்துக்கொண்டு விடுமுறையில் ஊருக்கு 'விசிட்' வருகிறாளாம். இவனைப் பார்க்கச் சென்னையிலிருந்து ஓடி வரவேண்டும்! 'அவளைப் பார்க்காவிட்டாலும் அவள் புகைப்படத்தையாவது பாருடா' என்றார் சித்தப்பா. தனக்குத் தெரியாமல் போட்டோ பரிவர்த்தனை வேறு? கடைக் கண்ணால்கூட அல்லி ராணியின் படத்தை நோக்கவில்லை அவன்.

''இனிமேல் நீயாக வந்து என் காலில் விழுந்தாலொழிய, உனக்குக் கல்யாணப் பேச்சே எடுக்கமாட்டேன்'' என்று கூறி ஒரு வழியாக விட்டார் வளர்த்த சித்தப்பா. நிம்மதியாகத் திரும்பலாம் என்றால் இப்படியொரு சோதனையா! இத்தனை பெண்களுக்கு நடுவிலே ஒரு பகலும், இரவும் கழிக்க வேண்டுமா? பேசாமல் பயணத்தையே ஒத்திப் போடலாமா என்று கூட யோசித்தான். அது முடியாத காரியம். ஏற்கனவே ஒரு வாரம் லீவு எடுத்தாகி விட்டது. நாளைக்கு அவன் ஆபீஸில் இல்லை என்றால் என்றுமே அவனுக்கு ஆபீஸ் இல்லை என்று அர்த்தம்.

வருவது வரட்டும் என்று பெட்டியில் ஏறிக் கொண்டான் முரளி.

சிரிப்பும், கூத்துமாக இருந்தவர்களிடம் இவன் நுழைந்ததும் சட்டென்று அமைதியாயிற்று. அனைவரது பார்வையும் தன்னையே துளைப்பது போல் உணர்ந்து நெளிந்தான் முரளி. ''ஸீட் நம்பர் நாற்பத்தேழு எங்கே?'' என்று கேட்டான்.

''அது இருக்க வேண்டிய இடத்திலேயே இருக்கும்.'' கண்ணாடி போட்ட ஒரு பெண் முறைத்தாள். ''நீங்களா அந்த ஆள்? எங்களோடா வரப் போகிறீர்கள்?''

தோள் உயர, கையை விரித்துக் காட்டிய முரளி, நாற்பத்தேழாம் நம்பர் 'ஸீட்டை' அடைத்து அங்கிருந்த ஹோல்டாலை அப்புறப்படுத்த முயன்றான்.

''மிஸ்டர்!'' என்று சீறிக் கொண்டு வந்தாள் ஒரு ரெட்டைப் பின்னல்காரி. ''தொடாதீர்கள் அதை. நீங்கள் இந்த வண்டியில் வர முடியாது!''

''ஏன்?''

''பெண்கள் மட்டுமே தனியாகப் போகிறோம்....''

''மன்னிக்க வேண்டும். இப்போது நான் தான் தனியாக வருகிறேன். நீங்கள்தான் கும்பலாயிருக்கிறீர்கள். பயப்பட வேண்டியவன் நான்தான்.''

''ஷட் அப்!'' என்றாள் இன்னொரு போனி டெய்ல் குமாரி. ''இன்னும் ஒரு வார்த்தை பேசினாலும் போலீஸைக் கூப்பிடுவோம்.''.

நாற்பத்தேழாம் நம்பர் இடத்தில் அமர்ந்து கொண்டு விட்டான் முரளி.

கொஞ்ச நேரம் பல்லைக் கடித்தவாறு முறைத்தவர்கள் அந்தப் பக்கமாகப் போன ஒரு டி. ஸி.யை நிறுத்திப் புகார் சொன்னார்கள். அவர் வந்து விசாரிக்குமுன் டிக்கெட்டையும் ரிசர்வேஷன் சீட்டையும் சட்டென்று எடுத்துக் காட்டினான் அவன்.

அந்த டி. ஸி., ''டிக்கெட்டோடிருக்கும் அவரை நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது'' என்றவாறு போய்ச் சேர்ந்தார்.

''நாசமாய்ப் போக, அந்த ரிசர்வேஷன் குமாஸ்தா'' என்று கோரஸில் சபித்தார்கள்



அத்தனை பெண்களும் ''யாராவது பெண் பிள்ளையாகப் பார்த்து மீதமிருக்கும் டிக்கெட்டைக் கொடு என்றால் இப்படிக் கழுத்தை அறுத்து விட்டாரே!''

'நீங்கள் ஒரு ஆணா? பெண்ணா?' என்று நேற்று அந்த 'கிளார்வேலூம்' குமாஸ்தா கேட்டதன் அர்த்தம் இப்போதுதான் சட்டென்று புரிந்தது முரளிக்கு.

''நாசமாய்ப் போன குமாஸ்தா !'' என்று அவனும் தனக்குள் திட்டிக் கொண்டான்.

வைத்த கண் வாங்காது அத்தனை பேரும் அவனையே முறைத்துக் கொண்டிருந்தார்கள், ஒரே ஒருத்தியைத் தவிர. அந்தப் பெண்ணுக்குப் பளிச்சென்ற முகம். அந்தப் பெரிய கண்களும், குவிந்த உதடுகளும், நீண்ட மூக்கும் மதுரைக் கோவிலில் கண்ட மீனாட்சிச் சிலையின் முகத்தை நினைப்பூட்டியது. அவள் அவனை ஏறெடுத்துக்கூடப் பார்க்க வில்லை. பெரிய ராங்கிக்காரிபோல் இருக்கிறது!

தொண்டையைக் கனைத்துக் கொண்டு தைரியத்தைத் திரட்டி, ''எது வரையில் போகிறீர்கள்?'' என்றான் மெல்லிய குரலில்.

''மைண்ட் யுவர் ஓன் பிஸினெஸ்'' என்ற சீறலோடு அப்பால் திரும்பி விட்டார்கள் பாவிப் பெண்கள். வண்டி நிறைய பெண்கள்! ஆண் பிள்ளை ஒருத்தனாவது..... ஆம்! துணைக்கு ஒரு டி. வி.கூட வருவாரே!

ஆவலுடன் தலையை நீட்டி எக்கிப் பார்த்தான். தொணதொணப்புக்குப் பேர் போனவர் என்று எழுதி ஒட்டியிருந்தது அந்த டி. வி. கிழவரின் முகத்தில். கையில் இருக்கும் கீதைப் புத்தகத்தில் சுவாரசியத்துடன் மூழ்கிக் கிடப்பதைக் கண்டதும் சட்டென்று தலையை இழுத்துக் கொண்டு விட்டான். வம்பு! அவர் வேறு அதுதான் சாக்கென்று 'மாமேகம் சரணம் விரஜ' என்று உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டால்? அந்த மீனாட்சிச் சிலையைப் பார்த்தான். புதிய வாரப் பத்திரிகை ஒன்றை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். ஆவலுடன் தலையை நீட்டினான்.

அதற்குள் அவள் பக்கத்திலிருந்த 'போனி டெய்ல்'காரி பொறுமையுடன் பாய்ந்து — அவள் கையிலிருந்த பத்திரிகையை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள். ''நீ அப்புறம் படியடி அனு!'' என்றவள் கட்டெரிக்கும் பார்வையொன்றை முரளி மீது வீசி விட்டு அப்பால் திரும்பிக் கொண்டாள்.

வேறு வழியின்றிப் பிரயாணப் பையைக் குடைந்தான். பழைய பத்திரிகை யொன்று தான் கிடைத்தது. பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். எல்லாம் படித்த பழைய செய்திகள்! மடித்து வைத்தான்.

''ஏய் பவானி! அதைக் கொடு இப்படி!'' என்று சீறியது அந்த மீனாட்சிச் சிலை. அடுத்த விநாடி அந்த வாரப் பத்திரிகை தன் மடியில் வந்து விழுந்ததும் துள்ளி நிமிர்ந்து அவளைப் பார்த்தான் முரளி.

''படித்து விட்டுக் கொடுங்கள்'' என்று நெரித்த புருவத்துடன் கூறியவள், ஜன்னல் பக்கமாகத் திரும்பிக் கொண்டு விட்டாள்.

ஏற்கனவே அவன் மீது எரிச்சலாக இருந்த மற்றப் பெண்களுக்கு அப்பெண்ணின்செய்கை மேலும் பொறுமையைக் கிளப்பி விட்டது. வேண்டுமென்றே அவனை வம்புக்கு இழுத்தார்கள். ''ஓஹோ....'' என்று வாய்விட்டுச் சிரிப்பு..... ஆண்பிள்ளை யொருவன் இருக்கும் நினைவேயில்லாத முறையில் கேலிப் பேச்சு.... ரகசியச் சிரிப்புக்கள்.... மெல்லிய கூவல்கள்!

புத்தகத்தை விட்டுக் கண்ணையே அகற்ற வில்லை முரளி.

மணி எட்டு. ஜன்னல் வழியே எக்கிப் பார்த்தான் முரளி. திண்டுக்கல் ஸ்டேஷன். சரியான சாப்பாட்டு நேரம். பசி வயிற்றைக் கிள்ளியது. மத்தியானம் சாப்பிட்டதுதான். உணவுப் பொட்டலம் வாங்கலாமா என்று எண்ணிச் சுற்றும்முற்றும் பார்த்தான். சிலர் தூங்கி வழிந்தார்கள். சிலர் படித்துக்கொண்டிருந்தார்கள். சாப்பிடும் நினைவேயில்லாமல் இருந்தார்கள்.

நாம் மட்டுமே வாங்கிச் சாப்பிடுவது நாகரிகமாயிருக்காதே! தர்மசங்கடமாயிருந்தது. ஆயினும் கனைத்து விட்டுக் கொண்டு, ''ஏய்! இந்தாப்பா!'' என்று அழைத்தான்.

''ஏண்டி கலா! டியேய்!'' ஒருத்தியை உலுப்பினாள் அந்தப் போனி டெய்ல்காரி. ''நேரமாச்சே! சாப்பிடலாமாடி!''

ஒரு விநாடி திரும்பிப் பார்த்திருந்தால் அவள் கண் சிமிட்டி மற்றவளுக்கு ஜாடை செய்வதைக் கவனித்திருப்பான் முரளி.

எழுப்பப்பட்ட அந்தப் பெண் கீச்சுக் குரலில் அதட்டினாள். ''அதற்குள் என்னடி அவசரம்? பெரிய சாப்பாட்டு ராமி! ஒன்பதே காலுக்கெல்லாம் திருச்சிக்குப் போய் விடும். அங்கேயே சாப்பிடலாம், பொறு'' என்றாள்.

சுருக்கென்று நெஞ்சையுறுத்த வாங்கிய பொட்டலத்தைத் திரும்ப அவனிடமே தந்து விட்டு, ''வேண்டாம் போ'' என்று, அவனிடம் திட்டு வாங்கிக் கட்டிக்கொண்டான். ஆனால்......

ரயில் நகர்ந்ததும் நகராததுமாக, அத்தனை பேரும், ''ஹோய்'' என்ற கூவலுடன் எழுந்து அமர்ந்து சிலர் பொட்டலங்களைப் பிரித்தார்கள். சிலர் டிபன்பாக்ஸ்களைக் கழற்ற முடியாமல் திணறினர். இன்னும் சிலர் டிபன் காரியரை எடுத்து வைத்துக்கொண்டு வாழை யிலையோடு சாப்பிடத் தயாரானார்கள்.

திணறிப் போய் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான் முரளி. தூரத்தில் திண்டுக்கல் ஸ்டேஷன் விளக்குகள் அவனுக்கு 'வெவ் வெவ்வே' காட்டிச் சிரித்துக்கொண்டிருந்தன. சோகத்துடன் திரும்பினான்.

மீனாட்சிச் சிலை? அவள் நினைவு வந்ததும் ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் கவனித்தான்.

வாயருகே கொண்டு போன பூரித் துண்டை மீண்டும் டப்பாவிலேயே போட்டு விட்டு மூடிக் கொண்டிருந்தவள் தன் தோழியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். ''இன்னும் கொள்ளாமல் ஏங்குகிறதே. எப்படியடி சாப்பிடுவது? வயிற்றுக்கு ஆகாது!''

நாசமாய்ப் போன வயிற்றுவலி அவனுக்கு இப்போதுதானா வர வேண்டும்? துடித்துப் போய் விட்டான் முரளி.

கூட வந்த டி. வி. கிழவர் கையைப் பிசைந்தார். ''அடுத்த ஸ்டேஷன் வரும்,



உலகப்
பிரசித்திபெற்ற
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள்... வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.



பெப்ஸ்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட (இந்தியா) பிரைவேட் லிட்.

சென்னை ராஜ்யத்திற்கு பூரண விநியோகஸ்தர்கள்:
மெனார்ஸ் மோதி & கம்பெனி, சென்னை-1

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்
Dhideerex
(FOR INSTANT PREPARATION)

(Registered)

திடீரெக்ஸ்

திடீர் இட்லி, சாம்பார்

(2 தனி பவுடர்கள்)

3 நிமிஷங்களில் தயார்!

மேற்படி பவுடர்களைத் தண்ணீரில் கலந்த 3 நிமிஷங்களில் உபயோகத் திற்குத் தயார். ஊற வைக்கவோ, அரைக்கவோ தேவையில்லை.

ஒரு 32 அவுன்ஸ் பாட்டில் பவுடரில் ஒரு பக்கெட் நிறைய ருசிமிக்க தென்னிந்திய தக்காளி சாம்பார் இருக்கிறது. எமது சாம்பார் பவுடர் 2 ஆண்டுகளுக்கு பாக்டரி புதுமையுடன் இருக்கும். திறந்த பின் 60 நாட்கள் வரை உபயோகிக்கலாம்

32 அவுன்ஸ், 16 அவுன்ஸ் ஆகிய இரு பாக்கிங்குகளில் கிடைக்கும்

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.
(போன்: 23665)
46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி
90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க, பெரிய புத்தகம். விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஜகவரியம் (குடிசைத் தொழில்)
சோப், இங்கி, பத்தி, ஸ்நோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது. விலை ரூ. 4-00 வி. பி. 0-85.

தமிழ் ஹிந்தி சுபோதினி
தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும்.
விலை. ரூ. 2-50 வி. பி. 0-85.

குடும்ப இரகசிய வைத்தியம்
பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக்கியம், பலம்பெற வழிகாட்டும்.
விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)
கால்நடைகளின் நோய்களைப் போக்கும்.
விலை ரூ. 2. வி. பி. ரூ. 0-85.

வாணி புக் டிபோ (K)
3, மலையப் பெருமாள் தெரு, ரூம் நெ. 5
சென்னை-1



ஆக்ஸிஜனுல் சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பு!

நீங்கள் போலிப் பற்களை அணிந்திருந்தால் 'ஸ்டெரடென்ட்' உபயோகித்து ஆக்ஸிஜனுல் சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பை பெறுங்கள். அது. போலிப் பற்களை நன்ருகத் துலக்குகின்றது. 'ஸ்டெரடென்ட்' தண்ணீரில் கரைந்ததும் ஆக்ஸிஜன் கலந்த திராவகமாகி, சீக்கிரத்திலே போலிப் பற்களின் மிகச் சிறிய இடைவெளிகளுக்குள் புகுந்து உணவுப் பருக்கைகளை அப்புறப்படுத்துகிறது. பற்களில் படிந்துள்ள கறைகளையும் அழுக்குகளையும் கழுவி விடுவதுடன், தொத்து நோய் வராமலும் துர்நாற்றம் அடிக்காமலும் இருக்கச் செய்கின்றது. இதன் விளைவு, 'ஆக்ஸிஜனுல்' சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பு-ஒளி மிகுந்த போலிப் பற்கள்!

ஸ்டெரடென்ட்

ஆக்ஸிஜன் முறை போலிப்பல் துலக்கி

கடிதம் எழுதினுல் இலவச சாம்பிள் அனுப்பப்படும்

விலாசம்: அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்

ஜி.பி.ஓ. பாக்ஸ் நம். 921, கல்கத்தா-1



பழைய வல்கனைட் போலிப் பற்களுக்கும் புதியதான ப்ளாஸ்டிக் வகைகளுக்கும் 'ஸ்டெரடென்ட்' சமமாகவே பயன்படுகிறது.



IWTST 26

அதுவரை பல்லைக் கடித்துப் பொறுத்திரு. பொழுது போக்குக்காக நான் வேண்டுமானால் இதை படித்து விளக்கம் சொல்லவா?'' என்று பயமுறுத்தினர்.

மற்றப் பெண்களாவது கொஞ்சம் அனுதாபத்துடன் பார்த்துக் கையைப் பிசைந்தார்கள். ஆனால் அந்த மீனாட்சி மட்டும் சீறிக்கொண்டு வந்தாள். ''இந்த மாதிரி உடம்போடு பிரயாணம் வந்து ஏன் மற்றவர்கள் உயிரை வாங்க வேண்டும்? ஏய், மிஸ்டர்! உங்களைத்தான். ஏதாவது மருந்து இருந்து வைத்திருக்கிறீர்களா?''

''ஆமாம்...'' மெல்ல முனகினான் முரளி. ''அந்த ஏர் பேகின் இடது ஓரத்தில் நீல சீசாவில் மாத்திரை.......''



''யாருடி அது! நம்ம மீனாவா? நீச்சல் கூடத் தெரியுமா அவளுக்கு?''

''சரிதான்! நம்ம மீனாக்குட்டிக்கு நீச்சல் கத்துக் கொடுக்கணுமா என்ன?''

அவளே போய் இரண்டு மாத்திரைகளும், ஒரு கிளாஸில் தண்ணீரும் கொண்டு வந்து டி. வி. கிழவரிடம் நீட்டினாள். ''ஸார்! நீங்களே புகட்டிவிடுங்கள்.''

அவளே தருவாளென எண்ணியிருந்த அவனுக்கு ஏமாற்றம் வந்து, அந்த மருந்தைப் போலவே கசந்தது.

நள்ளிரவு விழிப்பு ஏற்பட்டது. உடம்பெல்லாம் கசகசவென்று வியர்வை! யாரோ விசிறியை நிறுத்தியிருக்கிறார்கள்.

''பாவிப் பெண்கள். கடைசி ரூமில் இருக்கும் வரிசையில் மேல் 'பர்த்'துக்குத் தள்ளிவிட்டதோடல்லாமல் மின்சார விசிறியை வேறு நிறுத்தி சே....சே....சித்திரவதை...''

மல்லிகைப்பூ வாசத்தை நாசி உணரவே சட்டென்று எக்கிப் பார்த்தான்.... 'கீழ்பெர்த்'தில் மீனாட்சியில்லை! அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இவள் எப்படி இங்கே வந்தாள்?

சிறு சலனம் கூட இல்லாத நிசப்தம். அந்தண்டைக் கோடியில் டி. வி. கிழவர் விடும் குறட்டை தனியாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

மெல்ல எழுந்து கம்பி வழியாக இறங்கி வந்தவனுக்கு, பகீரென்றது. அந்தக் கரிய பெரிய விழிகளினால் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். வெலவெலத்துப் போய் பாத்ரூம் பக்கம் திரும்பியவனுக்குக் கையில் மின்சாரம் பாய்ந்தது. 'கரண்ட்'டைத் தொட்டு விட்டானா..? இல்லை, அவள் தான் அவனைத் தொட்டுக்கொண்டிருந்தாள்.

''ஒரு நிமிஷம் உட்காருங்களேன்.''

''இருக்கட்டும், பரவாயில்லை. நிற்கிறேன்'' என்று பண்பாட்டுடன் தள்ளிநின்றான் முரளி.

அவள் சிரிப்புடன் பூரி அடங்கிய டப்பாவை எடுத்து நீட்டினாள். ''நீங்கள் பட்டினியாகவே இருக்கிறீர்களே!''

''இருக்கட்டும் பரவாயில்லே'' என்று வாங்கி வைத்துக் கொண்டான்.

''வயிற்று வலி எப்படி இருக்கிறது? தேவலேயா?''

''இருக்கட்டும்..... பரவாயில்லே. தேவலே....'' என்று உளறிக் கொட்டினான்.

''காலையிலிருந்தே உங்களைத் தனியே பார்த்துப் பேச ஆசைப்பட்டேன். என் பிரண்ட்ஸ்கள் கேலி பண்ணுவார்களே என்று........''

''ஏன் தனியாப் பேசணும்! சண்டை போடவா?''

''நான் காலையிலிருந்து சண்டை போட்டுக் கொண்டிருப்பதனால்தானே இப்படிக் கேட்கிறீர்கள்? அப்படிச் சண்டை பிடித்ததினால்தானே நான் இப்போது இந்த இடத்தில் வந்து படுக்கவும் உங்களோடு பேசவும் முடிகிறது.

''புரியவில்லையா?'' விழிக்கும் அவனைப் பார்த்துச் சிரித்தாள். ''நான் ரொம்பவும் மிரட்டி வைக்கிறதினால் என்னிடம் எந்த ஒரு வாலாட்டமும் வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று என் சிநேகிதிகள்தான் என்னை இந்த இடத்துக்கு அனுப்பி வைப்பார்கள் என்று தெரிந்துதான் ஆரம்பத்திலிருந்து காச் மூச்சென்று சண்டை போட்டேன்.''

''ஆனால்......'' இன்னும் புரியவில்லை அவனுக்கு. ''ஏன் என்னைப் பார்த்துத் தவிக்கிறீர்கள்? ஒரு வேளை கதையில் வருவது போல் என்னைக் கண்டதும் கா......'' என்று முடிக்கு முன்......

''காதலுமில்லே கத்திரிக்காயுமில்லே....'' அவள் தனது இரட்டைப் பின்னல்களில் ஒன்றைப் பின்னால் தள்ளி விட்டு எழுந்து சொன்னாள். ''நேற்று நீங்கள் வருவீர்கள் என்று வீட்டில் ரொம்பவும் எதிர்பார்த்தோம்....... நீங்கள் வரவேயில்லே......''

''என்னை...எதிர்...ஏன்...பார்த்தீர்கள்?''

''சரியாப் போயிற்று! என் போட்டோவைக்கூடப் பார்க்கவில்லையா நீங்கள். நான் தான் அனுராதா.....!'' என்றதும்,—

''பண்ணையார் பெண்?'' என்று பின் வாங்கினான்.

''ஆமாம்.......''

''சித்தப்பா சொன்ன பெண் நீயா? என்னோடு உண்மையிலேயே சண்டை போடத் தோன்றாத முதல் பெண் நீதான்! உன்னையா வேண்டாமென்றேன்?''

''என்னைப் பார்க்கக்கூட வரமாட்டேனென்றீர்களாமே! ஏன் அப்படி?''

''அது வந்து...... எனக்குப் பெண்கள் என்றாலே இது...... அதாவது இது.......'' சற்றும் எதிர்பாராமல் வண்டி லைன் மாறி, கடகட வென்று ஆட..... பொதாலென்று இடறி விழுந்தார்கள்.

மெல்லச் சமாளித்துக் கொண்டு எழுந்து மேலேறிச் சென்றான் முரளி.

பரவாயில்லையே! அவள் இது... அதாவது பயம் என்னவாயிற்று? எக்கிப் பார்த்து, ''அனு! நாளைக்கே போய் என் சித்தப்பாவின் காலில் விழுகிறேன்!'' என்கிறானே!

சூரியாஸ்தமனத்துக்கு இன்னும் நேரமிருக்கவே பிச்சுமணியும் லலிதாவும் பொழுது போவதற்காக அங்குள்ள காந்தி நினைவு மண்டபம், பாதாளக் கிணறு, விவேகாநந்தர் சிலை முதலானவற்றையெல்லாம் சுற்றிப் பார்க்கலானார்கள். அவற்றையெல்லாம் பிச்சுமணி ஏற்கனவே பார்த்திருக்கிறானென்றாலும் அவற்றைப் பற்றி இப்போது லலிதா சிரித்துக்கொண்டே விளக்கங்கள் கூறி வந்தாளாகையால் அவ்விளக்கங்களெல்லாம் பிச்சுமணியின் விஷயஞானத்தைப் பெருக்கியதோடு அவனுக்கு ஒருவிதப் புத்துணர்வும் ஊட்டின.

கடற்கரையில் உள்ள ஸ்நானக் கட்டத்தின் அருகில் இருவரும் வந்ததும் ''இங்கேயாவது நான் குளிக்கலாமா?'' என்று பிச்சுமணி பரிதாபமாகக் கேட்டான்.

லலிதா களுக்கென்று சிரித்தாள். பிறகு அவள் தன் கடைக் கண்களால் புன்முறுவலுடன் பிச்சுமணியைப் பார்த்தபடி, ''ஓ, இங்கே பேஷாகக் குளிக்கலாம்!'' என்று சொல்லிவிட்டுத் தன் கையோடு கொண்டு வந்திருந்த சிறு பையிலிருந்த சோப்பு, தேங்காய்ப் பூ டவல் முதலானவற்றை எடுத்துப் பிச்சுமணியிடம் நீட்டினாள்.

''நீயும் இங்கே குளிக்க வந்தாயா?'' என்று பிச்சுமணி கேட்டான்.

லலிதாவுக்கு வெட்கமாகப் போய் விட்டது! தன்னைச் சமாளித்துக்கொண்டு புன்னகையோடு, ''இல்லை, உங்களுக்காகத்தான் இதையெல்லாம் கொண்டு வந்தேன்!'' என்றாள்.

அவளைப் பிச்சுமணி வியப்போடு பார்த்துவிட்டு, ஸ்நானக் கட்டத்தில் இறங்கி அங்கு ஒதுங்கியிருக்கும் அமைதியான கடல் நீரில் ஆனந்தமாக நீந்தி விளையாடலானான்.

லலிதா கடைசிப் படியில் நின்றபடி அவனையே கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் குளிக்கும் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போலவும், அவனோடு அவளும் கடல் நீரில் நீந்தி விளையாட வேண்டும் போலவும், அவனுடைய அழகான முகத்தின் மீதும் இளமையோடு மினுமினுக்கும் உடம்பின் மீதும் கடல் நீரை அடித்து வீசிக் கைகொட்டிச் சிரிக்க வேண்டும் போலவும் லலிதாவுக்குத் தோன்றியது. ஆனால் அவள் ஒரு பெண்! அப்படியெல்லாம் செய்ய முடியுமா? தன் கற்பனையின் ஆவல்களையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு பிச்சுமணியைத் தன் கண்களால் பார்த்துக் கொண்டிருப்பது ஒன்றிலேயே அத்தனையையும் அனுபவித்துவிட அவள் தவித்து நின்றாள்.


ஆனால் அதே சமயம் பிச்சுமணியும் அலாதியான கற்பனைகள் செய்து கொண்டு குதூகலப்படுகிறான் என்பதும் அவனோடு உமாவும் கடல் நீரில் நீந்தி விளையாடுவது போன்ற கற்பனைகள் தான் அவை என்பதும் அந்த அசட்டுப் பெண்ணுக்கு எங்கே தெரியப்போகிறது?

பிச்சுமணி குளித்துவிட்டு வந்ததும் கடற்கரையிலேயே ஒருபுறமுள்ள கடைகளின் பக்கம் இருவரும் நடந்தார்கள். அங்கு ஒரு கடையில் வலம்புரிச் சங்கு, கடற் பஞ்சுகள், சிப்பிகள், பெண்கள் அணியும் மணி மாலைகள், தொங்கட்டான்கள், மோதிரங்கள் முதலான பல பொருள்கள் கண்ணைக் கவர்ந்தன. அவற்றில் பலவற்றை உமாவுக்காக வாங்கிச் செல்ல வேண்டும் என்று பிச்சுமணி ஆசையோடு துடிதுடித்தான். நல்லவைகளாகப் பொறுக்கித் தரும்படி லலிதாவிடமே சொல்லி மணிமாலை முதலானவற்றை வாங்கி ஒரு சிறு மூட்டையாகவும் கட்டிக் கொண்டான். அவற்றையெல்லாம் தனக்குத்தான் என்றே ஒரு நாள் பரிசளிப்பதற்காக அவன் வாங்குகிறான் என்று நினைத்து லலிதா அளவிலாத குதூகலமடைந்தாள்.

பிறகு கடலில் சூரியாஸ்தமனம் ஆவதைப் பார்ப்பதற்காக இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். கடற்கரையில் சற்றுத் தொலைவில் உள்ள ஒரு பெரிய மணற் குன்றின் மீது ஏறி நின்று பார்த்தால் சூரியாஸ்தமனம் வெகு அழகாகத் தெரியும்.

அந்த மணல் மேட்டில் இருவரும் ஏறி நின்று சூரியாஸ்தமனம் ஆனபிறகுகூட அந்த அற்புதக் காட்சியின் நினைவைவிட்டு விலக விரும்பாதவர்கள் போல் அங்கேயே இருந்தனர்.

கன்னியிளம் மான் போல் இரவு குதித்



தோடி வந்து தன் இருள் பாவாடையை விரித்து, தன் கருமேகக் கூந்தலிலிருந்து மல்லிகை மொட்டுக்களைக் குலுக்கிக் குலுக்கிக் கொட்டி விளையாடுவது போல் நட்சத்திரங்களைத் தூவி விளையாடியது. இர்வென்னும் அந்த இன்ப அரசியின் ஆனந்த நர்த்தனத்துக்குச் சுருதி கூட்டித் தாளம் கொட்டுவது போல் கடலலைகள் கைகொட்டிச் சிரித்தன.

எங்கும் மௌனம்—ஆசைக் கனவுகளையும், அபரிமிதமான கற்பனைகளையும் கருக்கொள்ளச் செய்யும்படியான மௌனம் அங்கு நிலவியது. முக்கடலின் முனையிலேயே யுக யுகாந்திரமாக நின்று நித்தம் தவம் புரியும் கன்னியாகுமரி அம்மனின் மோனத் தாபமும், காதலின் கனலும் அங்குள்ள இயற்கையின் சூழ்நிலை நெடுகிலும் பரவிப் படர்ந்து, பொங்கிப் பொங்கி எழுந்து கொண்டிருந்தது.

பிச்சுமணியும் லலிதாவும் அருகருகே நின்றபடி நிலா வெளிச்சத்தில் குளித்தபடி, பொங்கிப் புரளும் கடலலைகளையே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

அவர்களுக்கிடையே ஓர் அங்குல இடைவெளிதான் இருந்ததென்றாலும் பிச்சுமணியின் சட்டை விளிம்புகூடத் தன்மீது படவில்லை என்பதை நினைக்கும்போது லலிதாவின் இதயத்தில் இன்னும் அதிகமான இன்பக் கிளுகிளுப்பும், பெருமிதமுமே உண்டாயிற்று.



பிச்சுமணியின் கண்களோ கடலலைகளைத் தாண்டி அடிவானத்துக்கு அப்பாலும் ஓர் அழகுத் தேவதையை ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன. அவனது உள்ளம் தேடியலைந்த அந்த அழகுத் தேவதை உமாதான் என்பது அவனுடைய உணர்வுகளுக்கு மட்டும் தான் தெரியும்!

அத்தியாயம் நாற்பத்தைந்து

காதல் பிரச்னை

டாக்டர் ஜகந்நாதனும் வசந்தியும் சேர்ந்து ஒரு நாவல் எழுதுவதற்காகக் காகிதங்கள், மைக்கூடு, குப்பைக் கூடை முதலான உபகரணங்களோடு மகாபலிபுரத்துக்குப் புறப்பட்டார்கள்.

''குப்பைக் கூடை எதற்கு ஸார்?'' என்று கேட்டாள் வசந்தி வியப்போடு.

''குப்பைக் கூடைக்குள் கிழித்துப் போடும் காகிதத் துணுக்குகளில்தான் அதிகப்படியான விஷயங்களும், அடிப்படையான உணர்ச்சிகளும் அடங்கியிருக்கும். இது அரசாங்கத்து ஆலோசனைக் கமிட்டிகளின் குப்பைக் கூடை முதல், எழுத்தாளனின் குப்பைக் கூடை வரை பொருந்தும். மேலும் உண்மையான மேதைகளைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளிலும் அவர்களுடைய உண்மையான எழுத்துக்களைக் குப்பைக் கூடைகளிலும்தான் காண முடியும். ஆகவே நாம் எழுதிக் கிழித்துப்போடும் காகிதங்களையெல்லாம் பத்திரமாகக் கொண்டு வந்தால் அவை பல நாவல்களை எழுதப் பயன்படும்'' என்று ஜகந்நாதன் சிரித்தார்.

வசந்தியும் அவரோடு சேர்ந்து குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

அன்றைய தினம் வசந்தி ஏதோ ஒரு புதிய உலகத்தில் பிரவேசிப்பவள் போல், வசந்த காலத்துக்குக் கட்டியம் பாடிக் கொண்டு வரும் காதல் பறவை போல் வந்திருந்தாள். டாக்டர் ஜகந்நாதனின் அறிவனைத்தையும் பேதலிக்கும்படி அவர் மனத்தை எப்படியும் அன்று கவர்ந்துவிட வேண்டும் என்பது போல் வசந்தி தன் ஆடை அலங்காரங்களில் அதிகக் கவனம் செலுத்தியிருந்தாள். மெல்லிய நைலான் தாவணியும், பாவாடையும் அணிந்து இளமை குலுங்க, இதயமெல்லாம் பூரித்துக் கருவிழிகள் இரண்டும் மலர்ந்து சிரிக்க அவர் எதிரே ஜிலுஜிலுவென்று நின்றாள். அவளுடைய கூந்தல் கற்றை ஒன்று குறும்புத்தனமாக அவளுடைய கன்னக் கதுப்பைத் தொட்டு மகிழத் துடிப்பது போல் தன் காதோரங்களில் தவழ்ந்து விளையாட விட்டிருந்தாள். மெழுகின் வாளிப்பு நிறைந்த அவளுடைய கழுத்து வரை படர்ந்திருக்கும் கமகமவென்ற பவுடரின் மணம் ஆண்களின் முகரும் சக்திக்குச் சவால் விடுவது போல் இருந்தது!

அவள் எதிர்பார்த்தது போலவே டாக்டர் ஜகந்நாதன் அவளுக்கு வெகு அருகில் நின்று அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தார். அவருடைய ரசனையான விழிகள் அங்குமிங்கும் அலைபாய்ந்து அவருடைய மனம் தடம் புரள்வதுபோலவே வசந்திக்குத் தோன்றியது. உடனே வெற்றிக் களிப்பினால் ஒரு பெருமிதத் துள்ளல் அவளுடைய ஒவ்வோர் உணர்விலும், ஒவ்வோர் அசைவிலும் சதிராடியது.

டாக்டர் ஜகந்நாதன் தமக்குள் சிரித்துக்கொண்டு, ''வசந்தி! நாம் போகலாமா?'' என்று கேட்டார்.

''ஓ! நான் ரெடி, சார்!''

''புதுப் பேனா வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று குறும்புச் சிரிப்புடன் கேட்ட ஜகந்நாதன் அவள் தன் ரவிக்கையில் செருகி வைத்திருக்கும் தங்க நிறப் பேனாவின் மேல் மூடியை உற்றுப் பார்த்தார்.

வசந்தியின் கண் இமைகள் வண்ணத்துப் பூச்சியின் இறக்கைகளைப் போல் படபடவென்று அடித்துக் கொண்டன.

அவளைக் காரின் முன் ஸீட்டிலேயே உட்கார வைத்துக் கொண்டு ஜகந்நாதனே காரை ஓட்டிச் சென்றார். இருவரும் ஜோடிகள் போல் அருகருகே உட்கார்ந்திருப்பது வசந்தியை இதுவரை அவள் அனுபவித்தேயிராத ஓர் இன்பப் பரவசத்தில் ஆழ்த்தியது. தன்னிடமிருந்து எழும்பும் நறுமணம், கைவளையல்கள் குலுங்கும் ஒலிகள், ஓர விழிப் பார்வைகள், உதட்டோரங்களில் ஒளிந்து விளையாடும் புன்சிரிப்பு, தன் இளமையின் தாபங்கள் இவையனைத்தும் ஒருங்கு சேர்ந்து ஜகந்நாதனை இன்னும் தன் அருகில் நெருங்கி அமரும்படி தூண்டி இழுக்கும் என்று வசந்தி எண்ணமிட்டாள். ஆனால்

அந்த எண்ணத்தினூடே ஒருவிதப் பய மும் நிழலாடியது.

சென்னையைத் தாண்டிக் கார் சிறிது தூரம் பறந்ததும் வசந்தி ஏதோ யோசித்துத் தயங்குபவள் போல், ''டாக்டர்! நாம் எதற்கு மகாபலி புரம் போகணும்?'' என்று மெல்லச் சற்றுத் தடுமாறும் குரலில் கேட்டாள்.

''நாம் மகாபலிபுரத்துக்குப் போய் அங்கே உட்கார்ந்து ஜோராகக் கதை எழுதலாம்! அந்த ஐடியாவைச் சொன்ன வளே நீதானே?''

''ஏதோ விளையாட்டாக நேற்று அப்படிச் சொன்னேன். ஆனால் உண் மையில் நாம் ஏன் மகாபலிபுரத்துக்குப் போகணும்? மாமல்ல சக்கரவர்த்தி யைப் பற்றியா சரித்திர நாவல் எழுதப் போகிறோம்?'' என்று வசந்தி சற்றுக் கிண்டலாகவே கேட்டாள்.

''சரித்திர நாவல்களுக்கும் சமூக நாவல்களுக்கும் ஆடைகளையும், பின் னணிச் செட்டுக்களையும், காலாந்திரப் புள்ளி விவரங்களையும் தவிர வித்தி யாசங்கள் அதிகமாக எதுவும் இல்லை. கதாபாத்திரங்களெல்லாம் ஒன்றுதான். ஏனெனில், இரண்டு வித நாவல்களி லும் காதல் ஜோடிகள் வந்து ஒரேவித மான உணர்ச்சிகளைத்தான் பரிமாறிக் கொள்வார்கள்.''

''உங்கள் நர்ஸிங்ஹோமில் இருந்தே நாம் நாவல் எழுத முடியாதா ஸார்?''

''நரகத்தில் உட்கார்ந்து கொண்டு சொர்க்கத்தைச் சிருஷ்டிக்க முடியுமா?''

''உங்கள் நர்ஸிங்ஹோம் ஒருநரகமா ஸார்?''

''ஆமாம்! பல ரக நோயாளிகள், பலவித மருந்து நெடிகள், டெலிபோன் அலறல்கள், அவசர அழைப்புகள் முத லான இடையூறுகளுக்கு இடையே இருந்து கொண்டு நாம் ஒரு தனி உலகில் சஞ்சரிக்க முடியுமா?''

''நாம் தனி உலகில் சஞ்சரிப்பதா?''

''ஆமாம். கற்பனை எனும் ஒரு தனி உலகில் நாம் இருவரும் மெய்ம் மறந்து சஞ்சரிப்போம், நாம் எழுதப் போகும் நாவலின் காதலனையும் காதலி யையும் நாம் என்றே பாவித்துக் கொண்டு! அப்போது நம் இருவர் உள் ளங்களில் ஏற்படும் உணர்ச்சிகளையும், கற்பனைகளையும் நம் நாவலில் வடிப் போம்! அது அதியற்புதமாக இருக் கும்!'' என்று ஒரு விஷமப் புன்முறுவ லுடன் சொன்ன டாக்டர் ஜகந்நாதன் தம் பிரகாசமான விழிகளால் வசந் தியை ரசனையோடு குறுகுறு வென்று பார்த்துக் கொண்டே, ''ஆஹா! மகாபலிபுரக் கடற்கரையில் காத லர்கள் சந்தித்து உணர்ச்சிப் பெருக் கோடு தத்தளித்தால் இன்னும் அதியற் புதமாய் இருக்கும்!'' என்றார்.

''காதலர்கள் எதற்காகக் கடற் கரையில் சந்திக்க வேண்டும்?''

அட்டைப்பட விளக்கம்

'' வான்மழை போற்றுதும் ''

மண்ணில் பிறந்த மானிடன் மண்ணினாலேயே வாழ்கிறான். ஆனால் மண்ணோ மழையினால் வாழுகிறது. அதனால்தான் வள்ளுவர் பெருமான் உலகை வாழ வைக் கும் மழையை அமிர்தம் என்றார்.

'' வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று ''

உலகை வாழவைப்பதும், சகல ஜீவராசிகளும் அழியாமல் பாதுகாப்பதும் மழைதான். மண்ணுக்கு வளமும், பயிருக்கு உயிரும் கொடுத்து வளம் ஊட்டும் மழை பெய்யாமல் தவறிவிட்டால், அப்பப்பா! மக்கள் படும் பாட்டைச் சொல்லி முடியாது. வெய்யிலின் கொடுமையால் பாளம் பாளமாக வெடித்து மழைத் துளிக் காக ஏங்கி நிற்கும் பூமியைப் பார்க்கும்போது மேகங்களுக்கு இரக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக மழை பொழிய ஆரம்பிக்கிறது.

பூமித் தாயின் அகம் குளிர்ந்து, பார்க்கும் இடமெல்லாம் பசுமை படர்ந்து வளம் கொழிக்கிறது.

பல மாதங்களாகப் பெய்யாதிருந்த மழை சடசடவென்று கொட்டுகிறது. பட்டுப்போன மரங்கள் மழைத் துளிகளின் குளிர்ச்சியால் சிலிர்த்துக்கொண்டு புத் துயிர் பெறுகின்றன. மழை அதிகமாகப் பிடித்துக்கொள்வதற்கு முன் மக்கள் கூரை நோக்கி ஓடுகிறார்கள்.

அந்தக் காட்சியைத்தான் ஓவியர் ரமணி இந்த இதழ் அட்டைச் சித்திர மாகத் தீட்டியிருக்கிறார். கோடை கடுமையாகத் தகிக்க ஆரம்பித்திருக்கும் இத் தருணத்தில் இக்காட்சியைக் காணக் குளிர்ச்சியாயிருக்கிறது.

"கடற்கரையின் ஜில்லென்ற காற்று, அலைகளின் ஹோ என்ற இரைச்சல், இயற்கை உணர்ச்சிகளின் ஆழ்ந்த கவர்ச்சி, அந்தி நிலவின் குளுமை, தனிமையான சூழ்நிலை, அதனால் ஏற்படும் ஆவல் வேகம், இவற்றிடையே காதல் வெகு சுறுசுறுப்பாக உண்டாகும்! ஒரு வேளை காதல் நிறைவேறாமல் 'டிராஜடி'யில் முடியவேண்டுமென்றாலும் சட்டென்று கடலுக்குள் குதித்துத் தற்கொலை செய்து கொள்ளவும் வசதியாக இருக்கும்!"

"அதற்கு நம் மெரினா பீச்சே போதாதா, ஸார்?"

"மெரினா பீச்சில் ஜோடிகளின் கும்பல் அதிகம் இருக்கும். தனிமை கிடைக்காது! காதலர்கள் தனிமையில் சஞ்சரிக்கும் போதுதான் ஒரு தனி உலகத்தைச் சேர்ந்தவர்கள் போல் நினைத்துக் கொள்ளவும், பைத்தியக்காரத்தனமாக உளறவும், ஏதோ ஒரு பித்தில் தத்தளித்துத் தடுமாறவும் முடியும்!" என்று ஜகந்நாதன் சிரித்தார்.

"காதலை வெறும் தமாஷாக நினைத்துப் பரிகாசம் செய்யும் உங்களால் உணர்ச்சிகரமான ஒரு காதல் கதை எப்படி ஸார் எழுத முடியும்?" என்று வசந்தி தன் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு கேட்டாள்.

"உணர்ச்சிகளுக்குத்தான் நீ இருக்கிறாயே!" என்றார் ஜகந்நாதன் அர்த்த புஷ்டியோடு ஆழ்ந்த குரலில்.

வசந்தி மெல்ல ஜகந்நாதனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

பிறகு அவள் மெல்லத் தலை குனிந்து தன் கைக்குட்டையால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக் கொண்டு காரில் மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள். கார் மகாபலிபுரத்தை நெருங்க நெருங்க ஏதோ ஒரு பயத்தால் மெல்ல நடுங்குவதுபோல் தோற்றமளித்தாள் வசந்தி.

அவளைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்த ஜகந்நாதன் ஒரு சிரிப்புடன், "என்ன வசந்தி! நீ என்னோடு தனியாக வருவதை நினைத்துப் பயப்படுவது போல் நடிக்க ஆரம்பித்து விட்டாயா?" என்று கேட்டார்.

"அப்படி நான் ஏன் ஸார், நடிக்க வேண்டும்?" என்று வசந்தி ஒரு திகைப்புடன் கேட்டாள்.

"ஏனென்றால், ஆணை மயக்குவதற்குப் பெண்கள் கையாளும் சாகஸங்களில் அதுவும் ஒன்று! உதாரணமாக ஓர் ஆடவனோடு தனியாக ஒரு பெண் தைரியமாகவும் சகஜமாகவும் வரும்போது அந்த ஆடவன் அவ்வளவாகச் சபலமடைவதோ, தடுமாறித் தவறுவதோ இல்லை! ஆனால் அந்த ஆடவனோடு அவள் தனியாகச் செல்வதை நினைத்துப் பயப்படுவது போலவும், தனிமையையும் தன் பலஹீனத்தையும் பயன்படுத்திக் கொண்டு தன்னைக் கெடுத்து விடுவானோ என்று குழம்புவது போலவும் அவள் காட்டிக் கொள்ளும்போதுதான் அந்த பலஹீனத்தில் ஆடவன் கவர்ச்சியுற்று அதிகமாக உணர்ச்சி கொண்டு எப்படி யெப்படியெல்லாமோ நடந்து கொள்ளுகிறான். அப்போதெல்லாம் அவள் பேசாமலிருந்து விட்டுக் கடைசியில் அவன் தன் பலஹீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு விட்டான் என்று அவன் மீதே குற்றம் சாட்டி விடாப்பிடியாய் இன்னும் பலமான பந்தத்தில் மாட்டி வைத்துவிட முயல்வாள்!" என்று ஜகந்நாதன் ஒரு தத்துவ உபதேசம் போல் சொன்னார்.

(தொடரும்)

இலக்கியமும் இதயமும்

நண்பர் ஒருவருடைய புத்தக வெளியீட்டுக் காரியாலயத்துக்குள் எதிர்பாராமல் ஒரு நாள் நுழைந்தேன். அங்கு ஒரே அமளி துமளி. பிரசுரகர்த்தர் நண்பர் முன்னால் நிற்கும் சிறுவனைப் பார்த்துக் காரசாரமாக இரைந்து கொண்டிருந்தார்.

"திருட்டுப் பையன் சார்! எத்தனை நாட்களாக என்னை மோசம் செய்து கொண்டிருந்தானோ, தெரியாது! இன்றைக்குக் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டான். நான் அவ்வப்போது அடித்து வரும் பாரங்கள் குறைகின்றனவே என்று அச்சாபீஸ்காரர்களுடன் சண்டைக்குப் போயிருக்கிறேன். இந்தப் பையன் சமயம் கிடைத்த போதெல்லாம் பாரங்களைத் திருடிப் போய்ப் பழைய பேப்பர்க் கடையில் போட்டுத் துட்டு வாங்கிச் சாப்பிட்டிருக்கிறான். பிரசுரத்துக்காக வாங்கி வைத்திருந்த இரண்டு மூன்று கையெழுத்துப் பிரதிகளும் இந்தக் கொள்ளையில் போய் விட்டன. அந்த ஆசிரியர்களுக்கு நான் என்ன சார் பதில் சொல்லப் போகிறேன்" என்று அங்கலாய்த்தார் நண்பர்.

அந்த நண்பர் என்ன பதில் சொல்லுவார் என்று என்னால் ஊகிக்க முடிந்தது. அவர் சமாளித்து விடுவார். தொலைந்து போன கைப்பிரதிகள் நாவல்களாக இருந்தால், "இப்போது மார்க்கெட்டிலே ஏகமாக நாவல்கள் வந்து விட்டன. கவிதையோ சிறுகதைத் தொகுப்போ முதலில் போடும்படியாகக் கொண்டு வாருங்கள். அப்புறம் நாவலைப் போடுகிறேன்" என்பார். தொலைந்து போன கைப்பிரதி கதைத் தொகுதியாக இருந்தால் ஏட்டைத் திருப்பி நாவல் போடுகிறேன் என்பார். கால ஓட்டத்தில் காணாமற்போன விவகாரத்தை மறக்கவே அடித்து விடுவார்!

நண்பரிடம் விடைபெற்றுத் திரும்பிய போது ஓர் அமெரிக்க ஆசிரியரைப் பற்றி நினைவு வந்தது.

அந்த ஆசிரியருக்கு உடல் நலக் குறைவு. படுக்கையில்தான் இருந்தார். ஆனாலும் எழுதித்தான் பிழைக்க வேண்டும். படுக்கையிலிருந்தே டைப்ரைட்டரை உபயோகிக்க முடியாத நிலையில் கையாலேயே அந்தச் சிறு புத்தகத்தை எழுதி முடித்தார். அந்த அலுப்பில் பெருமூச்சும் விட்டார். கையெழுத்துப் பிரதி பிரசுரகர்த்தாவிடம் உடனடியாகப் போய்ச் சேர்ந்தது.

பிரசுரகர்த்தாவுக்கு அந்த ஆசிரியரின் கற்பனை அருமை தெரியும். சுறுசுறுப்பானவர். கையெழுத்துப் பிரதியை ஒரு தடவை படித்துப் பார்க்கக் கூட அவகாசமில்லாத நிலையில் மேலே பெரிய கடுதாசியைக்கொண்டு கட்டி அச்சகத்துக்கு அனுப்பி விட்டார்.

குறிப்பிட்ட காலத்தில் அந்தப் புத்தகத்துக்கான புரூப்கள் வராதது கண்டு பிரசுரகர்த்தா அச்சகத்தில் விசாரித்தார். அச்சகத்தார் அந்தப் புத்தகப் பிரதி தங்களிடம் வரவில்லை என்று கையை விரித்து விட்டார்கள். பெரிய பெரிய காகிதங்களினூடே வைத்துக் கட்டப்பட்டு வந்த அந்தக் கையெழுத்துப் பிரதிப் பார்சலைப் பிரித்த அச்சகச் சிப்பந்தி, சுற்றப்பட்ட மேல் காகிதங்களை எடுத்துப் பத்திரமாக வைத்து விட்டுக் கசங்கி உருக்குலைந்திருந்த கையெழுத்துப் பிரதியைக் குப்பையுடன் போட்டு விட்டான்.

பிரசுரகர்த்தா இந்த விஷயம் கேட்டுப் பதறிப் போனார். உடனடியாக அந்த அச்சகத்தில் சேர்ந்திருக்கும் குப்பையைப் பரிசோதிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் அந்தக் கையெழுத்துப் பிரதி அங்கு வந்து சேர்ந்த சில நாட்களுக்குப் பிறகு பாஸ்டன் நகரிலிருந்து ஒரு பழைய குப்பைப் பேப்பர் வியாபாரி அந்த அச்சகக் குப்பைக் காகிதங்களை வாங்கிக் கொண்டு போய் விட்டார் என்று தெரிந்தது. பிரசுரகர்த்தரின் ஆட்கள் பாஸ்டன் நகருக்கு ஓடினர். அந்த வியாபாரி பல இடங்களிலிருந்து கொண்டு வந்து மலை மலையாகக் குவித்திருக்கும் உதவாப் பேப்பர்க் குப்பையை ஒவ்வொரு பேப்பராக அலசினார்கள். பலன் பூஜ்யம். அங்கு அந்தப் பிரதி இல்லை. மீண்டும் அவர்கள் அச்சகத்துக்கு வந்தார்கள்.

"சில சமயங்களில் கானெக்டிகட் நகரத்திலிருந்து கடுதாசிக் கூழ் தயாரிக்கும் மில்காரர்கள் இங்கிருந்து கழிவுப் பேப்பர்கள் எடுத்துப் போவார்கள். சமீபத்தில் அவர்கள் இங்கு வந்து போன நினைவிருக்கிறது. அங்கு போய்ப் பாருங்கள்" என்றார் அச்சக உரிமையாளர். பிரசுரகர்த்தர் அங்கும் ஆளனுப்பினார்.

ஆனால் அக் கூழ் தயாரிக்கும் மில் அன்று வேலை செய்ய ஆரம்பித்திருந்தது. அது வரை சேர்ந்திருந்த கழிவுப் பேப்பர்களைப் பிரும்மாண்டமான ராட்சத அலுமினிய அடைப்புகளில் போட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு 'கன்வேயர் பெல்ட்' வழியாக, திராவகக் டேங்கில் தள்ளிக் கொண்டிருந்தார்கள். இயந்திரத்தை நிறுத்தி அந்த ராட்சதக் குழாய்களில் தேடுவது என்பது நடக்கக்கூடிய விஷயமில்லை. பிரசுரகர்த்தரின் ஆட்கள் கடைசி முயற்சியாகத் திராவகக் டேங்கில் கழிவுக் காகிதங்கள் வந்து விழும் இடத்தில் கண்களைத் தீட்டி நின்றார்கள்.

எத்தனையோ குப்பைக் கடுதாசிகள் அந்த ஆசிரியர் உபயோகித்த பேப்பர்போல் இருந்து அவர்களை ஏமாற்றின. ஆனாலும் அவர்கள் முயற்சி வீண் போகவில்லை. கடைசியாக அவர்கள் தேடி வந்த கையெழுத்துப் பிரதியையும், ராட்சதக் குழாய்களிலிருந்து திராவகக் டேங்கில் வந்து விழும் அந்தக் கண்சிமிட்டும் வேளையில் கண்டு பிடித்துக் காப்பாற்றி விட்டார்கள். கணம் தப்பினாலும் அது திராவகக் டேங்கில் விழும். அப்புறம் அது சாம்பல்தான்!

பிரசுரகர்த்தரின் ஆனந்தத்துக்கு அளவே இல்லை. இந்தத் தடவை வெகு ஜாக்கிரதையாக இருந்து புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டார். லட்சக்கணக்கான பிரதிகள் செலவழிந்த அந்தப் புத்தகத்தின் பெயர் 'தந்தையுடன் வாழ்க்கை' (Life with Father) என்பதாகும். எழுதிய ஆசிரியர் கிளாரன்ஸ் டே.

இலக்கியம் எந்த நாட்டிலும் ஒன்றுதான்! ஆனால் இதயம் வித்தியாசப்படுகிறதே !..... அந்தப் பிரசுரகர்த்தர் மாதிரி எத்தனை பேர் இருந்து விடப் போகிறார்கள்!

—மேனு

குறையும் நிறையும்



கோவி. மணிசேகரன்

குடும்பத்தில் ஏற்படும் பிரிவினைப் பிரச்னையே இந்தப் பெண்களால்தான் பெரும்பாலும் வருவதுண்டு. அந்தக் குடும்பத்துக்கும் அப்படித்தான் வந்தது. எத்தனை ஒற்றுமையாக இருந்த குடும்பம் அது!

எதிலுமே அடங்கிப் போகிறவர்தான் பசுபதி. பேருக்கு ஏற்றவாறு பசுமாதிரிதான். பசுவுக்கும் கூடத் தற்காப்புக்கென்று ஆண்டவன் இரண்டு கொம்புகளைக் கொடுத்திருக்கிறான்! பாவம் பசுபதி, அவருக்கு அதுவும் இல்லை.

வயதில் பெரியவர் என்பதனால் மட்டும் அவர் அடங்கிப் போவதில்லை. குணத்திலும் இருபத்திரண்டு காரட் தங்கம்தான்! ஆனால் மனைவி கோமளாம்பாள்? தானும் வாழாமல், பிறரையும் வாழ விடாமல் செய்யும் சில பிறவிகளின் ரகத்தைச் சேர்ந்தவள். குடும்பத்தில் ஒரு சர்வாதிகாரியாய் விளங்க வேண்டும் என்பது அவளுடைய ஆசை!

மைத்துனன் சிவானந்தம் இருக்கிறானே— பசுபதியின் உடன் பிறந்த தம்பியைத்தான் குறிப்பிடுகிறேன் — பெயருக்கேற்ற சிவானந்தம்தான்! எதிலுமே அமைதி; அடக்கம். பசுபதியுடன் பிறக்கப் பரிபூரணத் தகுதி வாய்ந்தவன் என்று பலரும் பேசிக்கொள்வது வழக்கம். அண்ணனிடம் அபாரமான பக்தி விசுவாசமுண்டு. அவனுக்கேற்றவாறு மனைவி அமைந்ததில்தான் ஆச்சரியம்! கமலம் பட்டுப் பூச்சி என்றால் பட்டுப் பூச்சிதான். இப்பேர்ப்பட்ட அமைதியுருவத்தைக் கண்டால் கல்லும் கனிந்து விடுமே! ஆனால் கோமளாம்பாளுக்குக் கனிய வேண்டுமே! ஒரு நாளைக்கு நாற்பது தடவையேனும் கமலத்தைக் கரித்துக் கொட்டாவிட்டால் கோமளத்துக்குக் கொட்டாவியும் வராது; தூக்கமும் பிடிக்காது. அவளுடைய பிறவி அந்த மாதிரியானது.

சிவானந்தம் செய்து வந்த தொழிலில் எவன் எமனாக நுழைந்தானோ வேலை போய் விட்டது! இப்போது அருமை அண்ணியாரின் பரிபாஷைப்படி அவனைச் சொல்ல வேண்டுமானால் 'ஒரு தண்டச் சோற்று ராமன்!'

அவன் மட்டும்தானா? கமலமும்தான்! இந்த லட்சணத்தில் கையிலும் இடுப்பிலுமாக இரண்டு குழந்தைகள். எப்படிச் சமாளிப்பது? ஆண்டவன் வருவாயற்றவர்களுக்குத்தான் அதிகமான குழந்தைகளைக் கொடுத்துச் சோதித்து விடுகிறான்! ஒருவேளை குழந்தைகள் தாம் அவர்களுக்கு நிறைவான செல்வம் என்ற தவறான முடிவைக் கட்டிக் கொண்டிருப்பானோ?

தம்பியைப் பற்றிய கவலை அண்ணார் பசுபதிக்கு இருக்கத்தான் செய்தது. ஆனாலும் அதை அவர் வெளியில் காட்டிக் கொள்வதில்லை. அவர் நல்லவர். நல்லவர்களுக்கே இந்த அனுபவம்தானே!

கோமளாம்பாளின் கோர சொரூபம் நாளுக்கு நாள் அரிவாள் பற்களைக் காட்டத் தொடங்கியது. ஒரு தினத்தில் அது பூதாகாரமான சுவரூபம் எடுக்கவும் செய்தது. மைத்துனர் என்றும் பாராமல், வாயில் வந்தவாறு கன்னாபின்னாவென்று பேசி விட்டாள். சிவானந்தம் சிவனே என்று அத்தனையையும் பொறுமையாக — மிகப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான். அவன் நொந்து கொண்டதெல்லாம் தன்னுடைய தலையெழுத்தை நினைத்துத்தான். ஆனால் கமலா? பட்டுப் பூச்சிக்குக் கோபம் வருமா?

கணவனைப் பழித்துப் பேசிக் கேட்க எந்த மனைவிதான் பொறுப்பாள்? அவள் எப்படித்தான் பிள்ளைப்பூச்சி நிலையிலிருந்து குளவியாக மாறினாளோ! ஆச்சரியம்தான்!

''அக்கா! நீங்க என்னதான் பெரியவங்களாயிருந்தாலும் அவர் உங்கள் மைத்துனர். அவரைக் 'கோயில் மாடு' என்று நீங்கள் குத்திப் பேசுவது தருமமல்ல!''

கோமளத்துக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! ''போடி போ! போல்

வாத தருமத்தைக் கண்டுவிட்டாள்! மான ரோஷமிருந்தால் உன் தாய் வீட்டுக்கு அழைத்துச் சென்று தண்டச் சோறு போட்டுப் பாரு! அப்போது தெரியும்!''

கமலம் என்ன வெற்றுச் சடலமா, கேட்டுக்கொண்டிருக்க? அந்தக் கணமே பயணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைக் கவனிக்கலானாள். சிவானந்தம் எவ்வளவோ எடுத்துக் கூறியும், மறுத்துப் பேசிய திருமதி சிவானந்தத்துக்குத்தான் எங்கிருந்து வந்ததோ அத்தனை உணர்ச்சி! அவள் ஒற்றைக் காலில் நின்றாள். எங்கேனும் சென்று நாலு வீடு இரந்துண்டாயினும் உண்ணலாமேயொழிய இங்கு ஒரு நாழிகைப் பொழுதுகூடத் தங்க முடியாது என்று முடிவாகக் கூறிவிட்டாள்.

இத்தனையையும் கேட்டுக் கொண்டு பசுபதி மரமாகத்தானிருந்தாரே ஒழியப் பதில் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. இந்த விஷயத்தின் காரணமாகத்தான் 'நல்ல அண்ணா' என்று தன்னால் போற்றி வந்தவர் மீது வெறுப்பும் வேதனையும் கண்டான் சிவானந்தம். மனிதன் சாதுவாக இருக்க வேண்டியதுதான். அதற்காக மனைவிக்கு அடிமையாகி விடுவதா?

கையில் பணங்காசில்லாமல் இப்படித் திடீரென்று புறப்பட்டு விட்டோமே என்ற மனக் கவலை சிவானந்தத்தை அரித்தது. எந்த நண்பனிடமாவது கடனாக எட்டு ரூபாய் பெற்றுக் கொண்டால்தான் விழுப்புரத்துக்குப் போய்ச் சேர முடியும்! என்ன செய்வது! யாரிடம் சென்று கடனாகக் கேட்பது? மயிலாப்பூர் நண்பர் வேதாசலத்திடம் தான் செல்ல வேண்டும். எப்படிச் செல்வது? இது முடிகிற காரியம்தானா? பெரியமேடு எங்கே? மயிலாப்பூர் எங்கே? ஒரு பர்லாங்கு தூரம் நடக்கக் கூட ஒரு மணி நேரமாகப் பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டிருக்கும் சோம்பேறிகள் வாழும் நகரமாயிற்றே சென்னை மாநகரம்! அந்த மனிதர்களுள் அவனும் ஒருவன்தானே?

சட்டைப் பையில் ஏதேனும் மறந்தாவது சில்லறை போட்டிருக்கலாமா என்ற நப்பாசை எழுந்தது. அந்த ஆசையின் வெறுமை உணர்வோடு கையை விட்டான். தேன் கொட்டியது போன்ற ஓர் அதிர்ச்சி! கண்களிலும் ஒரு மருட்சி! என்ன வியப்பு! பத்து ரூபாய் நோட்டு காணப்படுகிறதே! இது எப்படிச் சட்டைப் பையில் வந்திருக்க முடியும்? இது என்ன கனவா?

பளிச்சென்று ஒரு நினைவு. ஆமாம்; அண்ணாருடைய வேலையாகத்தான் இது இருக்க முடியும். பையில் பணமில்லாமல் பிள்ளை குட்டிகளை அழைத்துச் சென்று என்ன பாடு படுவானோ என்ற பரிதாப உணர்வோடு அவர்தான் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும். அவர் செய்யாமல் பின் அண்ணியா செய்திருப்பாள்?

மனைவி கமலத்திடம் பெருமையாக இதைப் பற்றிச் சொன்னான் சிவானந்தம். மெச்சத் தகுந்ததுதான். ஆனாலும் கமலம் மெச்சுபவளாக இல்லை. ''ஆமாம். போங்கள்! மனைவியை அடக்காமல் உடன் பிறந்த சகோதரரை வெளியேற்றச் சம்மதித்தவர்தானே? பத்து ரூபாயோடு சனியன் ஒழிந்தது என்று நினைத்திருப்பார்!''

கமலத்தின் மனம் இவ்வாறு நினைத்ததில் குற்றமில்லை என்றே சொல்ல வேண்டும்! எழும்பூர் புகைவண்டி நிலையம் அவர்களை ஏகமனதாக வரவேற்றது.

விழுப்புரத்திலிருந்த மாமியார் வீட்டிலும் அதிக நாட்கள் தங்கி மதிப்பை இழக்கா வண்ணம் ஒரு வழியைத் தேடிக் கொண்டான் சிவானந்தம். உடன் பிறந்தே வியாதி கொல்லும்போது — கடன்பட்ட நிலைக்கும் — நெஞ்சுக்கும்தானா அது கவலைப்படப் போகிறது? சென்னை மயிலாப்பூர் நண்பன் வேதாசலத்துக்குக் கடிதம் எழுதி, அவன் மூலமாகவே பஸ் கண்டக்டர் வேலைக்கு முயன்றான். அதற்காகச் சென்னைக்குத் தனியாகவே வந்து ஆறு வாரம் பயிற்சியும் பெற்றான். தேர்வும் கண்டான். லைசென்ஸும் கிடைத்து விட்டது. ஒரு பெரிய மனிதரின் உதவியின் மூலம் சென்னை அரசாங்க பஸ் டிரான்ஸ்போர்டில் வேலைக்கு அமர்ந்தும் விட்டான். குடும்பம் சென்னைக்கு வந்தது. ஆயிற்று இரண்டு வருடங்கள்! அண்ணா எப்படி இருக்கிறார்? அவருடைய குடும்பம் எப்படி இருக்கிறது என்பது போன்ற விஷயங்கள் அடிக்கடி அவனுடைய பாச நெஞ்சில் எழுந்து முட்டி மோதினாலும் அறிந்து கொள்ள அவனுடைய வெறுமை உணர்வு முயல முன்வரவில்லை. அண்ணாவுக்கு என்ன குறை இருக்கப் போகிறது? சொந்த வீடு; நல்ல வசதி; கவலைப்படக் காரணமே இல்லை.

அன்று பகல் 'முறை' சிவானந்தத்துக்கு: 15ம் எண்ணுள்ள பஸ் ரூட்டில்தான் அவன் மாற்றல் பெற்றிருந்தான். எல்லாக் கண்டக்டர்களைப் போலிராமல் அவன் சற்று வேறு விதமாகக் காணப்பட்டான். ஏறும், இறங்கும் பிரயாணிகளை அவன் பண்பாகவே, மரியாதை நிறைந்த சொற்களில் — 'நீங்கள் போங்கள்' என்ற முறையில் அழைப்புக் கொடுத்தே நடந்து கொண்டான்.

கூட்டம் அதிகம். டிக்கட் கொடுப்பதும் சில்லறை பெறுவதும், கொடுப்பதுமாகச் சுறுசுறுப்பாகக் காணப்பட்டான். அவன் இன்னும் அசல் கண்டக்டராக மாறவில்லை; மாறவும் மனமில்லை.

ஒவ்வொருவரிடமும் டிக்கட் கொடுத்து வந்தவன் ஓரிடத்தில் வந்ததும் அப்படியே சிலையாக நின்று விட்டான். முன்னிருக்கைப் பக்கமாக அண்ணார் பசுபதி அமர்ந்திருந்தார். பின்புறமாக நின்று கவனித்த சிவானந்தத்துக்கு என்னவோ போலிருந்தது.

பசுபதியும் முதலில் கவனித்து விட்டார். வண்டியில் 'டிக்கட் குரல்' கொடுப்பவன் தம்பி என்பதைக் கண்டும், எழுந்திருக்கவும் முடியாமல், இறங்கவும் முடியாமல் போய் விட்டது. பஸ் மூன்று ஸ்டேஜ்களைத் தாண்டி விட்டது. எப்படி இறங்க முடியும்? சி. எப். எஸ். ஸ்டாப்பிங்கில் பஸ் நின்றுகொண்டிருந்தது.

இந்நாள்வரை தம்பி எந்த நிலையில் இருக்கிறான் என்ற கவலையிலிருந்த அவருக்குச் சற்று மன ஆறுதல் கிடைத்தது. எப்படியோ அவன் சுகமாக இருக்கட்டும் என்றும் அந்த நல்ல உள்ளம் வாழ்த்திக்

கொண்டது. ஆனாலும் தம்பி வந்து டிக்கட் கொடுக்க முனையும்போது பேசியாகவேண்டுமே! எப்படிப் பேசுவது? எந்த முகத்துடன் அவனிடம் பேசுவது?

சிவானந்தனும் இப்படியே நினைத்தான். கடமையைச் செய்ய வேண்டும். ஆனால் மனமோ எப்படிச் சென்று எதிர் நின்று பேசுவது என்று மனப் பாடத்தைப் புரட்டியது. நோமாலியிடமே விசிலைக் கொடுத்தான். வண்டியும் புறப்பட்டு விட்டது. ஐயோ! எவனாவது 'செக்கிங்' ஏறிவிட்டால் நிலைமை மோசமாகி விடுமே! எப்படிச் சமாளிப்பது?

பகபதியும் டிக்கட்டைக் கேட்டு வாங்கு பவராகக் காணப்படவில்லை. அவரும் விடாப் பிடியாகவே அமர்ந்திருந்தார். நிமிஷத்துக்கு நிமிஷம் சிவானந்தத்துக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. பஸ் மூர் மார்க்கெட்டை நெருங் கிக்கொண்டிருந்தது. அவர்களுடைய இந்த மனப் போராட்டத்துக்கு இடையில் மூர் மார்க்கெட் ஸ்டாப்பிங்கில் செக்கிங் இன்ஸ் பெக்டர் ஏறிவிட வேண்டுமா?

இருவருடைய இதயங்களும் மருந்து வைத்து வெடிக்க மலைப் பாறைகளாய்ச் சிதறின. பகபதியால் ஓடிச் சென்று இறங்கி விடவும் முடியவில்லை. சிவானந்தத்தால் நாடிச் சென்று உடன் டிக்கட்டை—ஏற்கனவே என் தவறால் கிழித்து வைத்திருக்க டிக்கட் டைக் கொடுத்துவிடவும் முடியவில்லை.

பெரியமேடு ஸ்டாப்பிங் வந்ததும் பகபதி அவசர அவசரமாக எழுந்து இறங்கச் சென் ளூர். "சார்? டிக்கட்டைக் கொடுத்துவிட்டு இறங்குகிறீர்களா?" — செக்கிங் இன்ஸ்பெக் டர் கேட்டார். பகபதி மலையாகச் சமைந்து நின்றூர். அதற்குள் அரண்டு மருண்டு அங்கு விரைந்து வந்தான் சிவானந்தம். அவனுடைய உடல் முழுதும் வியர்த்து நடுங்கியது.

"என்ன சார்! டிக்கட் வாங்கவில்லையா?"

இன்ஸ்பெக்டர் திடமாகவே கேட்டார். பக பதி பச்சைக் குழந்தையாக விழித்தார்.

"கண்டக்டர்! இந்த மனிதர் டிக்கட் வாங்காமல் எங்கிருந்து ஏறி வருகிறூர்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"பாரிஸிலிருந்து வருகிறூர் சார்! டிக்கட் வாங்கி யிருக்கிறூர். ஏதோ மனக் கவலை யுடையவராகத் தெரிகிறூர்! டிக்கட்டை எங்கேனும் விட்டுவிட்டாரோ என்னவோ!" சிவானந்தம் சாமர்த்தியமாகச் சொன்னான்.

"ஏன் சார்! நிஜமாகவா?"

செக்கிங் இன்ஸ்பெக்டர் கேட்ட கேள் விக்கு மீண்டும் அதே விழிப்பை விழித்தார் பகபதி. இன்ஸ்பெக்டருக்கு அது பரிதாப மாக இருந்தது. சிவானந்தத்துக்குப் பயங்கர மாக இருந்தது. 'ஆமாம்' என்று சொல்லித் தொலைவதற்கு என்னவாம்?

இன்ஸ்பெக்டர் உற்றுக் கவனித்தார். பெரிய மனிதரைப் போலக் காணப்பட்ட பகபதியின் மனம் சோர்ந்திருந்தது. 'பாவம், ஏதோ, டிராஜடி' என்றே மனத்துக்குள் முனகிக் கொண்டார்.

"சார்! இவர் ஏதோ மனக் கவலையில் இருக்கிறூர். டிக்கட் வாங்கினர். அதுடன் என்னிடத்தில் அவர் கொடுத்த பத்து ரூபாய் நோட்டைக் கூட மறந்திருக்கிறூர். இறங்கும் போது கேட்டு வாங்க வேண்டும் என்ற நினைவு கூட எழவில்லை இவருக்கு! என்னிட மும் சில்லறை இல்லே" என்று ஒரு போடு போட்டான் சிவானந்தம் சமயோசிதமாக! சில்லறையை அவன் கையால் எப்படிக் கொடுப்பான்?

"சார்! உங்களிடம் பத்து ரூபாய் நோட் டுக்குச் சில்லறை இருக்கிறதா சார்?"— இன்ஸ்பெக்டரையே கேட்டுவிட்டான் சிவா னந்தம். போற்றத் தகுந்ததுதான். உடன் பத்து ரூபாய் நோட்டை எடுத்தும் இன்ஸ் பெக்டரிடம் கொடுத்துவிட்டான். இன்ஸ் பெக்டர் இப்போது நிலைமையைப் பரிபூரண மாக நம்பி விட்டார்.

இன்ஸ்பெக்டர் சில்லறை இல்லையென்று தலையசைத்தார். நேரமும் ஆகிக் கொண்டி ருக்கிறது. பஸ்ஸையும் போகவிட வேண்டும். என்ன செய்வது?


"கண்டக்டர்! இந்தப் பத்து ரூபாயை இவரிடமே கொடுத்துவிடுகிறேன். பாவம்! ஏதோ டிராஜடி நிலையில் காணப்படுகிறூர். இவருடைய பஸ் கட்டணத்தை வேண்டு மானுல் நானே கொடுத்து விடுகிறேன்!" என்று கூறிய இன்ஸ்பெக்டர் பத்து ரூபாய் நோட்டைப் பகபதியிடம் திணித்தார். சிவானந்தமும், "வேண்டாம், சார்! நானே அந்தக் கட்டணத்தைக் கொடுத்துவிடுகிறேன். பார்ப்பதற்கு என்னுடைய அண்ணன் போல் இருக்கிறூர். இதைக் கூடவா செய்யக் கூடாது?" அடுத்துக் கொஞ்சமும் தாமதி யாமல் இரட்டை விசில் கொடுத்தான். பஸ் ஸும் கரிய புகையைக் கொப்பளித்துக்கொண்டு பூதாகாரமாக அலறிப் புடைத்து விரைந்தது.

கடன் பெற்ற பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுத்த நிறைவு சிவானந்தத்துக்கு; பெற்று விட்ட குறைவு பகபதிக்கு! இருக்காதா?



அமில அஜீரணம் நெஞ்செரிச்சல், வயிற்றுக் கோளாறு இவைகளிலிருந்து

அதிசீக்கிரமான சமனம் பெற



பிலிப்ஸ்

தொடக்கத்திலிருந்தேயுள்ள

மில்க் ஆப் மக்னீஷியா

டேப்லெட்டுகள்

4 எண்ணம் கொண்ட பாக்கெட்டுக்கு 20 ந.ப.

பிலிப்ஸ் டேப்லெட்டுகள், உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷ்யா கொண்டதும் குடும்பத்தில் எல்லோருக்கும் சவுகரியமாகவும் சீக்கிரமாகவும் சமனம் தரவும் ஏற்றது.

அமில அஜீரணம் உண்டாகும்போது சில பிலிப்ஸ் டேப்லெட்டுகளை வாயில் போட்டு மென்று சாப்பிடவும். அவை நெஞ்செரிச்சலையும் வாயுவினால் ஏற்படும் வயிறு உப்புதலையும் தணிக்கிறது. மேலும் வயிற்றை சரிப்படுத்தி கவலைத்தில் உண்டாகும் துர்க்கந்தத்தையும் அகற்றுகிறது

குடும்பத்தில் எல்லோருக்கும் உபயோகத்திற்காக 75, 150 டேப்லெட்டுகள் கொண்ட பாட்டில்களில் கிடைக்கும் இன்றே பரீக்ஷித்துப் பாருங்கள்.

இப்பொழுது

அதிக பாது காப்பிற்காக அலுமினியம் போயில் பாக்கெட்டுகளில் கிடைக்கும்,

உபயோகத்திற்காக ரஜிஸ்டர் செய்து தயாரிப்பவர்கள்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மாஜ்யு) பிரைவேட் லிட்.,

துக்கடா



ஓர் ஐந்து வயது சிறுவன் சிலேட்டுப் பலகையில் ஏதோ அழித்து அழித்து எழுதிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த தாத்தா, "என்னடா, ரகு! ரொம்ப நாழியா ஏதோ அழித்து அழித்துச் சிரமப்பட்டு வரைந்து கொண்டிருக்கிறாயே. என்ன வரைய அப்படிப் பிரயாசைப்படுகிறாய்?" என்று கேட்டார்.

"ஆண்டவன் உருவத்தை எழுதுகிறேன்!" என்றான் ரகு. "ஆண்டவனுக்கு உருவம் கிடையாது. அவன் எந்த உருவத்தில் இருக்கிறான் என்பது யாருக்குமே தெரியாதே! எப்படி எழுதுவாய்?" என்றார் தாத்தா.

"நான் எழுதி முடித்தவுடன் தெரியும்" என்று நிச்சயமாகச் சொன்னான் அந்தச் சிறு பையன் ரகு.

ஃ ஃ ஃ

ஸ்வீடன் சரித்திரத்தில் தண்டனைகளெல்லாம் மிகவும் குறைவாம். சரித்திரத்தில் ஒரு பணக்கார அம்மாளைக் கொன்று விட்டதாகவும் பத்து லட்சம் பெறுமானமுள்ள அவள் நகைகளை வெள்ளையர் திருடிக் கொண்டதாகவும் இருவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. கொலைக் குற்றத்துக்காக ஒருவருக்கு ஏழு வருஷம் சிறைத் தண்டனையும் திருட்டுக் குற்றத்துக்காக மற்றவருக்கு நாலு வருஷச் சிறைத் தண்டனையுமே அளிக்கப்பட்டன. நகைகளைத் திருடியவர் வழக்கு நடந்து முடிய ஆன காலம் இரண்டு வருஷ காலம் சிறைச் சாலையிலேயே கழித்தார். இதைக் கழித்து விட்டால் மீதம் இரண்டு வருஷங்கள் அவர் சிறையிலிருந்தால் போதும் என்று கூறி விட்டது ஸ்வீடிஷ் நீதி.

ஃ ஃ ஃ

அறிவாளியான மந்திரி யார்?

பெரு ஆங்காசாரியார் அளிக்கும் விடை இதோ:

வரி விதிக்காமலே அரசாங்கத்து நிதியை எவன் அதிகமாக்குகிறானோ, யாரையும் இம்சிக்காமலே எவன் நாட்டைக் காக்கிறானோ, அவனே மந்திரிகளில் எல்லாம் அறிவாளியான மந்திரி.

ஃ ஃ ஃ

பஸ் கண்டக்டர் பிரயாணம் செய்யும் எட்டு வயதுச் சிறுவனிடம் காசுக்காகக் கைநீட்டினார். பையன் அங்குமிங்கும் குனிந்து சட்டைப் பையைத் தடவுவதும் பெஞ்சுக்கடியில் குனிவதுமாக இருந்தான்.

"என்னடா பையா, காசு இல்லையா?" என்றார் கண்டக்டர்.

"எட்டணாவாக இருந்தது அது தொலைந்து விட்டது!" என்று நிஜம்போல் ஒரு போடு போட்டான். கண்டக்டர் மனம் இரங்கி, "பரவாயில்லை, இந்தா பத்து பைசா டிக்கட் வாங்கிக்கொள்" என்று டிக்கட்டை அவனிடம் கொடுத்தார். டிக்கட்டை வாங்கிக் கொண்டு கையை இன்னும் நீட்டியவாறு இருந்தான் பையன்.

"அதான் டிக்கட் கொடுத்துவிட்டேனே இன்னும் ஏன் கைநீட்டுகிறாய்?" என்றார் கண்டக்டர்.

"எட்டணாவில் டிக்கட் போகச் சில்லறை பாக்கி கொடுக்கவில்லையே!" என்றான் அந்தப் பையன்.

ஃ ஃ ஃ

மனிதன் சந்தோஷமாக இருக்க ஐந்து விஷயங்கள் அவனுக்கு அவசியம். 1. பணம் 2. பணம் 3. பணம் 4. பணம் . ஐந்து என்னவென்பதை நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரிந்துவிடும். (5. பணம்.)

ஃ ஃ ஃ

மறக்கக்கூடாத மணிமொழிகள்

தவறை மனிதன் நிச்சயம் மன்னிப்பான் அது தன்னுடைய தவறாக இருந்தால்.

ஃ ஃ ஃ

சங்கீதக் கச்சேரி செய்யும் வித்வானுக்கு ஒரு வார்த்தை: ரசிகக் கூட்டம் கலைந்து ஹாலைக் காலி செய்யுமுன் நீங்கள் மேடையைக் காலி செய்து விடுங்கள்.

ஃ ஃ ஃ

ஒரு மடையனோடு நீங்கள் வாக்குவாதம் செய்யுமுன் அவனும் அதே காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறானா என்பதை நீங்கள் பார்ப்பது உசிதம்.

ஃ ஃ ஃ

கவிஞர்களுக்குக் கற்பனை மிகவும் அவசியம். நான் எழுதுபவைகளை எல்லோரும் விழுந்து விழுந்து படிப்பார்கள் என்பதே அவர்களுடைய கற்பனை.

ஃ ஃ ஃ

நம் முதுகுக்குப் பின்னாலே பேசுகிறவர்களைக் கண்டாலே நமக்குப் பிடிப்பதில்லை; முக்கியமாகச் சினிமாத் தியேட்டரில்.

ஃ ஃ ஃ

"வானம் கருத்தால் மழை வரும் என்பது தெரியும்."

"அதே போல் வாழைப்பழத் தோல் கீழே கிடந்தால் யாரோ வழுக்கி விழப் போவதும் தெரியும்."


ஃ ஃ ஃ

கால் இல்லாத முடவனுக்கு ஒரு நயா பைசா நாணயத்தைப் போட்ட கருணை உள்ள அம்மையார் மொழிந்தார். "அப்பா! கால் இல்லை என்று துக்கப் படாதே. கண் இல்லாமல் இருந்தால் எவ்வளவு கஷ்டம்!" என்றாள்.



"கஷ்டம் தான் அம்மா! நீங்க இப்ப போட்டது செல்லாத பைசா என்று கண்ணில்லாமலிருந்தால் கண்டு பிடிக்க முடியாதே."

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



மகிழ்ந்து
விளையாடும் நேரம்—
உட்வர்ட்ஸுக்கு நன்றி



மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும்
பல்முளைக்கும்போதுள்ள உபாதை
களிலிருந்து உடனடி நிவாரணம்பெற
உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்
உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்
மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Alyars ATC-486-TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

